பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-124

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)



| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர் : 18<br>Vol : 18 | இதழ் : 06<br>Issue : 06 | www.ncbhpublisher.in | செப்டம்பர் 2025<br>September 2025 | விலை<br>Price } ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription } ₹ 540/- |







12.08.2025 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சித்துறை வாயிலாக அண்ணல் அம்பேத்கரின் தமிழாக்கங்கள் 17 தொகுதிகளை வெளியிட்டார். இந்த நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குனர் ந. அருள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் நெறியாளுகை உறுப்பினர்கள் பேராசிரியர் வீ. அரசு, அ. மதிவாணன், என்.சி.பி.எச். விற்பனை ஆலோசகர் எஸ்.சண்முகநாதன், பொதுமேலாளர் (விற்பனை) ஆ.சிவக்குமார், இணைப் பதிப்பாசிரியர் மா.சிவகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்




05.08.2025 அன்று ஈரோடு புத்தகத் திருவிழாவில் நியூ செஞ்சுரியின் 50 நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் நந்தா கல்வி நிறுனங்களின் தாளாளர் வி. சண்முகன், என்.சி.பி.எச். தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன், கல்லூரி முதல்வர் முனைவர் வே.திருக்குமரன், எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன், கணியன்பாலன், என்.சி.பி.எச். விற்பனை ஆலோசகர் எஸ்.சண்முகநாதன், பொதுமேலாளர் (விற்பனை) ஆ.சிவக்குமார், முதுநிலை விற்பனை சீரமைப்பாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, மண்டல மேலாளர் எஸ். முத்துக்கிருஷ்ணன், கிளை மேலாளர் ஆர்.ரங்கராஜன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 18 இதழ் - 06 - செப்டம்பர் 2025*

ஆசிரியர்

**த. ஸ்டாலின் குணசேகரன்**



ஆசிரியர் குழு

*க. சந்தானம்*
*பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்*
*முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்*
*முனைவர் ந. முத்துமோகன்*
*முனைவர் மு. இராமசுவாமி*
*முனைவர் நா. இராமச்சந்திரன்*
*முனைவர் பா. ஆனந்தகுமார்*
*முனைவர் ஞா. ஸ்டீபன்*
*ப. கு. ராஜன்*
*முனைவர் இரா. அறவேந்தன்*
*முனைவர் இரா. காமராசு*
*முனைவர் உ. அலிபாவா*

இதழ் வடிவமைப்பு

***கா. குணசேகரன்***



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail. com
இணைய தள முகவரி: www. ncbhpublisher. in

தனி இதழ் ₹ 45. 00. ஆண்டு சந்தா ₹ 540. 00
மாணவர்களுக்கு ₹ 500. 00
ஆயுள் சந்தா ₹ 5400. 00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050. 00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c. No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட். ,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


உள்ளே...


1 விழிப்புணர்வு இல்லாமல் விற்பனையில்லை
ஆசிரியர் குழு .............. 04

2 படித்துப் பாருங்கேளன்
மா. சிவகுமார் .............. 06

3 அண்ணல் அம்பேத்கர்
வீ.அரசு.............. 13

4 உலகத் தலைவர்களை தமிழர்களுக்கு அறிமுகப்படுத்திய வெ.சாமிநாதசர்மா
டாக்டர் சு.நரேந்திரன் .............. 23

5 வடமொழி மேலாதிக்கத்தை தமிழகம் ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணம்
முனைவர் ஆ.கார்த்திகேயன்.............. 27

6 அங்கவை சங்கவை வரலாற்றுக் குழப்பங்களும் தீர்வும்
முனைவர் கி.சிவா.............. 30

7 தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களில் கூதிர்காலமும் திணையியல் பின்புலமும்
கா. விக்னேஷ்.............. 34

8 தமிழில் நவீனத் திறனாய்வுக் கோட்பாட்டு வாசிப்பில் புதுப் பாய்ச்சல்
முனைவர் பி. பாலசுப்பிரமணியன்.............. 40

9 பெண் பெண்ணியம் பெண்ணிய அரசியல் குறித்த மீள் வரையறைக்கான உரையாடல்
முனைவர் மு. ஏழுமலை .............. 45

10 தமிழக கம்யூனிச இயக்கமும் தோழர்களும்
முனைவர். சி. இளங்கோ.............. 48

11 கி.ராஜநாராயணன் சிறுகதைகளில் மையமாக்கப்பட்ட விளிம்பினர் பின்நவீன நோக்கு
ரெ.காயத்ரி & முனைவர் இரா.பூங்கோதை .............. 54

12 சமூக யதார்த்தக் கதைகள்
இளையவன் சிவா .............. 61

13 பெருங்கதை கட்டமைக்கும் திருமணச் சடங்குகள்
ச.முத்துச்செல்வி.............. 63

14 திருக்குறள் நபிமொழி மாலை காட்டும் பெண்
முனைவர் ம. நூர்ஜஹான் & ஆ. யாஸ்மின்.............. 68

15 Reflection of 'Socialism' in Tho. Paramasivan and A.Sivasubramanian's: Panpatin valvial
Dr.S.Balasundari .............. 72



# விழிப்புணர்வு இல்லாமல் விற்பனையில்லை

21ஆம் ஆண்டாக ஈரோடு புத்தகத் திருவிழா ஆகஸ்ட் 1 முதல் 12 வரை பன்னிரண்டு நாள்களுக்கு நடைபெற்று முடிந்துள்ளது. நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் ஐம்பது புதிய நூல்களை இப்புத்தகத் திருவிழாவிலுள்ள புத்தக வெளியீட்டுச் சிறப்பரங்கத்தில் வெளியிட்டுள்ளது. மேலும் சில பதிப்பகங்களும், நூலாசிரியர்களும் தங்களது புதிய நூல்களை வெளியிட்டுள்ளனர். ‘உங்கள் நூலகம்’ இதழ் ஈரோடு புத்தகத் திருவிழாவை முன்னிட்டு பல ஆண்டுகளாகவே ஆண்டுதோறும் சிறப்பிதழ் வெளியிட்டு வருகிறது. இந்த ஆண்டின் ‘உங்கள் நூலகம்’ சிறப்பிதழ் மாலை நேர சிந்தனை அரங்க நிகழ்வில் தனித்துவத்துடன் வெளியிடப்பட்டது.

ஈரோடு புத்தகத்திருவிழா தொடக்க ஆண்டிலிருந்தே புத்தகச் சந்தையாக மட்டுமல்லாது புத்தக வாசிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வாகவும் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகிறது.

‘இல்லந்தோறும் நூலகம்’ என்ற முழக்கத்தை தாரக மந்திரமாக முன்வைத்து கடந்த இருபத்தொரு ஆண்டுகளாக ஈரோடு புத்தகத் திருவிழாவை முன்னிட்டு இடைவிடாது வலுவான பல்வகைப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக...

இந்த ஆண்டு புதிதாக ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள ச.கந்தசாமி ஐஏஎஸ் அவர்கள் புத்தகத் திருவிழாவின் தொடக்க நாளில் காலை 9.30 மணியிலிருந்து 9.51 மணி வரை 21 நிமிடங்கள் அனைத்துப் பள்ளி, கல்லூரிகளிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் வகுப்பறைகளிலோ, மரத்தடிகளிலோ அல்லது தங்களுக்குப் பிடித்தமான இடங்களிலோ தனித்தனியாகவோ கூட்டமாகவோ அமர்ந்து பாடப் புத்தகங்களல்லாமல் பொதுப் புத்தகம் ஒன்றை வாசிக்க வேண்டுமென சுற்றறிக்கை அனுப்பியிருந்தார்.

மாவட்டம் முழுவதும் சுமார் இரண்டு லட்சம் மாணவர்களும் பல்லாயிரம் ஆசிரியர்களும் இவ்வாசிப்பு இயக்கத்தில் பங்கேற்றனர். சமூக ஆர்வலர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் என அனைவரும் அந்தந்தப் பகுதியிலுள்ள கல்வி நிலையங்களில் நடைபெறும் வாசிப்பு இயக்கத்தில் பங்கேற்கலாம் எனவும் வேண்டுகோள் விட்டிருந்தார். அத்தகையோர் பலரும் ஆங்காங்கு பங்கேற்றிருந்தனர்.



21ஆம் ஆண்டாக நடைபெறவுள்ள புத்தகத் திருவிழாவை அனைவருக்கும் நினைவூட்டும் விதத்தில்தான் 21 நிமிடங்கள் வாசிப்பு எனக் குறிப்பிட்டிருந்தார்.

அத்தோடு புத்தகத் திருவிழா நடைபெறுகிற பன்னிரண்டு நாள்களும் மாவட்டம் முழுவதும் புத்தகங்களைப் பற்றியும், வாசிப்பு குறித்தும் அனைவராலும் பரவலாகப் பேசப்பட வேண்டும், விவாதிக்கப்பட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்திருந்தார். மேலும் அவர் எழுதிய நூல் ஒன்றையும் எளிமையாக அந்நூல் வெளியீட்டு அரங்கில் வெளியிட்டார்.



தமிழகத்திலுள்ள பல மாவட்டங்களில் புத்தக வாசிப்பு சார்ந்த விழிப்புணர்வு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதை உணரமுடிகிறது.

புத்தக விற்பனை சிறப்பான விதத்தில் இருந்தால் மட்டும்தான் பதிப்பகங்களும், புத்தக விற்பனையகங்களும் இன்றைய பதிப்புலகச் சவால்களை எதிர்கொள்ள இயலும். அதிக விற்பனையாகிற போதுதானே அதிகமான அடுத்தடுத்த தலைமுறையினர் கரங்களில் நல்ல நல்ல நூல்கள் சென்றடைய வழி பிறக்கும்.

விற்பனை என்பது மையப்புள்ளியாக இருப்பினும் விழிப்புணர்வு இல்லாமல் விற்பனை சாத்தியமில்லை. புத்தகத் திருவிழாக்கள், பதிப்பகங்கள் தங்கள் கையில் வைத்திருக்கிற – தேங்கிக் கிடக்கிற – சரக்குகளைக் காலி செய்யும் இடமல்ல. புத்தம் புதிய நூல்களை, மக்களுக்கு அறிவையும் ஆற்றலையும் ஆளுமையையும் அள்ளி அள்ளித் தருகிற அரிய நூல்களை அழகிய வடிவத்தில் புதிது புதிதாக அச்சடித்து மக்களுக்கு மகிழ்வுடன் வழங்கும் இடங்களே புத்தகத் திருவிழாக்கள்.



இத்தகைய புத்தகத் திருவிழாக்கள் சமூக முன்னேற்றத்திற்கும் மாற்றத்திற்கும் அடித்தளமிடுகிற அரிய நிகழ்வாக அமைய வேண்டும். அவை ஒரு சடங்காகவோ சம்பிரதாயமாகவோ நிகழாமல் சமூக உணர்வுடனும் உயிரோட்டத்துடனும் நடைபெறுதல் வேண்டும்.

●


**ஆசிரியர் குழு**

## படித்துப் பாருங்களேன்...

# சீனா
# ஏகாதிபத்திய நாடா? ஏகாதிபத்தியத்தைத் தகர்க்கும் சக்தியா?

### 21 ஆம் நூற்றாண்டு உலகில் சீனாவின் வகிபாகம் பற்றி

(WHY THE WORLD NEEDS CHINA
Development, Environmentalism,
Conflict Resolution & Common Prosperity
KYLE FERRANA)




ஏகாதிபத்தியத்தின் கூறுகளைக் கொண்டுள்ள ஒரு பொருளாதாரம் ஏகாதிபத்தியத்தைத் தகர்ப்பதாக இருக்க முடியுமா? பொதுவுடைமையை இலட்சியமாகக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சியில் தனியார் முதலாளிகளை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள முடியுமா?

1979இல் சீனாவின் **சீர்திருத்தம் – திறந்து விடுதல்** கொள்கைகளைத் தொடர்ந்து இந்தியாவிலும் மேற்குலகிலும் செயல்படும் பல மார்க்சிய லெனினியக் குழுக்கள் சீனா முதலாளித்துவப் பாதைக்குத் திரும்பி விட்டது என்று முடிவு செய்தன.

2013இல் சீனா, அயல்நாடுகளில் சாலைகள், இருப்புப் பாதைகள், துறைமுகங்கள் முதலிய கட்டுமானங்களை உருவாக்கும் பெல்ட்-ரோட் முன்முயற்சியைத் (Belt Road Initiative) தொடங்கியது. சீன அரசு நிறுவனங்கள் பின்தங்கிய ஆப்பிரிக்காவிலும் ஆசிய நாடுகளிலும் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் பெருமளவு முதலீடுகளைச் செய்யத் தொடங்கின. இதைத் தொடர்ந்து, "மூலதனத்தை ஏற்றுமதி செய்யும் நாடு என்ற வகையில் சீனா ஏகாதிபத்திய நாடாக மாறி விட்டதா?" என்று கேள்வி எழுப்பப்பட்டு, அதற்கு ஆம் என்று பதில் அளிக்கப்படுகிறது.

**சீனா ஓர் ஏகாதிபத்திய நாடா? கருதுதல்களும் ஆதாரங்களும்** என்ற தலைப்பில் என்.பி.டர்னர் என்பவர் எழுதிய நூல் இதனை முழுமையாக தொகுத்து முன்வைக்கிறது. அந்த நூல் 2015 ஆம் ஆண்டு வெளியானது.



**மா. சிவகுமார்**

ஏகபோகங்களின் உருவாக்கம், வங்கி மூலதனமும் தொழில்துறை மூலதனமும் இணைந்து நிதி மூலதனத்தின் உருவாக்கம், பொருட்களின் ஏற்றுமதியிலிருந்து வேறுபட்ட மூலதன ஏற்றுமதி, உலகத்தைத்

தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளும் பன்னாட்டு ஏகபோக முதலாளித்துவக் கூட்டுகளின் உருவாக்கம், மிகப்பெரிய முதலாளித்துவ நாடுகளுக்கிடையே ஒட்டுமொத்த உலகமும் பங்கிடப்படுதல் என்ற லெனினின் ஏகாதிபத்தியம் பற்றிய கோட்பாட்டைப் பயன்படுத்தி இந்த முடிவு நியாயப்படுத்தப்படுகிறது.

## கைலே ஃபெர்ரனா – நூல், நூலாசிரியர் பற்றி

இன்றைய உலகில் சீனா வகிக்கும் பாத்திரம் என்ன? அது ஓர் ஏகாதிபத்திய நாடாக ஆப்பிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சுரண்டுகிறதா? அப்படிச் சுரண்டினால் அதன் பலன்களும் சீனாவின் வியத்தகு பொருளாதார வளர்ச்சியின் பலன்களும் யாரைச் சென்றடைகின்றன? சீனாவில் அரசியல் அதிகாரம் யார் கையில் உள்ளது? முதலாளித்துவ வர்க்கத்தின் கையிலா அல்லது பாட்டாளி வர்க்கத்தின் கையிலா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்கிறது **உலகிற்கு சீனா ஏன் தேவை – வளர்ச்சி, சூழலியல், தகராறு தீர்ப்பு, பொதுவான வளம்** என்ற கைலே ஃபெர்ரானா எழுதிய நூல்.

கைலே ஃபெர்ரானா, அமெரிக்காவின் ஒரிகன் மாநிலத்தில் உள்ள போர்ட்லாந்து நகரத்தைச் சேர்ந்தவர்; எழுத்தாளர், மென்பொருள் பொறியாளர், வாடகைதாரர் அமைப்பாளர்.

தொழிலாளர்களை அமைப்பாக்குவதைப் போல வாடகைக்குக் குடியிருப்பவர்களை அமைப்பாக்கும் பணியில் அவர் ஈடுபடுகிறார். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது போல வாடகைதாரர்கள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி வாடகை கொடுப்பதை நிறுத்தி வைத்துப் போராடுகின்றனர்.

அமெரிக்காவில் வீடற்றவர்களின் எண்ணிக்கை 6.5 இலட்சமாக உள்ளது. 6.3 இலட்சம் மக்கள் தொகை கொண்ட போர்ட்லாந்தில் மட்டுமே 4000 முதல் 5000 வீடற்ற மக்கள் உள்ளனர். அதே நேரம், 2.1 கோடி மக்கள் தொகை கொண்ட சீனாவின் பெய்ஜிங் நகரத்தில் வீடற்றவர்களின் எண்ணிக்கை சில நூறு என்று மேற்கத்திய பத்திரிகையான எகனாமிஸ்ட் 2019இல் செய்தி வெளியிட்டிருந்தது. இது தனது கவனத்தை ஈர்த்ததாக கைலே ஃபெர்ரனா பதிவு செய்கிறார்.



மேலும், இன்றைய உலக அரசியலில் சீனா தவிர்க்க முடியாத ஒரு பெரிய நாடாக உள்ளது. 193 நாடுகளில் 120 நாடுகளின் முதன்மை வணிகப் பங்காளியாக உள்ளது. சந்தைச் செலாவணி விகிதங்களில் கணக்கிடும்போது அமெரிக்காவுக்கு ($26.94 இலட்சம் கோடி) அடுத்தபடியாக இரண்டாவது பெரிய பொருளாதாரமாக ($17.70 இலட்சம் கோடி) உள்ளது. வாங்கும் திறன் அடிப்படையில் கணக்கிடும்போது ஏற்கனவே உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாக ($32.89 இலட்சம் கோடி) ஆகி விட்டிருக்கிறது.

குறிப்பாக, மின்சார வாகன உற்பத்தியிலும் பயன்பாட்டிலும், வாகன உற்பத்தித் துறையில் முன்னணி வகித்த அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் நாடுகளை முந்தியிருக்கிறது, சீனா. இந்த நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் ஜப்பானின் டொயோடா நிறுவனம் பிரியஸ் என்ற கலப்பு மின்சார வாகனம் ஒன்றை முதன்முதலாக பன்னாட்டுச் சந்தையில் அறிமுகப்படுத்தியது. ஆனால், உலகின் மிகப்பெரிய அமெரிக்கச் சந்தையில் மின்சார வாகனங்களின் பயன்பாடு மிகவும் மெதுவாகவே அதிகரித்தது. 2021 இல் அமெரிக்காவில் விற்கப்பட்ட வாகனங்களில் 5% மட்டுமே மின்சார வாகனங்களாக இருந்தன. அதாவது, சுமார் 5 இலட்சம் மின்சார வாகனங்கள் விற்கப்பட்டன. சீனாவில், 2021 ஆம் ஆண்டில் மொத்த வாகன விற்பனையில் 16% அதாவது 30 இலட்சத்துக்கும் அதிகம் மின்சார வாகனங்கள்.

இன்றைக்கு உலக மின்சார வாகனங்கள் உற்பத்தியில் 70% க்கும் அதிகமாக சீனாவில் நடைபெறுகிறது. 2024 ஆம் ஆண்டில் உலக அளவில் 1.7 கோடி புதிய மின்சார வாகனங்கள் விற்பனையாகின. அது அனைத்து புதிய வாகனங்களிலும் 20%. சீனாவில் 1.1 கோடி மின்சார வாகனங்கள் விற்பனையாகின. இது மொத்த வாகன விற்பனையில் 50%. அந்த ஆண்டில் சீனா 12.5 இலட்சம் மின்சார வாகனங்களை ஏற்றுமதி செய்தது (இது அமெரிக்கச் சந்தையில் விற்பனையாகும் மொத்த மின்சார வாகனங்களின் எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு அதிகம்).

சூரிய மின்சக்தி, 5ஜி தொழில்நுட்பம், அதிவேக இரயில் போக்குவரத்து முதலியவற்றிலும் சீனா முன்னணி வகிக்கிறது.

எனவே, சீனாவையும் அதன் அரசமைப்பின் தன்மையையும் புரிந்து கொள்வது உலகத்தின் எதிர்காலத்துக்கு இன்றியமையாததாக உள்ளது என்கிறார் கைலே ஃபெர்ரனா.

“இன்று நாம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட ஓர் உலகில் வாழ்கிறோம். அது சமமற்றதாகவும்,

நமது மூதாதையர்கள் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு நாடுகள் ஒன்றையொன்று சார்ந்தனவாகவும் இருக்கிறது. மற்ற அனைத்து நாடுகளையும் போலவே, மக்கள் சீனத்தையும் இந்த உலக அமைப்புடன் இணைத்து மட்டுமே புரிந்துகொள்ள முடியும். உலக அமைப்பின் தன்மையைத் துல்லியமாகப் புரிந்து கொள்ளாமல் சீனாவுக்கும் பிற நாடுகளுக்கும் இடையிலான உறவைப் புரிந்து கொள்ள முடியாது" என்கிறார்.

## நூலின் அமைப்பு

இவ்வாறு இணைக்கப்பட்ட உலகம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எவ்வாறு இருந்தது? நாம் வாழும் இருபத்தியொன்றாம் நூற்றாண்டின் முதல் பாதியில் இருக்கும் உலக நிலைமை அதிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதல் உலகப் போரின் போது, ஏகாதிபத்தியங்கள் பற்றி லெனின் உருவாக்கிய கோட்பாட்டை அப்படியே இன்றைய உலக நிலைமைகளுக்குப் பொருத்த முடியுமா? என்ற கேள்விக்கு பதிலளிப்பதிலிருந்து தனது நூலைத் தொடங்குகிறார் கைலே ஃபெர்ரனா.

இந்நூலில் 12 இயல்களும் நான்கு பின்னிணைப்புகளும் இடம் பெறுகின்றன.

இயல்கள் 1, 2, 3, 4, 5 உலக ஏகாதிபத்தியக் கட்டமைவு பற்றியும் அதன் மேலாதிக்கப் பொறியமைவுகள் குறித்தும் உலக நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட வரலாற்றைப் பற்றியும் பேசுகின்றன.

இயல் 6 "சீனாவும் உலகமும்", இயல் 7 "சீனாவில் அரசு அதிகாரத்தை யார் கையில் வைத்திருக்கிறார்கள்" ஆகியவை பன்னாட்டு உறவுகளிலும் உள்நாட்டு செயல்பாடுகளிலும் சீன அரசின் வர்க்கத் தன்மையை ஆய்வு செய்கின்றன. இயல் 8 சீனாவின் மீது ஏகாதிபத்தியக் கட்டமைவு நடத்தும் பரப்புரை முற்றுகையைப் பற்றிப் பேசுகிறது.

இறுதியாக இயல் 9 இல் குடியேற்றக் காலனியம் பற்றிய ஒப்பீட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இயல் 10, சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு சீனா எடுத்து வரும் முயற்சிகள் பற்றியும் இயல் 11 பல்துருவ உலகம் ஒன்று உருவாகி வருகிறதா என்ற கேள்வி பற்றியும் இயல் 12 புதிய பனிப்போர் பற்றியும் பேசுகிறது. பின்னிணைப்புகளில் கானாவின் தங்கச் சுரங்கத் தொழிலும் சமனற்ற பரிவர்த்தனையும், ஆப்பிரிக்க – சீனா சமனற்ற பரிவர்த்தனை, போல்ஷ்விக் புரட்சி எவ்வாறு வெல்லப்பட்டது, ஷின்ஜியாங் தன்னாட்சி மண்டலத்தில் வேலையின்மை முதலியவை இடம் பெறுகின்றன. இந்நூலை எழுதுவதற்கு ஆசிரியர் பயன்படுத்திய 200க்கும் மேற்பட்ட நூல்களின் விரிவான பட்டியல் சுமார் 20 பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

## ஏகாதிபத்தியக் கட்டமைவு – மீ ஏகாதிபத்தியம்

இருபதாம் நூற்றாண்டில், முதலாளித்துவத்தின் உச்சகட்டமான ஏகாதிபத்திய சகாப்தத்துக்குள் உலகம் நுழைந்து விட்டது என்று 1917 இல் வகுத்துரைத்தார் ரசியப் புரட்சியை வழிநடத்திய கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் லெனின். எனவே, வரலாற்றில், ஏகாதிபத்தியங்களின் அடுத்தடுத்த வடிவங்களைப் பற்றிய பகுப்பாய்வுடன் கைலே ஃபெர்ரனா தனது நூலைத் தொடங்குகிறார்.

## காலனிகளின் தோற்றம்

- 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல், நெதர்லாந்து முதலிய நாட்டு வணிகச் செயல்பாடுகள் காலனிகளின் உருவாக்கத்துக்கு வழிவகுத்தன.
- அமெரிக்காவில் ஐரோப்பியர்கள் குடியேற்றக் காலனிகளை அமைத்தனர். ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்கா, அல்ஜீரியா, கென்யா இன்றைய ஜிம்பாப்வே நாடுகளிலும் குடியேற்றக் காலனிகள் உருவாக்கப்பட்டன.
- இந்தியாவில் போர்ச்சுகீசிய, டச்சு (நெதர்லாந்து), பிரெஞ்சு, ஆங்கிலேய காலனியாதிக்க சக்திகளுக்கு இடையேயான மோதலின் இறுதியில் பிரித்தானியப் பேரரசின் ஆட்சி நிலைபெற்றது. சீனாவில் பெயரளவில் மன்னராட்சி நீடித்த போதே பல்வேறு ஏகாதிபத்தியங்கள் தமது ஆதிக்கத் தளங்களை நிறுவிக் கொண்டன.
- உலகளாவிய வணிகத்தின் துரிதமான வளர்ச்சியால் தூண்டப்பட்டு அதற்கு இணையாக இங்கிலாந்தில் முதலாளித்துவ உற்பத்தி முறை அதாவது தொழில் துறை மூலதனம் தோன்றி வளர்ந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த தொழிற்புரட்சி இங்கிலாந்தை உலகின் உற்பத்தி மையமாக்கியது. இங்கிலாந்தின் உற்பத்திப் பொருட்கள் கண்டத்து ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் இந்தியா, சீனா முதலிய நாடுகளிலும் விற்கப்பட்டன. அதே நேரம், இந்த நாடுகள் இங்கிலாந்துக்கு வேளாண் விளைபொருட்களையும் கனிம வளங்களையும் ஏற்றுமதி செய்யும் நாடுகளாக இருந்தன.

இதனை "காலனிகளின் தோற்றம்" என்று கைலே ஃபெர்ரானா குறிப்பிடுகிறார்.

### காலனியமும் ஏகாதிபத்தியங்களுக்கு இடையே பகைநிலையும்

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்துடன் போட்டி போடும் வகையில் பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளும் துரிதமான முதலாளித்துவ வளர்ச்சியைக் கண்டன. அவை உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்து வேளாண் பொருட்களையும் சுரங்க எடுபொருட்களையும் இறக்குமதி செய்வது என்பதிலிருந்து மூலதனத்தை ஏற்றுமதி செய்வது என்ற கட்டத்தை அடைந்தன.
- பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி உலகம் இந்த ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே பங்கிடப்பட்டது. இந்தப் பங்கிடலும் மறுபங்கிடலும் போர்களுக்கு வழிவகுத்தன என்று லெனின் வகுத்து முன்வைத்தார். முதல் உலகப் போர் உலகை மறுபங்கீடு செய்வதற்காக ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக்கும் ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான போட்டியின் விளைவே என்று வகுத்துரைத்தார்.
- முதல் உலகப் போரின் இறுதியில் பின்தங்கிய நாடான ரசியாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சி நடந்தது. இது ஏகாதிபத்தியக் கட்டமைப்பில் ஓர் உடைப்பை ஏற்படுத்தியது. 1917 ரசியாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பிறகு தோன்றிய சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம் அளித்த உந்துதலும் ஆதரவும் காலனிய நாடுகளில் தேச விடுதலைப் போராட்டங்களை தீவிரமடையச் செய்தன.

இந்தக் காலகட்டத்தை "காலனியமும் ஏகாதிபத்தியங்களுக்கு இடையே பகைநிலையும்" என்று கைலே ஃபெர்ரானா வரையறுக்கிறார்.

### புதிய காலனியம் [நவ காலனியம்] – ஏகாதிபத்தியங்களுக்கிடையே கூட்டு

- இரண்டாம் உலகப் போருக்குப் பின் பல காலனிய நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்றன. அவற்றில் இந்தியாவும் ஒன்று.
- சீனாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் யூகோஸ்லேவியாவிலும் பிற்காலத்தில் வட கொரியாவிலும் கியூபாவிலும் வியட்நாமிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றின. சோவியத் ஒன்றியத்தின் தலைமையிலான சோசலிச முகாம் ஒன்று உருவானது.
- பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் முதலிய ஏகாதிபத்திய நாடுகள் அமெரிக்கா தலைமையில் சோவியத் ஒன்றியத்தையும் சோசலிச நாடுகளையும் எதிர்ப்பதற்கு ஒன்றுபட்டன. நேட்டோ என்ற இராணுவக் கூட்டையும் உலக வங்கி, பன்னாட்டு பணவியல் நிதியம் (ஐ.எம்.ஃஎப்) முதலிய பொருளாதார அமைப்புகளையும் வணிகம் மற்றும் வரிகள் தொடர்பான பொது ஒப்பந்தம் (காட்) என்ற தடையிலா வணிகத்துக்கான கட்டமைப்பையும் உருவாக்கிக் கொண்டன.
- அரசியல் அடிப்படையில் சுதந்திரமடைந்த முன்னாள் காலனிய நாடுகள் பொருளாதார அடிப்படையில் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு உட்பட்டிருந்தன. எனினும் சோவியத் ஒன்றியத்தின் முன்மாதிரியையும் உதவியையும் கொண்டு தமது உள்நாட்டுப் பொருளாதாரத்தையும் பொதுத்துறை நிறுவனங்களையும் பொதுச் சேவைகளையும் ஓரளவு கட்டியமைத்தன. தொழிலாளர்களின் உரிமைகளும் தொழிற்சங்கங்களும் உலகெங்கும் வலுவடைந்திருந்தன.

இவ்வாறாக இரண்டாம் உலகப் போருக்குப் பின், ஏகாதிபத்தியச் சுரண்டல் புதிய காலனியம் என்ற வடிவத்தை எடுத்தது. இதனை "புதிய காலனியம் [நவ காலனியம்] – ஏகாதிபத்தியங்களுக்கிடையே கூட்டு" என்று கைலே ஃபெர்ரானா வரையறுக்கிறார்.

கானாவின் முதல் தலைமை அமைச்சரும் குடியரசுத் தலைவரும் ஆன டாக்டர் குவாமே நக்ருமா புதிய காலனியத்தை இவ்வாறு வரையறுக்கிறார்.

"நவ காலனியத்தின் சாராம்சம் என்னவென்றால், அதற்கு உட்பட்ட அரசு கோட்பாட்டளவில் சுதந்திரமானது. பன்னாட்டு இறையாண்மைக்கான அனைத்து புறத்தோற்றங்களையும் கொண்டுள்ளது. நடைமுறையில் அதன் பொருளாதார அமைப்பும் எனவே அதன் அரசியல் கொள்கையும் வெளியிலிருந்து இயக்கப்படுகின்றன.... நவ-காலனியத்தின் விளைவாக அயல்நாட்டு மூலதனம் சுரண்டலுக்குப் பயன்படுத்தப்படுகிறதே தவிர குறை வளர்ச்சியடைந்த நாடுகளின் முன்னேற்றத்துக்காக அல்ல. புதிய காலனியத்தின் கீழ் முதலீடு பணக்கார நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் இடையிலான இடைவெளியை அதிகரிக்கின்றனவே தவிர குறைக்கவில்லை".

### எதிர்ப்பற்ற ஏகாதிபத்திய ஒற்றுமை அல்லது மீ ஏகாதிபத்தியக் கட்டம்

- 1990களில் சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்தது. சோவியத் சோசலிசக் குடியரசுகள் 15 தனித்தனி நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. அவற்றிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் முதலாளித்துவ அரசுகள் நிறுவப்பட்டன. 1990களில் பல்தேசிய நாடான யூகோஸ்லேவியாவில் கம்யூனிஸ்ட்

*கட்சி ஆட்சி வீழ்த்தப்பட்டு அந்நாடு செர்பியா, கிரோஷியா, போஸ்னியா, ஸ்லோவேனியா, வடக்கு மாசிடோனியா, மான்டிநீக்ரோ, கோசவோ என்று பிரிக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் உலகில் மொத்தம் 34 புதிய நாடுகள் உருவாக்கப்பட்டன.*


- *இந்தியா முதலிய புதிய காலனிய நாடுகளில் தனியார்மயம் தாராளமயம் உலகமயம் என்ற புதிய தாராளவாதக் கொள்கைகள் செயல்படுத்தப்பட்டன.*
- *சீனா, வட கொரியா, வியட்நாம், லாவோஸ், கியூபா முதலிய ஐந்து நாடுகளில் மட்டுமே மார்க்சிய லெனினியத்தைப் பின்பற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் தமது ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டிருந்தன.*

*இவ்வாறாக, ஏகாதிபத்தியக் கட்டமைவுக்கு எதிரான சக்திகள் கணிசமாக பலவீனமடைந்திருந்தன.*

- *ஆனால், நேட்டோ இராணுவக் கூட்டமைப்பு சோவியத் ஒன்றியத்தின் மறைவுக்குப் பின்னும் தொடர்ந்தது. காட் ஒப்பந்தம் உலக வர்த்தகக் கழகமாக மாற்றப்பட்டது. உலகத்தை ஒற்றை ஏகாதிபத்தியக் கட்டமைப்பாக மாற்றும் செயல்முறை தொடங்கியது. உலக வங்கியும் பன்னாட்டு நாணய நிதியமும் இதற்கான கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன.*

*இதனை "எதிர்ப்பற்ற ஏகாதிபத்திய ஒற்றுமை அல்லது மீ ஏகாதிபத்தியம்" (Super Imperialism) என்று கைலே ஃபெரானா வரையறுக்கிறார்.*

*அமெரிக்கக் கண்டம் முழுவதும் மேலாண்மை, ஐரோப்பாவில் நேட்டோ கூட்டணி மூலம் இராணுவ ஆதிக்கம், அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலிய நாடுகளைக் கொண்ட ஐந்து கண்கள் கூட்டு (Five Eyes Alliance) என்ற உளவுத் துறை ஒருங்கிணைப்பு, தென் கொரியா, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் மூலம் ஆசியா பசிபிக் மீது ஆதிக்கம் என்ற ஏகாதிபத்தியக் கட்டமைவு உலகளாவிய மேலாதிக்க வலைப்பின்னலை பின்னியிருந்தது. பிற உலக அமைப்புகளான இணையம், நிதித்துறை, வணிகம் முதலியவற்றையும் கட்டுப்படுத்துகிறது.*




*"எனவே, அமெரிக்க-சீனா உறவு என்பது புதிதாக வளர்ந்து வரும் இறையாண்மை கொண்ட அரசு ஒன்று, அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தும் உலகப் பேரரசு அல்லது உலக அமைப்பை எதிர் கொள்வதாக இருந்தது. இரண்டு இறையாண்மை கொண்டு அரசுகளுக்கு இடையிலான உறவு பற்றிய சிக்கல் இல்லை, இது. சீனா அமெரிக்க மேலாதிக்கம் நிலவும் உலகப் பேரரசை எவ்வாறு எதிர்கொள்கிறது என்பதைப் பற்றிய சிக்கல்" என்கிறார் சீன அரசியல் கோட்பாட்டாளர் பேராசிரியர் ஜியாங் ஷுகொங்.*

**ஏகாதிபத்தியச் சுரண்டல் கட்டமைவு**

*இவ்வாறு, 1980களுக்குப் பின்னர் ஏகாதிபத்திய உலகத்தின் கட்டமைப்பையும் அதில் சீனாவின் இடத்தையும் வரையறுக்கிறார் ஆசிரியர். அதைத் தொடர்ந்து அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியக் கட்டமைவில் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் எவ்வாறு பன்னாட்டுச் சுரண்டலை நடத்துகின்றன என்ற நிகழ்முறையை விளக்குகிறார்.*

*அமெரிக்கா தலைமையிலான இந்த மீ-ஏகாதிபத்தியம் மீ-இலாபங்களைக் (Super Profits) குவிக்கிறது. அதற்குப் பயன்படும் முதன்மையான பொறியமைவு சமனற்ற பரிவர்த்தனை என்பதாகும். அதன்படி ஒரு குறை-வருவாய் கொண்ட நாடு உயர் வருவாய் கொண்ட நாட்டுடன் வணிகம் செய்யும் போது உயர் வருவாய் நாடு உண்மை மதிப்பின் ஒரு தொகையை ஈட்டுகிறது குறை வருவாய் நாடு உண்மை மதிப்பின் ஒரு தொகையை இழக்கிறது. இது எந்த வணிகக் கணக்கீடுகளிலும் வெளிப்படுவதில்லை.*

*எடுத்துக்காட்டாக, ஆப்பிள் ஐஃபோன் உற்பத்தி காலனிய நாடுகளில் நடக்கிறது. அந்த நாடுகளின் முதலாளிகளின் இலாபம், தொழிலாளர்களின் கூலி உட்பட மொத்த உற்பத்தி விலை $200 ஆக உள்ளது. ஆனால், அது $649 க்கு விற்பனையாகிறது. அதாவது $449 ஆப்பிள் நிறுவனத்துக்கும் ஏகாதிபத்திய நாடுகளின் செயல்படும் பிற வணிக நிறுவனங்களுக்கும் அந்த நாடுகளின் அரசுகளுக்கு வரியாகவும் போகின்றன. ஆப்பிள் $108 இலாபமாக ஈட்டுகிறது.*

*இவ்வாறு உலகமயமான உற்பத்தியில் மூன்றாம் உலக நாடுகளில் சேர்க்கப்படும் மதிப்பிலும் உபரி-மதிப்பிலும் பெரும்பகுதியை மேற்கத்திய ஏகாதிபத்திய நிறுவனங்களும் நாடுகளும் கைப்பற்றிக் கொள்கின்றன. இந்தச் சமனற்ற பரிவர்த்தனை உலக ஏகாதிபத்தியக் கட்டமைப்பின் முதன்மைச் சுரண்டல் வடிவமாக உள்ளது.*

ஜான் ஸ்மித் எழுதிய **"21 ஆம் நூற்றாண்டு ஏகாதிபத்தியம்"** என்ற நூல் உலகளாவிய உற்பத்தி நிகழ்முறையில் புதிய காலனிய நாடுகளில் இருந்து ஏகாதிபத்திய நாடுகளுக்கு மதிப்பு கடத்தப்படும் பொறியமைவுகள் பற்றி விவரிக்கிறது.

இத்துடன் கடன்கள் மீதான வட்டி, அறிவுசார் சொத்துகளுக்கான உரிமத் தொகை போன்றவையும் ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்களால் மூன்றாம் உலக நாடுகளிலிருந்து கறக்கப்படுகின்றன.

இந்தப் பொறியமைவை பேணுவதற்கு இரண்டாம் நிலைப் பொறியமைவுகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் ஒன்றோ இரண்டோ அல்லது அனைத்துமோ குறிப்பிட்ட நாடுகளின் பொருளாதார, அரசியல், இராணுவ நிலைமைகளுக்கு ஏற்பப் பயன்படுத்தப்படுகின்றன.

### 1. கட்டமைப்புச் சீர்திருத்தம்

ஒரு புதிய காலனிய நாடு, சமனற்ற பரிவர்த்தனையின் காரணமாகவும் கடன் சுமை காரணமாகவும் பன்னாட்டுக் கொடுப்புகளில் பற்றாக்குறையை எதிர்கொள்ளும்போது பன்னாட்டு பணவியல் நிதியம் (ஐ.எம்.எஃப்) அதற்குக் கடன் வழங்குகிறது. அந்தக் கடனுக்கான நிபந்தனையாக பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்குதல், கல்வி, மருத்துவம், சுகாதாரம் முதலிய பொதுச் சேவைகளை தனியார் மயமாக்குதல், இயற்கை வளங்களை பன்னாட்டு நிறுவனங்களுக்கு திறந்து விடுதல், நிதித்துறைக்கட்டமைப்பை பன்னாட்டு மூலதனத்துக்கு திறந்து விடுதல் ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தில் தாராளவாதக் கொள்கைகளை செயல்படுத்தல் முதலியவற்றை விதிக்கிறது. இந்த நிபந்தனைகள் கடன் பெறும் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் பலவீனப்படுத்தி அவை மேலும் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு விழுவதாக ஆகிறது. இவை "கட்டமைப்புச் சீர்திருத்தம்" என்ற பெயரில் கடனுக்கு நிபந்தனையாக முன்வைக்கப்படுகின்றன.

மெக்சிகோவிலும் பிற லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் இவை முதலில் சுமத்தப்பட்டன. முன்னாள் யூகோஸ்லேவியாவிலும் ஆப்பிரிக்க நாடுகளிலும் இவை பின்பற்றப்பட்டன. இந்தியாவும் 1991 இல் பன்னாட்டு பணவியல் நிதியத்தில் கடன் வாங்குவதற்கு நிபந்தனையாக கட்டமைப்புச் சீர்திருத்தம் சுமத்தப்பட்டது. எடுத்துக்காட்டாக தனியார் மயம், தாராளமயம், உலகமயம் என்ற முழக்கத்தின் கீழ் நமது இந்தியப் பொருளாதாரத்தில் புதிய தாராளவாத மாற்றங்கள் செயல்படுத்தப்பட்டன.

**இந்தியாவின் ஐ.எம்.எப். கடன்கள் – காலவரிசை மற்றும் நிபந்தனைகள்**
**(செயற்கை நுண்ணறிவு ChatGPT தொகுத்தது)**


| காலம் | கடன் வகை & தொகை | முக்கிய நிபந்தனைகள் / குறிப்புகள் |
|---|---|---|
| 1947–1975 | ~US $10 கோடி (1947–55);<br>US $176 கோடி (1957–75) | அடிப்படை கொடுப்புச் சமநிலைக்கான (BoP) ஆதரவு; நிபந்தனைகள் எதுவும் பதிவில் இல்லை. |
| 1978–1981 | SDR 52.9 கோடி (சேமவைப்பு நிதி) | சலுகைகளுடன்; நிபந்தனைகள் குறிப்பிடப்படவில்லை. |
| 1981–84 | EFF – US $560 கோடி<br>(பெறப்பட்டது US $390 கோடி) | இறக்குமதி தாராளமயம்; ரூபாய் மதிப்பிறக்கம் (Devaluation). |
| ஜுலை 1990 | சேமவைப்புத் தொகை திரும்பப்பெறுதல் | குறுகியகால நாணய கையிருப்பு நிலைநிறுத்தல்; புதிய நிபந்தனைகள் இல்லை. |
| செப். 1990 | தங்கப் பங்கு (Gold Tranche) – US $55 கோடி | உள்துறை புழக்கத்துக்கான ஆதரவு; குறைந்த அல்லது எவ்வித நிபந்தனைகளும் இல்லை. |
| ஜன. 1991 | SBA (முதல் கடன்) – $77.5 கோடி<br>CCFF – $102 கோடி | 1991 பட்ஜெட்டில் சீர்திருத்தங்களை உறுதி செய்ய வேண்டும் என்ற நிபந்தனை. |
| நவ. 1991<br>–ஜுன் 1993 | Stand-By Credit – $220 கோடி<br>மொத்தம் $350 கோடி | முக்கிய சீர்திருத்தங்கள்: ரூபாய் மதிப்பிறக்கம், மானியங்கள் வெட்டு, வணிகமும் முதலீடும் தாராளமயமாக்கப்படுதல் |

அடுத்த இதழில் வெளியாகவிருக்கும் இறுதிப் பகுதியில் பிற இரண்டாம் நிலைப் பொறியமைவுகளைப் பற்றியும் சீனாவின் பன்னாட்டு செயல்பாடுகள் பற்றியும் பார்க்கலாம்.


●

**கட்டுரையாளர்: மார்க்சிய செயல்பாட்டாளர், மொழிபெயர்ப்பாளர்.**


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 85/-




₹ 50/-




₹ 180/-




₹ 90/-




₹ 200/-




₹ 80/-


**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

# அண்ணல் அம்பேத்கர்

## மக்கள் பதிப்பில் வெளியாகும் சாதியம் இந்து மதம், காந்தியம் தொகுதிகளுக்கான அறிமுகக் கட்டுரை.





அண்ணல் அம்பேத்கர் (1891-1956) தமது இருபத்தைந்தாம் அகவை முதல் (1916), சாதி குறித்த ஆய்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். சாதியின் அடையாளமாகத் தீண்டாமை எனும் கொடுமை நடைமுறையில் செயல்படுவதைக் கண்டார். சாதி - தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகப் போராடும் நோக்கத்தோடு அமைப்புகளை உருவாக்கத் தொடங்கினார். இதழ்களை நடத்தத் தொடங்கினார். குரலற்றவர்களின் தலைவன் (மூக்நாயக்-1919) எனும் இதழ், பகிஷ்கிரித் ஹித்தகரணி (1927) எனும் அமைப்பு ஆகியவை தீண்டாமைக் கொடுமையிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை முன்னெடுப்பதற்காக உருவானவைதான். ஒடுக்கப்பட்டோருக்கான மாநாடு (1920, 1927, 1929), கோயில் நுழைவுப் போராட்டம், குளத்தில் நீர் எடுத்தல், மனு ஸ்மிருதியை எரித்தல் (1927) முதலிய அறப்போராட்டங்களையும் முன்னெடுத்தார். தீண்டாமை ஒழிப்பை முதன்மைப்படுத்திச் செயல்படுவதற்கு சமதா (1929) எனும் இதழை நடத்தினார். இவ்வகையில், ஒடுக்கப்பட்ட மக்கள் தீண்டாமைக் கொடுமையிலிருந்து விடுதலை பெறப் பல்வேறு அணுகுமுறைகளை முன்னெடுத்தார். இதில் ஒடுக்கப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்தும் பேசத் தொடங்கினார்.

கட்டுரையை விவாதித்த மக்கள் பதிப்புக் குழு தோழர்களுக்கு நன்றியுடையேன்

1929 இல் 12 மகர் மக்கள் இந்து மதத்திலிருந்து பௌத்தத்திற்கு மாறினர். இதனை அம்பேத்கர் வரவேற்றார். 1929 முதல் பௌத்தம் குறித்த சிந்தனைகளை முன்னெடுத்துப் பேசும் மனநிலை அவருக்கு உருவாயிற்று. தொடர்ந்து தாம் நடத்திய மாநாடுகள், அறப் போராட்டங்கள், வட்டமேசை மாநாடுகள் அனைத்திலும் சாதி ஒழிப்பு குறித்தும் அதன் மூலமாக இருக்கும் தீண்டாமை ஒழிப்பு குறித்தும் பேசினார். அவற்றை கட்டுரைகளாகவும் நூல்களாகவும் வெளியிடத் தொடங்கினார். இந்து மதத்திற்குள் இருந்து கொண்டே சாதி - தீண்டாமையை ஒழிக்க முடியாது என்பதை ஆய்வுகள் மூலமும் நடைமுறை போராட்டங்கள் மூலமும் உணர்ந்த அவர் இவ்வகையான செயல்பாட்டிற்கு ஒடுக்கப்பட்ட மக்கள் மதம் மாறுவது ஒரு தீர்வாக இருக்க முடியும் எனும் கருத்துநிலையை படிப்படியாக வெளிப்படுத்தத் தொடங்கினார். இதன் உச்சமாக, 1935 அக்டோபர் 13 இல் நடந்த இயோலா



வீ.அரசு

மாநாட்டில் ஓர் அறிவிப்பை வெளியிட்டார். தான் இந்து மதத்திலிருந்து விலகி வேறு மதத்தில் சேரப் போகிறேன் என்பது அந்த அறிவிப்பு. "தீண்டாமை என்னும் கறையுடன் நான் பிறந்து விட்டேன்; அது என் தவறன்று. ஆனால், நான் இந்துவாக இறக்க மாட்டேன். இவ்வாறு செய்வது எனது சக்திக்கு உட்பட்டதாகும்" என்று அறிவித்தார். இவ்வகையில் இந்து மதத்திலிருந்து வெளியேறுவது எனும் மனநிலை அவருக்கு உறுதியாக உருவாகிவிட்டது (1929-1935).

1936 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட மக்கள் சீக்கிய மதத்திற்கு மாறலாம் என்ற கருத்துருவை முன்னெடுத்தார். தனது மகன், தனது அண்ணன் மகன் மற்றும் 16 மகர் மக்களை சீக்கிய மதப் பயிற்சிக்காக அமிர்தசரசில் உள்ள சீக்கிய குருத்துவாராவிற்கு அனுப்பிவைத்தார். 1936 இல் இலண்டன் சென்று, ஒடுக்கப்பட்ட மக்கள் மதம் மாறுவதன் மூலம் ஏற்படும் சட்டச் சிக்கல்களை அங்குள்ள வழக்கறிஞர்களிடம் விவாதித்தார். காந்தியார், காங்கிரஸ் கட்சி ஆகியவை ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்குத் தீர்வு காண்பர் எனும் நம்பிக்கை படிப்படியாக, அம்பேத்கரிடம் இல்லாமல் போயிற்று. வட்டமேசை மாநாடுகள், பூனா ஒப்பந்தம் ஆகிய நிகழ்வுகள் இதனை உறுதிப்படுத்தின.

இந்திய அரசியலில், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான விடுதலையின் ஓர் அங்கமாக, மதம் மாறுதல் என்ற திட்டத்தை மனத்தளவில் ஏற்றுக் கொண்டவராக, அவர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1946 இல் அவர் நிறுவிய கல்லூரிக்கு 'சித்தார்த்தா கல்லூரி' எனப் பெயரிட்டார். 1950 இல் புது டில்லியில் நடைபெற்ற பௌத்தப் பேரணி ஒன்றில் கலந்துகொண்டார். 1951 இல் பாரதிய பௌத்த ஜன சங்கத்தை உருவாக்கினார். 1954 இல் சென்னை வந்தபோது, பேராசிரியர் இலட்சுமி நரசு எழுதிய பௌத்தம் குறித்த நூலின் கையெழுத்துப் படியை வெளியிடுவதற்காக வாங்கிச் சென்றார். 1954 இல் பாரதிய பௌத்த மகாசபா எனும் அமைப்பை உருவாக்கினார்.

1955 ஜனவரி 5 ஆம் நாள், தந்தை பெரியார் ஈ.வெ. ராவை இரங்கூனில் சந்தித்துப் பேசினார். இரங்கூனில் நடந்த பௌத்த மாநாட்டில் கலந்துகொள்ள இருவரும் சென்றிருந்தனர். அம்பேத்கர் பௌத்தத்தைத் தழுவப்போகிறார் என்பது பெரியாரைச் சந்தித்த சூழலில் உறுதியானது. பெரியார் அதனை ஆதரித்தார் என்றும் அறிகிறோம். 1956 அக்டோபர் மாதத்தில் தாம் பௌத்தத்திற்கு மாறப் போவதை 1955 மே 24 ஆம் நாள் அறிவித்தார்.

பௌத்தம் குறித்த விரிவான ஆய்வில் ஈடுபட்டிருந்த அம்பேத்கர், 1955 ஆம் ஆண்டில் புத்தர் - அவருடைய தம்மம், இந்தியா: புரட்சி - எதிர்ப்புரட்சி, புத்தரா? கார்ல் மார்க்சா? முதலிய ஆய்வு நூல்களை எழுதி வெளியிடும் பணியில் தீவிரமாக இருந்தார். 1956 மே முதல் நாள், நான் ஏன் பௌத்தத்தை விரும்புகிறேன் எனும் உரையை பி.பி.சி வானொலியில் நிகழ்த்தினார். 1956 அக்டோபர் 14 ஆம் நாள், தம் துணைவியார் மற்றும் 75,000 பேருடன் பௌத்தத்தைத் தழுவினார். தாம் மறைவதற்கு 52 நாட்களுக்கு முன்பு பௌத்தத்தைத் தமது மதமாக ஏற்றுக்கொண்டார்.

இவ்வகையில், 1929 முதல் பௌத்தம் பற்றிய உரையாடலில் இருந்தாலும் 1956 இல்தான் தன்னை பௌத்தராக அறிவித்தார். அவரது கடைசி ஐந்தாண்டுகளில் பௌத்தம் சார்ந்த கருத்துநிலைக்கு தீவிரமாக உட்பட்டிருந்தார். இக்காலங்களில் அவர் உருவாக்கிய பௌத்தம் குறித்தவற்றை இப்பகுதியில் உரையாடலுக்கு உட்படுத்துவோம். அவரது பௌத்தம் குறித்த ஈடுபாடுகளையும் செயல்பாடுகளையும் புரிந்துகொள்ள கீழ்க்காணும் வகையில் தொகுத்துக்கொள்ள முடியும். பௌத்தம் குறித்த அம்பேத்கரின் செயல்களை அடிப்படையில் இரண்டு பிரிவுகளுக்குள் பார்க்கலாம்:

அ. பௌத்தம் எனும் கருத்துநிலையைப் பல்வேறு பொருண்மைகள் சார்ந்து உரையாடலுக்கு உட்படுத்துவது

ஆ. பௌத்தக் கருத்தியலைச் சட்டமாகக் காட்டும் வகையில் அடிப்படையான கோட்பாட்டு நூலை உருவாக்குவது.

### பகுதி அ

அம்பேத்கர் பௌத்தக் கருத்துநிலை சார்ந்து உரையாடலுக்கு உட்படுத்தியவை பின்கண்டவை:

- இந்தியச் சூழலில் பௌத்தம் என்ற கருத்துநிலை சார்ந்து அம்பேத்கர் உருவாக்கிய அமைப்புகளும் அவற்றின் செயல்பாடுகளும் எவ்வகையில் இருந்தன என்பது குறித்த பதிவுகள்
- பௌத்தக் கருத்துநிலைகளுக்கும் இந்து மதத்திற்குமான தொடர்புகள் எத்தகையவை; அவற்றை எப்படிப் புரிந்து கொள்வது என்ற உரையாடல்
- பௌத்தம், பெண் என்ற பாலினம் பற்றிக்கொண்டிருந்த நிலைப்பாடுகள், பௌத்தப் பிக்குணிகளின் செயல்கள் குறித்த உரையாடல்கள்.
- பௌத்தத்திற்கும் மார்க்சியத்திற்குமான உறவுகள், முரண்கள் குறித்த பதிவுகள்

வரலாற்றுக்கு முந்தைய இந்தியச் சூழலில் பௌத்தம் எவ்வாறு செயல்பட்டது? பார்ப்பனர்கள் பௌத்தத்தை எவ்வாறு எதிர்கொண்டனர்? அதன் விளைவுகள் எவை? இந்தியாவில் பௌத்த எழுச்சியை உருவாக்க என்னென்ன செய்ய வேண்டும்? அம்பேத்கர் அவ்வகையான நடைமுறைகளை எல்லாம் எவ்வாறு மேற்கொண்டார்? ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுக் கால இந்தியப் பௌத்த மரபு; அதனை அம்பேத்கர் எதிர்கொண்ட முறைமைகள் முதலியவை குறித்த புரிதல்களைத் தொகுதி 16 இல் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் நமக்குச் சொல்கின்றன. இந்தியச் சூழல் – பௌத்தம் – அம்பேத்கர் என்ற முறையியலில் இதனைப் புரிந்துகொள்ள முடியும்.

இந்தியாவில் பௌத்தம் செயல்பட்ட முறைமை பற்றிய அம்பேத்கரின் பதிவு பின்வருமாறு அமைகிறது.

> "இந்தியா பௌத்தத்தின் பிறப்பிடம். பொ.ஆ.மு 543 இல் இருந்து பொ.ஆ 1400 வரை ஏறத்தாழ 2000 ஆண்டுக் காலம் அது அங்கு செழித்து வளர்ந்தது. அங்கு பௌத்தம் மறைந்துபோனாலும் புத்தரின் திருப்பெயர் தொடர்ந்து எல்லையற்ற மதிப்போடு போற்றப்படுகிறது. அவரது சமயம் பற்றிய நினைவுச் சின்னமும் பசுமையாக இருக்கிறது. இந்தியாவில் பௌத்தம் பட்டுப்போன ஒரு தாவரமாக இருக்கக்கூடும். ஆனால், அது தனது வேர்களை இழந்து மடிந்துபோய்விட்டதாக எவரும் கூற முடியாது. புத்தர் விஷ்ணுவின் அவதாரமாக இந்துக்களால் கருதப்படுகிறார்" (தொ. 20, பக். 197).

இந்தியச் சமூகம் பழங்குடி மக்களின் ஆட்சியின் கீழ் ஒரு காலத்தில் இருந்தது; அவர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். பின்னர் உருவான வருண (வர்க்க) முரண்பாடுகள், சாதி முரண்பாடுகள், பல்வேறு படிநிலைப் பாகுபாடுகள் எதுவும் அச்சமூகத்தில் இருக்கவில்லை. பகுத்தறிவைப் பேணும் சமூகமாக அது இருந்தது. அங்கு பிற்கால மதங்களில் இருந்தது போன்ற கடவுள் இருக்கவில்லை; வேள்விகள் போன்ற சடங்குகள் இல்லை. இதன் தொடர்ச்சியாகவே புத்தர் பௌத்தக் கருத்துகளைப் போதிக்கத் தொடங்கினார். புத்தரின் கருத்துகளுக்கு மிகுந்த செல்வாக்கு உருவானது. சடங்குகள், கடவுள் வழிபாடு ஆகியவற்றை புத்தர் மறுத்தார். நடைமுறைச் சமூக நிகழ்வுகளில் மனிதனே முதன்மைப் பாத்திரம் எனும் கருத்துநிலை வெகுமக்களிடத்தில் வெகுவாகப் பரவிற்று.

சமூக முரண்களை மறுத்து அனைவரும் சமம் எனும் கோட்பாட்டை புத்தர் முன்னிறுத்தியபோது, பார்ப்பனர்கள் வருணம், சாதி முரண்பாடுகளைக் கொண்டிருந்தனர். வேள்விகளை வளர்த்து உயிர்க்கொலை செய்தனர். இறைச்சியை முக்கியமான உணவாகக் கொண்டிருந்தனர். பசுக்களைக் கொன்று உண்பதில் ஆர்வம் காட்டினர். இந்தத் தருணத்தில், புத்தர் உயிர்க் கொலையைத் தவிர்க்கும் அகிம்சைக் கோட்பாட்டைப் போதிக்கத் தொடங்கினார். எளிய மக்கள் அலைஅலையாய் பௌத்தத்தில் இணைந்தனர். இதனைக் கண்ட பார்ப்பனர்கள், தங்கள் செல்வாக்கு அழிந்துவிடுமோ என்ற மனநிலைக்கு ஆளாயினர். இதனால், உயிர்க்கொலை தவிர்க்கும் கோட்பாட்டை அவர்கள் பின்பற்றத் தொடங்கினர். ஆனால், வருண முரண்பாடுகள், பிற சமூக முரண்பாடுகளை அவர்கள் பின்பற்றியே வந்தனர். பசுக்கொலை தவிர்க்கப்பட்டதால் கிராமங்களுக்கு வெளியில் வசித்து வந்த சிதறுண்ட மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு உருவானது. இறைச்சி கிடைக்காமையால், இறந்துபோன பசுக்களை உண்பதை அவர்கள் தொடர்ந்தனர். இதனைக் காரணமாக வைத்து, அம்மக்களில் ஒரு பிரிவினரை தீண்டப்படாதோர் என்று பார்ப்பனர்கள் வகைப்படுத்தினர்.

மேற்குறித்தவாறு இந்தியச் சமூகத்தில் பௌத்தம்-பார்ப்பனர் உறவுகள் சார்ந்து ஒடுக்கப்படும் தீண்டப்படாதோரின் உருவாக்கம் நிகழ்ந்தது. ஒடுக்கப்படும் மக்கள் பௌத்த ஈடுபாடு கொண்டு பௌத்தத்தில் தொடர்ந்தனர். பார்ப்பனர்கள் அவர்களை பௌத்த ஈடுபாட்டிலிருந்து விடுவிக்க முடியவில்லை. இதனால் இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்களின் அடையாளமாக பௌத்தம் இன்றும் தொடருகிறது என்று அம்பேத்கர் பதிவுசெய்கிறார்.

ஐரோப்பாவிலிருந்து வந்த கிறித்தவர்கள் 100 ஆண்டுகளுக்கு மேலாகப் பார்ப்பனர்களைக் கிறித்தவத்திற்கு மாற்ற முற்பட்டனர். அதில் அவர்கள் தோல்வி அடைந்தனர். அதற்குப் பிறகுதான் ஒடுக்கப்பட்ட மக்களைக் கிறித்தவத்துக்கு மாற்றும் பணியினைத் தொடங்கினர் என்று அம்பேத்கர் பதிவுசெய்கிறார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் மதமான பௌத்தம் மீண்டும் புத்தெழுச்சி பெற வேண்டும் என்னும் விருப்பத்தினை அம்பேத்கர் முன்வைத்தார். அதற்கான பல்வேறு திட்டங்களை அவர் 1944 ஆம் ஆண்டு முதல் பேசிவந்தார். 1950 ஆம் ஆண்டுகளில் நேரடி நடவடிக்கைகளில் இறங்கினார். அந்தத் தகவல்களைக் கீழ்க்காணும் வகையில் தொகுத்துக்கொள்ள முடியும்:

- இந்து மதம், அந்த மதத்திலேயே உள்ள மக்களை தீண்டப்படாதோர் என்று பாகுபடுத்துகிறது. அறிவுத்துறை பெரிதும் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய சூழலில் அந்த மக்கள், இந்து மதத்தில் தொடர்ந்து இருக்க விரும்பவில்லை. இந்து மதத்திற்கு எதிராகப் போர்க்கொடி தூக்குகின்றனர். இவர்கள், கிறித்தவத்திற்கு மதம் மாறுவதைவிட பௌத்தத்திற்கு மாறுவதையே விரும்புகின்றனர். கிறித்தவம் போல பௌத்தம் அந்நியமானது இல்லை. பௌத்தம் முதன்மையாகச் சமத்துவத்தைப் பேசுகிறது. பகுத்தறிவு சமயமாக உள்ளது. எனவே, கீழ்த்தட்டு மக்களின் விருப்பம் நிறைவேறும் வகையில் பௌத்த எழுச்சியை உருவாக்க வேண்டும்.
- அனைவரும் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் பௌத்தம் தொடர்பான தத்துவ நூலை உருவாக்க வேண்டும் (இது குறித்து அடுத்த பகுதியில் விரிவாகப் பேசலாம்).
- கிறித்தவ மதத்தில் செய்வதைப் போல் திருமுழுக்கு நடத்த வேண்டும். கிறித்தவத்தில் உள்ளது போன்று சமய குருவாகப் பதவியேற்கும் சடங்கு ஒன்றை பௌத்தத்துக்கு மாறுபவர்களுக்குச் செய்ய வேண்டும்.
- ஏராளமான மத போதகர்களை அமர்த்த வேண்டும். இவர்கள் அடித்தட்டு மக்களிடம் சென்று பௌத்தப் பரப்புரையை முன்னெடுக்க வேண்டும். இவர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும். திருமணம் செய்துகொள்ள அனுமதிக்க வேண்டும்.

- பௌத்த சமயக் கல்விக்கூடங்களை உருவாக்க வேண்டும். இவ்வகையான கல்விக்கூடங்களை முதன்நிலையாக சென்னை, நாகபுரி, கல்கத்தா மற்றும் டில்லி நகரங்களில் உருவாக்க வேண்டும்.
- பம்பாய், சென்னை, நாகபுரி, டெல்லி ஆகிய இடங்களில் மிகப்பெரிய கோயில்களையும் விகாரைகளையும் கட்ட வேண்டும். இந்துக் கோயில்களைப் போல் பிரமாண்டமான அமைப்பில் இவை அமைய வேண்டும்.

அம்பேத்கர் மேலே கூறியவாறு தமது வாழ்க்கையில் செயல்படுத்தத் தொடங்கினார். இந்த அறிவிப்பு பின்வருமாறு அமைகிறது.

**மக்கள்திரள் மதமாற்றம்**

"*1956 அக்டோபர் 14, ஞாயிற்றுக்கிழமை, விஜயதசமி நாள் காலை 8 மணியளவில், நாகபுரியில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியில் இந்தியப் பௌத்த கழகத்தின் நிறுவனரும் தலைவருமான டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் பௌத்தத்தைத் தழுவுவார். பர்மாவைச் சேர்ந்தவரும் இப்போது இந்தியாவில் இருப்பவருமான வணக்கத்திற்குரிய பிக்கு சந்திரமணி மகாதேரா இந்த நிகழ்ச்சியை நடத்திவைப்பார்" (தொ. 20, பக். 230).*

இவ்வகையில் அம்பேத்கர் இதனை வெறுமனே பேசவில்லை; தமது நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றினார். அவர் இந்துவாகச் சாக மாட்டேன் என்று கூறியதைச் செய்துகாட்டினார். 1955 ஆம் ஆண்டு பௌத்த சங்கம் ஒன்றை உருவாக்கினார். 1956 ஆம் ஆண்டில் பௌத்தத்தில் தம்மை இணைத்துக்கொண்டார். இதே ஆண்டு, புத்தர் - அவரது தம்மம் என்ற அடிப்படை பௌத்த நெறி மற்றும் தத்துவம் குறித்த நூலை உருவாக்கினார். பௌத்தத்தில் தன்னை இணைத்துக்கொண்டபோது, இருபத்திரண்டு உறுதிமொழிகளை வெளிப்படுத்தினார். அதில் குறிப்பிடத்தக்க சில கீழ்வருமாறு:

- *பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரனிடம் எனக்கு நம்பிக்கை இல்லை. அவர்களைத் தொழுது வழிபடவும் மாட்டேன்.*
- *இராமன், கிருஷ்ணனிடம் எனக்கு நம்பிக்கை இல்லை. அவர்களைத் தொழுது வழிபடவும் மாட்டேன்.*
- *கடவுள்களின் அவதாரக் கோட்பாட்டில் எனக்கு நம்பிக்கையில்லை.*
- *பார்ப்பனர்களைக் கொண்டு, எந்த மதச் சடங்குகளையும் செய்ய மாட்டேன்.*
- *மனிதகுலத்தின் சமத்துவத்தில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.*
- *சமத்துவத்தை நிலைநாட்டப் பாடுபடுவேன்.*
- *மனிதகுல வாழ்வுக்கும் வளத்துக்கும் அழிவை விளைவிக்கும், மனிதர்களைப் பாகுபடுத்திப் பார்த்து, அவர்களைக் கீழ்த்தரமாக நடத்தும், எனது பழைய இந்து மதத்தை விட்டு பௌத்தத்தை இப்போது தழுவுகிறேன்" (தொ. 16. பக். 239-240)*

இவ்வகையில் அம்பேத்கர் இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் பௌத்தத்தில் புதிய மறுமலர்ச்சியை உருவாக்கினார். இது இந்தியாவில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான வடிவமாகவும் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

அண்ணல் அம்பேத்கர், அவருக்கு விவரம் விளங்கக் கூடிய சிறுவயதிலிருந்து சாதிக் கொடுமையின் அனைத்துப் பரிமாணங்களையும் புரிந்துகொண்டார். அதனை நேரடியாக உணர்ந்தார்; அதன் விளைவுகளைப் பட்டறிவாகவே பெற்றார். அமெரிக்க, ஐரோப்பியப் பின்புலங்களில் செயல்படும் நவீன கல்வி சார்ந்த புரிதல் அவருக்கு நல்வாய்ப்பாக வாய்த்தது. அந்தப் பயிற்சியின் மூலம், இந்திய சமூகத்தின் அடிப்படையான முரண்பாடாக, சாதி, வருணம் இதனை நடைமுறைப்படுத்தும் இந்து மதம் ஆகியவை குறித்த விரிவான ஆய்வுகளை மேற்கொண்டார். அவற்றைக் கட்டுரைகளாக, நூல்களாக எழுதினார். இதில், ஒடுக்கப்படும் மக்கள் மீது சுமத்தப்பட்ட தீண்டாமை போன்ற கொடுமைகளுக்கான காரணங்களை உரையாடலுக்குட்படுத்தினார். அந்தக் கொடுமைகளுக்கு எதிராகப் போராடும் அமைப்புகளை உருவாக்கி, களப் போராளியாகச் செயல்பட்டார். ஆளும் பிரித்தானியர்களிடம் தமது மக்களுக்கான கொடுமைகளைக் களைவதற்கான பல்வேறு வழிமுறைகளை முன்னெடுத்துப் பேசினார். ஒடுக்கப்படும் மக்களுக்கான விடுதலையைப் பௌத்தத்தின் மூலம் பெற முடியும் என்று அவர் கருதினார். தமது வாழ்வின் இறுதிக் காலத்தில் (1944-1956) பௌத்த அமைப்பு உருவாக்கம், பௌத்தராக மாறுதல், பௌத்த தத்துவ வரையறை செய்தல் முதலியவற்றைச் செய்தார். அவரது பௌத்த வாழ்முறையைப் புரிந்துகொள்ளும் தேவை நமக்குண்டு.

OOO

இந்தியாவில் பெரும்பான்மை மக்களால் இன்று நம்பப்படும் இந்து மதத்தின் பல்வேறு கூறுகளை பௌத்த மதத்தின் கோட்பாடுகளோடு ஒப்பிட்டுப் பேசுகிறார், அம்பேத்கர். இதன் மூலம் எதிர்காலத்தில் பௌத்தமே மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் மதமாக இருக்க முடியும் என்று அம்பேத்கர் சொல்கிறார். கிறித்தவம், இஸ்லாம் ஆகியவை இயேசு கிறிஸ்து, முகமது நபி ஆகியவர்கள் கடவுளால் அனுப்பப்பட்ட சீடர்கள் என்று நம்புகின்றன. இந்து மதம் கிருஷ்ணன் வகுத்தளிக்கும் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டது. கிருஷ்ணன் கடவுள் கூட. ஆனால், புத்தர் கடவுள் என்பதே இல்லை என்கிறார். மாறாக, பௌத்தம் 'ஒழுக்கம்' என்ற சட்டகத்தின்மீது கட்டப்பட்டுள்ளது. இந்து மதத்தில் இப்படியான சட்டகங்கள் எதுவும் கூறப்படுவதில்லை. பௌத்தத்தில் பேசப்படும் 'ஒழுக்கநெறி' எனும் கோட்பாட்டை, ஒருவகையில் தந்தை பெரியார் முன்னிறுத்தும் 'சுயமரியாதை' என்பதோடு இணைத்துப்பார்க்கலாம். இந்தப் பின்புலத்தில் வேறு மதங்களுக்கு இல்லாத தனித்தன்மை பௌத்தத்தில் இருப்பதாக அம்பேத்கர்,

புத்தரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

"தனது சமயம் (மதம்) கடந்த காலத்தின் காலாவதியாகிப் போனவற்றால் கட்டுப்படுத்தப்படக் கூடாது என்று அவர் (புத்தர்) விழைந்தார். அது என்றும் பசுமையாயிருக்க வேண்டுமென்றும் எல்லாக் காலங்களிலும் பயன்படக்கூடியதாயிருக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார். அதனால்தான், தனது சமயம் துண்டாக்கப்படுவதற்கும் வெட்டிக் குறைக்கப்படுவதற்கும் தன்னைப் பின்பற்றுவோருக்குச் சுதந்திரம் அளித்தார். வேறு எந்தச் சமய போதனையாளரும் இத்தகைய துணிவைக் காட்டியதில்லை. பழுது பார்க்கப்படுவதை அனுமதிப்பதற்கே அவர்கள் பயப்பட்டனர். பழுது பார்ப்பதற்கு அளிக்கும் உரிமை, தாங்கள் பேணி வளர்த்த கட்டுமானத்தை அழிப்பதற்கும் பயன்படலாம் என்று அவர்கள் (பிற மதத்தினர்) அஞ்சினர். புத்தருக்கு அத்தகைய அச்சம் ஏதும் இருக்கவில்லை. தனது அடித்தளம் குறித்து அவருக்கு நம்பிக்கையிருந்தது" *(தொ. 20: பக். 164)*

இவ்வகையில், பௌத்தம் பிற சமயங்களிலிருந்து, குறிப்பாக இந்து மதத்திலிருந்து வேறான அடிப்படைகளைக் கொண்டிருப்பதை அம்பேத்கர் விரிவாகப் பதிவுசெய்கிறார். பௌத்தத்தின் கடவுள் இன்மை, சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகிய பண்புகள் இன்றும் நவீனத்துவ மரபாக இருப்பதை அம்பேத்கர் பதிவு செய்கிறார். புத்தர் உருவாக்கிக் கொடுத்த மதம் குறித்த இந்த மரபு, பின்னர் பல்வேறு பௌத்தப் பிரிவுகள் உருவாகக் காரணமாக அமைந்திருக்கிறது. அதில் சில பிரிவுகள் எதிர்விளைவுகளையும் பௌத்தத்தில் உருவாக்கியுள்ளன. இன்றைக்கு இலங்கையில் ஆட்சிபுரியும் பௌத்தம் கொண்டிருக்கக்கூடிய அதிகார மற்றும் மக்கள் அடக்குமுறைச் செயல்களை இதன் எதிர்விளைவுகளாகப் புரிந்துகொள்ள முடியும்.

உலகிற்குத் தேவையான புதிய சமயமாக பௌத்தத்தை புத்தர் உருவாக்கியுள்ளதாக அம்பேத்கர் கருதுகிறார். உலகில் உள்ள வேறு சமயங்கள் அனைத்தும் காலப்போக்கில் மறைந்துவிடும் என்றும் உண்மையான கம்யூனிசம் பௌத்தம்தான் என்றும் அம்பேத்கர் பதிவுசெய்கிறார். இந்தப் பின்புலத்தில் பௌத்தம் குறித்த வரையறையை அம்பேத்கர் பின்வருமாறு செய்துள்ளார்:

"ஏற்கெனவே இருந்துவரும் மதங்களில் ஒன்று இந்தச் சோதனைகளில் (மதம் மக்களுக்குத் தேவை என்ற சோதனை) ஒன்றில் தேறலாம். சில மதங்கள் இரண்டில் தேறலாம். ஆனால், இத்தகைய நல்ல கோட்பாட்டை முழுமையாகக் கொண்ட மதம் ஏதாவது இருக்கிறதா? இந்தப் போதனைகளில் எல்லாம் தேறும் ஒரே மதம், எனக்குத் தெரிந்தவரை பௌத்தம்தான். வேறு வகையில் கூறினால், உலகம் ஏற்றிருக்கவேண்டிய ஒரே மதம் பௌத்தம்தான். பழைய உலகிலிருந்து பெரிதும் வேறுபட்ட ஒரு புதிய உலகம் பிறந்தால், பழைய உலகைவிட அதற்கு மதம் கட்டாயம் தேவை. அப்போது, பௌத்தம்தான் இந்தத் தேவையை நிறைவு செய்யக்கூடியது.

இவ்வாறு கூறுவது மிகவும் விந்தையாகத் தோன்றக்கூடும். அகிம்சையைப் போதித்ததே புத்தர் செய்த ஒரே செயல் என்று புத்தரைப் பற்றி எழுதியவர்களில் பெரும்பாலோர் குறிப்பிட்டிருப்பதே இதற்குக் காரணம். இது மிகவும் பெரிய தவறாகும். புத்தர் அகிம்சையைப் போதித்தார் என்பது உண்மை. இதன் சிறப்பைக் குறைத்துக் கூற நான் விரும்பவில்லை. ஏனென்றால், இது ஒரு மாபெரும் கருத்தியலாகும். இந்தக் கருத்தியலைப் பின்பற்றினாலொழிய உலகத்தைக் காப்பாற்ற முடியாது. அகிம்சையைத் தவிர வேறு பல கருத்துநிலைகளையும் புத்தர் போதித்தார் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அவர் தமது சமயப் பரப்புரையின் ஒரு பகுதியாக சமூக சுதந்திரம், அறிவுத்துறை சுதந்திரம், அரசியல் சுதந்திரம் முதலியவற்றையும் போதித்தார். அவர், மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே சமத்துவத்தையும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே சமத்துவத்தையும் வலியுறுத்தினார். புத்தருடன் ஒப்பிடக் கூடிய சமயப் பரப்புரையாளர் எவரையும் காணமுடியாது. அவரது போதனைகள் மக்களது சமூக வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் எடுத்துரைப்பவையாக இருந்தன. அவரது கருத்தியல்கள் மிகவும் நவீனமானவையாக இருந்தன. மனிதன் இறந்தபிறகு, அவனுக்கு மேலுலகம் கிட்டச் செய்வதாக அவர் உறுதி கூறவில்லை. மாறாக, இந்தப் பூவுலக வாழ்க்கையிலேயே அவன் உய்வும் உயர்வும் பெற வழிசெய்வதே அவரது போதனையின் அடிப்படைக் கூறாக இருந்தது." *(தொ. 20, பக். 175).*

இவ்வகையில் அம்பேத்கர் பௌத்தத்தின் வரலாறு, அடிப்படை நோக்கங்கள் ஆகியவற்றை முன் வைக்கிறார். உலகில் உள்ள பிற மதங்கள் பெண் ஒடுக்குமுறை, சமத்துவமின்மை ஆகிய பிறவற்றைக் கொண்டுள்ளன. இந்து மதம், இந்த வகையில் குறிப்பிடத்தக்கது. இந்தத் தன்மைகளுக்கு எதிரான ஒரே மதம் பௌத்தம் என்பதாக அம்பேத்கர் தமது சொந்த அனுபவம், தாம் செய்த ஆய்வுகள் சார்ந்து உறுதிபட பேசுவதைக் காண முடிகிறது.

*OOO*

மனித சமூக வரலாற்றில் பெண்-ஆண் என்ற பாலின வேறுபாடு என்பது, சமூகத் தளத்தில் கொடுமையான முரண்பாடாகவே செயல்படுகிறது. நிலவுடைமை என்னும் சொத்துடைமைச் சமூகம் உருவாக்கிய கழிசடைக் கூறுகளில் இதுவும் ஒன்று. இருபதாம் நூற்றாண்டில் தொடங்கி, பெண் எனும் உயிரியின் சமத்துவம் கோரும் உரையாடல்கள் வலுப்பெற்றுவருகின்றன. இதில் தந்தை பெரியாரின் இடம் முதன்மையானது. அவர் அளவுக்கு எவரும் பெண் விடுதலை பேசியவர்கள் இல்லை. இந்தப் பின்புலத்தில் அண்ணல் அம்பேத்கர் பெண் ஒடுக்குமுறைக்கு எதிரான செயல்பாட்டில் எவ்வாறு இருந்தார் என்ற உரையாடல் அண்மைக் காலத்தில் விரிவாகவே முன்னெடுக்கப்படுகிறது. பொதுவான

பெண் விடுதலை என்ற உரையாடல் இங்கு மேற்கொள்ளப்பெறவில்லை. மாறாக, பௌத்த மரபோடு சார்ந்த பெண் பாலின முரண்கள் குறித்த உரையாடலை இப்பகுதியில் பேசலாம்.

'மகா பரிநிப்பான சுத்தா (இயல் V)' என்பது புத்தர் 'ஆனந்தா' எனும் பௌத்த பிக்குவுக்கு அளித்த பதில்களில் ஒன்று. புத்தர், பெண் ஒடுக்குமுறைக்கு எதிரான செயல்பாட்டாளர் என்று கூற முடியாது எனும் குற்றச்சாட்டை அம்பேத்கர் மறுக்கிறார். வாய்மொழி மரபில் தொடர்ந்து வந்த புத்தரின் கருத்துகள், பிறழ்ந்து, பதிவுசெய்யும்போது இடைச் செருகலாக அமைந்துவிட்டது என்று அம்பேத்கர் கருதுகிறார். பௌத்த பிக்குணிகளைப் பௌத்த மடங்கள் முழு உரிமையோடு நடத்தினவா என்ற பொதுவெளி உரையாடல் உள்ளது. இதற்குப் பதில் சொல்லும் வகையில் அம்பேத்கரின் உரையாடல் அமைந்துள்ளது. புத்தர், பெண்களை நடத்திய முறை தொடர்பான அம்பேத்கர் பதிவு கீழ்க்கண்டவாறு அமைகிறது:

"ஒரு பெண் குழந்தை பிறப்பதானது துயரமடைவதற்கான நேர்வல்ல, மகிழ்ச்சியடைவதற்கான நேர்வு என்று கருதியவரை, தங்களுடைய செயல்பாடுகளுக்கு ஒரு பெண்ணை அதிகாரத்தில் அமர்த்திய குடும்பங்கள் வீழ்ச்சியடைவதில் இருந்து காப்பாற்றப்பட்டன என்று எண்ணியவரை, பெண்ணை ஏழு செல்வங்களில் ஒருவர் என்று தயக்கமின்றி விவரித்தவரை, பெண் ஆக உயர்ந்த மதிப்புடைய பொருள் என்று கூறியவரை, பெண்களை வெறுப்பவர் என்றும் ஏளனமாகக் கருதுபவர் என்றும் எவ்வாறு கூறமுடியும்?" *(தொ. 20: பக்.53)*

என்று அம்பேத்கர் கேள்விகளை எழுப்புகிறார். புத்தர் பெண்கள் துறவிகளாக உருவானதைப் போற்றியவர். புத்தர் மனு ஸ்மிருதியைப் போல பெண்களை இழிவுபடுத்தியவர் இல்லை. இதனை நிலைநாட்ட பெண்களை இழிவுபடுத்தும் மனுஸ்மிருதியின் பகுதிகளை அம்பேத்கர் விரிவாக மேற்கோள் காட்டியுள்ளார். இவ்வகையில், பௌத்தம் பெண்களை இழிவாக நடத்தவில்லை. மாறாக, இந்து மதத்திலுள்ள மனுஸ்மிருதிதான் பெண்களை இழிவாக நடத்துகிறது என்று அம்பேத்கர் வாதிடுகிறார்.

பௌத்தம் பெண்களை இழிவாக நடத்துகிறது என்ற கட்டுரை ஒன்றுக்குப் பதில் எழுதிய அம்பேத்கர், மனுஸ்மிருதி போன்ற பிரதிகள், பெண்களை அடிமையாக நடத்திய முறைக்கு மாற்றாக, பெண் விடுதலைக்கு அடித்தளமிட்டவர் புத்தர்தான். ஆண்களைப் போல பெண்களும் துறவு வாழ்வை மேற்கொள்ளலாம் என்று அறிவித்தவர் புத்தர். புத்தருக்கு சிற்றரசர்கள் விருந்துக்கு அழைப்பு விடுத்தனர். ஆனால் புத்தர் அதை ஏற்காமல், அதே நேரத்தில் அமரபாலி எனும் கணிகையின் அழைப்பை ஏற்று, அவரது இல்லத்திற்கு உணவருந்தச் சென்றார். அமரபாலி புத்தரின் முக்கியமான சீடர்களில் ஒருவர். இவ்வாறு பெண்கள் மீதான புத்தரின் செயல்களை அம்பேத்கர் பதிவுசெய்துள்ளார்.

மதங்கள் என்பவை ஆணாதிக்க மரபை முதன்மையாகக் கொண்டவை, பெண்களை ஒடுக்குபவை என்பது பொதுவெளியில் பரவலாக உள்ள கருத்து. இந்து மதத்தைப் பொறுத்தவரையில் அது சரியே. ஆனால், பௌத்த நாடுகளான இலங்கை, பர்மா ஆகியவற்றில் அந்த நிலை இல்லை என்று அம்பேத்கர் பதிவு செய்கின்றார். இந்து மதத்தில் உள்ள பெண் ஒடுக்குமுறைகளை விரிவான உரையாடலுக்குட்படுத்துகிறார், அம்பேத்கர். பௌத்தத்தில் அத்தன்மை இல்லை என்பது அவரது முடிபாக இருப்பதைக் காண முடிகிறது.

*OOO*

மார்க்சியத்திற்கும் பௌத்தத்திற்கும் இடையிலான பல்வேறு கூறுகளையும் அம்பேத்கர் விரிவாகப் பதிவுசெய்துள்ளார். தமது மார்க்சிய வாசிப்பு முறை குறித்துப் பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

"நான் அரசியல் துறை மாணாக்கனாக இருந்துள்ளேன். பொருளாதாரத் துறை மாணவனாக இருந்துள்ளேன். பொருளாதாரத் துறைப் பேராசிரியராக இருந்துள்ளேன். கார்ல் மார்க்சையும் கம்யூனிசத்தையும் பற்றி ஆராய்வதில் நான் நிறைய நேரத்தைச் செலவிட்டுள்ளேன். அதே நேரம், புத்தரின் தம்மத்தைப் படிப்பதிலும் பெரிதும் ஆழ்ந்து ஈடுபட்டுள்ளேன். இரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்த பிறகு ஒரு திட்டவட்டமான, தீர்மானமான முடிவுக்கு வந்தேன். உலகை இன்று ஒரு மாபெரும் சிக்கல் எதிர்நோக்குகிறது. உலகில் துக்கம் நிலவுகிறது. அந்தத் துக்கம் அகற்றப்பட வேண்டும் என்பதே அந்தச் சிக்கல். இதற்குப் புத்தர் தெரிவித்துள்ள கருத்துகள்தான், தீர்வுதான் மிகவும் பாதுகாப்பானது, சிறப்பானது. இதுவே சிறந்தது என்ற திட்டவட்டமான முடிவுக்கு வந்தேன்" *(தொ.20 ப.144)*

இந்தியச் சமூகம் என்பது பல்வேறு பார்ப்பனியக் கருத்து நிலைகளைக் கொண்டு செயல்பட்டுவந்தது. அந்தக் கருத்து நிலைகளைச் சட்டமாக ஆக்கியதுதான் மனு தருமம். பௌத்தத்துக்கு எதிரான எதிர்ப்புரட்சியில் உருவாக்கப்பட்ட மனு தருமத்தை எதிர்த்து பௌத்தம் போராடியது. இதுதான் இந்தியாவின் பழைய வரலாறு என்று அம்பேத்கர் பதிவுசெய்கிறார். இந்த வரலாற்றைப் புரிந்து கொள்வதும் அதனை நடைமுறைப்படுத்துவதும் இன்றைய தேவை என்று அம்பேத்கர் கருதுகிறார். இந்தப் பின்புலத்தில் மார்க்சியம் என்பது மக்கள் சமூகம் பற்றிய முதன்மையான, சிறந்த தத்துவம் என்பதை மறுக்கவில்லை. ஆனால், இந்தியாவிற்கும் இன்றைய உலகத்திற்கும் உண்மையான மார்க்சியம் பௌத்தம்தான் என்று பல நிலைகளில் அம்பேத்கர் உரையாடலுக்குட்படுத்துகிறார். இரண்டு தத்துவத்திற்கும் பொதுவான குறிக்கோள் ஒன்றுதான். நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள் வேறுபடுகின்றன என்கிறார்.

பௌத்தத்தோடு மார்க்சியத்தை ஒப்பிட்டு, மார்க்சியத்தில் பேசப்படும் கருத்துகள், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புத்தர்

பேசியதன் நவீன வடிவம்தான் என்கிறார். மார்க்சியம் முதன்மைப்படுத்தும் 'சுரண்டல்', 'தனிச்சொத்துரிமை' ஆகியவற்றை பௌத்தம் அன்றே பேசியுள்ளது என்கிறார். 'துக்கம்' என்ற சொல்லின் இன்றைய வடிவம்தான் 'சுரண்டல்' என்கிறார். பௌத்தத் துறவிகளின் வாழ்முறை சொத்துடைமைக்கு எதிரானது. பௌத்தம் பிக்குகளுக்குச் சொத்துடைமையை மறுக்கின்றது என்பதைப் பதிவுசெய்கிறார். கம்யூனிசம் முன்னிறுத்தும் கட்சி அமைப்பு என்பதைத்தான் பௌத்தம் 'சங்கம்' என்று வடிவமைத்துள்ளது என்றும் பேசுகிறார்.

புத்தரா, கார்ல் மார்க்சா? என்று கண்டெடுக்கப்பட்ட அம்பேத்கர் கையெழுத்துப் படியும் காட்மாண்டில் பௌத்த மாநாட்டில் இதே தலைப்பில் அம்பேத்கர் பேசியதும் நம்முன் உள்ளன. இவற்றைப் பற்றி அம்பேத்கர் உரையாடலுக்குட்படுத்தும்போது, இரண்டையும் முரண்பட்ட தத்துவங்களாக முன்வைக்கவில்லை. புத்தர் தமது காலத்தில் முன்வைத்த சமூகத்துக்கான தொடர்ச்சிதான் கார்ல் மார்க்சின் கருத்துகள் என்கிறார். ஆனால், நடைமுறைப்படுத்துவதில் முரண்பாடுகள் இருப்பதாகக் கூறுகிறார். புத்தர் கூறும் பஞ்சசீலம், அதன் விரிவாக அமைந்துள்ள எண்வழிப்பாதை, அப்பாதைகளை நடைமுறைப்படுத்தத் தடைகளாக அமைந்துள்ள பத்து நிப்பானங்கள், அவற்றை வெற்றிகொள்ள கைக்கொள்ளவேண்டிய பத்து ஒழுக்கங்கள் என்பதை விரிவாகப் பேசும் அம்பேத்கர், இவைதான் பௌத்த தத்துவம் முன்வைக்கும் பொதுவுடைமைத் தத்துவம் என்கிறார். பௌத்தம் முன்மொழியும் கம்யூனிசம் இதுதான் என்பது அவரது வாதம். கம்யூனிசம் முன்வைக்கும் "வன்முறை"; "பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்" ஆகியவற்றை மட்டும் பௌத்தம் உடன்பாடாகக் கொள்ள இயலவில்லை என்கிறார். இது குறித்த அம்பேத்கரின் பதிவு பின்வருமாறு அமைகிறது.

"என்னுடைய கம்யூனிஸ்ட் நண்பர்களைச் சந்திக்கும்போது, இரண்டு அல்லது மூன்று கேள்விகளுக்கு விடையளிக்கும்படி எப்போதும் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். ஆனால், அவர்களால் என் கேள்விகளுக்கு விடையளிக்க முடியாது என்பதை வெளிப்படையாக நான் கூறியாக வேண்டும். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் எனப்படுவதை வன்முறை மூலம்தான் அவர்கள் உருவாக்குகின்றனர். செல்வம் படைத்த அனைவரையும் அவர்கள் ஒட்டாண்டியாக்குகின்றனர். அவர்களது அரசியல் உரிமையைப் பறிக்கின்றனர். சட்டமன்றத்தில் அவர்கள் இடம்பெற முடியாது; வாக்களிக்கும் உரிமை அவர்களுக்கு இருக்காது. அவர்கள் நாட்டின் இரண்டாந்தர குடிமக்களாகவே இருப்பார்கள். ஆளப்படுபவர்களாக இருப்பார்கள்; ஆட்சியில் அல்லது அதிகாரத்தில் பங்குகொள்ளக்கூடியவர்களாக இருக்க மாட்டார்கள்.

'சர்வாதிகாரம் என்பது மக்களை ஆள்வதற்கு ஒரு சரியான முறை என்று நீங்கள் நினைக்கிறீர்களா?' என நான் கேட்கும்போது, அவர்கள் என்ன விடை சொல்லுகிறார்கள் தெரியுமா? 'இல்லை நாங்கள் அப்படி நினைக்கவில்லை; சர்வாதிகாரத்தை நாங்கள் விரும்பவில்லை.' 'அப்படியானால் நீங்கள் எப்படி அதை அனுமதிக்கிறீர்கள்' என்று நாம் கேட்டால், அதற்கு அவர்கள் என்ன விடை கூறுகிறார்கள் என்று நினைக்கிறீர்கள். "இது இடைக்கால கட்டம், இதில் சர்வாதிகாரம் இருந்தாக வேண்டும்" என்கின்றனர். நாம் தொடர்ந்து, "அது சரி, இந்த இடைக்கால கட்டம் என்பது எத்தனை ஆண்டுகள்? இருபது ஆண்டுகளா? நாற்பது ஆண்டுகளா, ஐம்பது ஆண்டுகளா?" என்று கேட்கிறோம். விடை இல்லை. "பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் எப்படியோ தானாகவே மறைந்துவிடும்" என்று அரைத்தமாவையே அரைப்பதுபோல் விடையளிக்கின்றனர்.

நல்லது. அவர்கள் கூறுவது போல் சர்வாதிகாரம் மறைந்துவிடும் என்றே வைத்துக்கொள்வோம். இங்கு நான் ஒரு கேள்வி கேட்கிறேன். "சர்வாதிகாரம் மறைந்துவிடும்போது என்ன நடைபெறும்? அதனிடத்தில் எது இடம்பெறும்? மக்களுக்கு ஏதேனும் ஒரு வகையான அரசாங்கம் தேவையில்லையா?" இதற்கு அவர்களிடமிருந்து விடை இல்லை.

பிறகு, மீண்டும் புத்தரிடம் செல்லுகிறோம். அவருடைய தம்மம் பற்றிய இந்தக் கேள்வியைக் கேட்கிறோம். அவர் என்ன கூறுகிறார்? 'மனிதனது மனத்தையும் உலகத்தின் மனத்தையும் மாற்றினாலொழிய உலகத்தைச் சீர்ப்படுத்த முடியாது' என்று புத்தர் உலகுக்குக் கூறியது மிகப் பெரிய செய்தியாகும். மனம் மாறினால், கம்யூனிச அமைப்புமுறையை மனம் ஏற்றுக்கொண்டால், அதனை நம்பிக்கையோடு நேசித்தால், அது நிரந்தரமாகிவிடுகிறது. மனிதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு ஒரு படைவீரனோ அல்லது காவல் துறை அதிகாரியோ தேவையில்லை. ஏன்? இதற்கான விடை இதுதான். புத்தர் மனச்சான்றை ஊக்குவித்து, நீங்கள் சரியான வழியில் செல்லுவதற்கு வழிகாட்டும் காவலாளியாக அதை மாற்றியிருக்கிறார்." (தொகுதி 20: பக் 142-43)

அம்பேத்கரை, மார்க்சியத்துக்கு நேரெதிர் கருத்துநிலை கொண்ட சித்தாந்தவாதியாகக் காணமுடியவில்லை. அவர் பௌத்தம் பேசும் பொதுவுடைமையை முன்னிறுத்துகிறார். சமூக அமைப்பு, அதில் செயல்படும் சக்திகள், அதற்கென உருவாகும் சமூக மாற்றத்திற்கான செயல்பாடுகள், காலம், இடம்சார்ந்த சூழல்கள் எனப் பல பரிமாணங்களில் உரையாடல்கள் இதற்குத் தேவை. இதை அம்பேத்கரின் உரையாடலாகப் புரிந்துகொள்ள முடிகிறது. அம்பேத்கருக்கு மார்க்சியத்துடன் பகைமுரண் இல்லை. நட்பு முரணாகவே மார்க்சியத்தை எதிர்கொள்கிறார் என்று கருத முடிகிறது

OOO

## பகுதி ஆ

பௌத்தக் கருத்தியல் சார்ந்து இந்தியாவில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்வுகளையும் பதிவுசெய்த அம்பேத்கர், தனது சொந்த வாழ்க்கையில் பௌத்தத்தின் இடம் குறித்தும், அது தொடர்பான அவரது

செயல்கள் குறித்தும் விரிவாகப் பதிவுசெய்துள்ளார். பௌத்தத்திற்கு மாறியதன் மூலம், தனது வாழ்க்கை இலட்சியம் முழுமையுற்றதாகவும் அம்பேத்கர் கருதினார். இந்தப் பின்புலத்தில், பௌத்தக் கோட்பாடுகள் குறித்து அடிப்படையான நூல் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அவர் திட்டமிட்டார். அதனைத் தமது இறுதிக்கால பணியாகவும் செய்து முடித்தார். அவ்வாறு அவர் உருவாக்கிய நூலே, புத்தர் - அவரது தம்மம் என்னும் நூல். இந்நூல் உருவாக்கத்திற்கான தமது நோக்கம் குறித்து அவரது பதிவு கீழ்க்கண்டவாறு அமைகிறது:

“இந்தியாவில் பௌத்தத்துக்குப் புத்துயிர் ஊட்டுவதற்கு எடுத்துக்கொள்ளவேண்டிய முதன்மை நடவடிக்கைகள் என்பதற்கு இப்போது வருவோம். இது தொடர்பாக, என் மனத்தில் தோன்றியதை இங்குக் கூறுகிறேன்.

பௌத்தம் பற்றிய நூலை அதாவது, பௌத்தம் பற்றிய சிறு நூலைத் தயாரித்தல், பௌத்தத்துக்கு மாறியவர்களுக்கு இது பெரும் துணையாக இருக்கும். புத்தரின் போதனைகள் அடங்கிய ஒரு சிறு நூல் இல்லாதிருப்பது பௌத்தத்தைப் பரப்புவதற்குப் பெரிதும் இடையூறாக இருக்கிறது. பாலி மொழியிலுள்ள 73 தொகுதிகளை எளிய மனிதர்கள் படிக்க முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. பௌத்தத்தைவிட, கிறித்துவ மதத்துக்கு ஒரு பெரிய வாய்ப்பு இருக்கிறது. அதாவது, இயேசு கிறிஸ்து மக்களுக்கு விடுத்துச்சென்ற செய்தி, பைபிள் என்னும் ஒரு சிறு நூலில் அடங்கியுள்ளது. ஆனால், பௌத்தத்தைப் பரப்புவதற்கு இத்தகைய நூல் ஏதும் இல்லை. இந்த இடர்பாடு அகற்றப்பட வேண்டும். புத்தரைப் பற்றிய நூல் முதன்மையாக அவரது சமூக மற்றும் அறநெறி போதனைகளை எடுத்துரைப்பதாக இருப்பது கட்டாயம்.” (தொகுதி 20: பக். 201)

மேற்குறித்த பின்புலத்தில், மதம் மனித வாழ்க்கைக்குத் தேவை என்றும், அப்படியான மதம் புத்தரின் தம்மமே என்றும் அம்பேத்கர் கருதினார். அறிவியல் அடிப்படையிலான மதம், புத்தர் உருவாக்கிய தம்மத்தை அடிப்படையாகக் கொண்ட பௌத்தம். தான் தொடர்ந்து முப்பத்தைந்து ஆண்டுகளாக ஆய்வுசெய்து இந்த முடிவுக்கு வந்ததாகவும் அம்பேத்கர் எழுதுகிறார்.

தம்மம் என்ற சொல் பிராகிருதச் சொல். பாலி மொழியிலும் புழக்கத்தில் உள்ளது. தமிழில் உள்ள பிங்கல நிகண்டு, இச்சொல்லுக்கு நற்செயல் என்று பொருள் தருகிறது. உரிச்சொல் நிகண்டு, தரும நூல் மற்றும் விதிகளை உள்ளடக்கிய நூல் என்று பொருள் தருகிறது. இந்தச் சொல்லுக்கு தமிழ் அகராதிகள் நற்செயல், விழி, தம்மம், ஒழுக்கம், கடமை, நீதி, தானம், இயற்கை, அறம் முதலிய பொருள்கள் இருப்பதாகச் சொல்லுகின்றன. எனவே, தம்மம் என்பதை அறநூல் அல்லது தரும நூல் என்று வரையறை செய்யலாம்.

புத்தரின் மறைவுக்குப் பின் அவரது கருத்துகள், ‘முப்பிடகங்கள்’ என்று தொகுக்கப்பெற்றன. புத்தர் மறைந்த ஆறு மாதத்திற்குப் பின் ஏறக்குறைய ஐந்நூறு புத்த பிக்குகள் ஓரிடத்தில் கூடினர். இவர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து புத்தரின் போதனைகளைத் தொகுத்தனர். அவ்வாறு தொகுக்கப்பட்டவைதான் விநய பிடகம், சுத்த பிடகம், சுபிதம்ம பிடகம் என்னும் முப்பிடகங்கள் ஆகும். ஒவ்வொரு பிடகத்திலும் பல்வேறு உட்பிரிவுகள் உண்டு. சுத்த பிடகத்தில் உள்ள ஐந்து பிரிவுகளில் ஒன்று, குத்தக நியாயம். குத்தக நியாயம் 15 சிறு நூல்களைக் கொண்ட தொகுப்பு. அந்தப் பதினைந்து குறுநூல்களில் ஒன்றாகவே ‘தம்ம பதம்’ என்ற நூல் அமைந்துள்ளது. அந்த நூல் 26 வர்க்கங்களைக் கொண்டுள்ளது.

அம்பேத்கர் தம்ம பதம் நூலை அடிப்படையாகக் கொண்டு புத்தர் - அவரது தம்மம் எனும் நூலை உருவாக்கினார் என்று கூற முடியாது. ‘தம்மம்’ என்ற சொல்லை மட்டும் ‘தம்ம பதம்’ என்ற நூலிலிருந்து எடுத்துக்கொண்டுள்ளார். மற்றபடி தம்ம பதம் நூலுக்கும் அம்பேத்கரின் நூலுக்கும் நெருக்கமான தொடர்புள்ளதாகக் கருத முடியாது.

இந்த நூல் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்த புத்தர் – அவருடைய சமயத்தின் எதிர்காலம் எனும் கட்டுரையில் (பார்க்க: தொ. 20, ப. 162) அம்பேத்கர் விரிவாகப் பேசியுள்ளார். அதனைப் பின்வருமாறு தொகுத்துக்கொள்ளலாம்.

- பௌத்த காவியத்தை உருவாக்க வேண்டும்.
- விரிந்து பரந்துள்ள பௌத்தத்தின் கருப்பொருளைப் பேசுவதாக அது அமைய வேண்டும்.
- பிற மதங்களுக்கு உள்ள, மதத்தை அடையாளப்படுத்தும் தனிநூலாக அமைய வேண்டும். தம்ம பதம் அவ்வகையான அடையாளத்தைக் கொடுக்கவில்லை.
- வெறும் கோட்பாடுகளையும் நம்பிக்கைகளையும் மட்டும் முன்வைக்கக் கூடாது.
- கற்பனையைத் தூண்டும் வகையில் ஒரு கதையைப் போல் எடுத்துரைக்க வேண்டும்.
- கட்டுக்கதைகள், வீர காவியம், நற்செய்திகள் அதில் இடம்பெற வேண்டும்.
- புத்தரின் வாழ்க்கை வரலாறு இடம்பெற வேண்டும்.
- புத்தரின் முதன்மையான உரையாடல்கள் இடம்பெற வேண்டும்.
- சடங்குகள், தீட்சை கொடுத்தல் பற்றிப் பேசும்போது, சமயம் சார்ந்த உயிரோட்டமான மொழியில் அமைய வேண்டும்.
- மந்திரம் சார்ந்த மொழியில் அமைய வேண்டும்

அம்பேத்கர் 1950 ஆம் ஆண்டு, மகாபோதி இதழில் எழுதிய மேற்குறித்தவற்றை 1956 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தியதே அவரது புத்தர் - அவரது தம்மம் எனும் பௌத்தத்தின் கைநூல் அல்லது பௌத்தத்தின் விவிலியம் அல்லது பௌத்த குரான் ஆகும்.

இந்நூலை எட்டு நூல்களாக அம்பேத்கர் வகைப்படுத்துகிறார். அவை, சித்தார்த்தர் எவ்வாறு புத்தர் ஆனார்? புத்தர் பௌத்தத்தில் யார் யாரை இணைத்தார்? பௌத்தத்தின் கோட்பாடுகளாக எவற்றைப் போதித்தார்? பௌத்த அடிப்படைகள்

எவையெவை என்று எவ்வாறு வரையறை செய்தார்? பௌத்தம் எவ்வகையான அமைப்பாக இருக்க வேண்டும்? சமகாலத்தில் உள்ளவர்களை பௌத்தத்தில் எவ்வாறு சேர்ப்பது? புத்தரின் இறுதிக் காலம் எப்படிக் கழிந்தது? புத்தர் எவ்வாறு மாமனிதராகப் போற்றப்படுகிறார்? முதலிய வினாக்களை எழுப்பிக்கொண்டு அதற்கான விடைகளை எழுதுவதாகவே புத்தர் - அவரது தம்மம் என்ற நூல் அமைந்துள்ளது.

"புத்தம் சரணம் கச்சாமி", "தம்மம் சரணம் கச்சாமி", "சங்கம் சரணம் கச்சாமி" என்பது "நான் புத்தரைப் பின்பற்றுகிறேன்; நான் தம்மத்தைப் பின்பற்றுகிறேன்; நான் சங்கத்தைப் பின்பற்றுகிறேன்" என்ற பௌத்தத்தின் அடிப்படை மந்திரமாக இருக்கிறது. இத்தன்மையின் உருவாக்கத்தில் முதன்மையாகச் செயல்பட்ட புத்தரின் வாழ்க்கை வரலாறு, முதல் நூலாக அமைகிறது. புத்தர் பிறந்த குலத்தின் பின்புலம், அவருடைய குழந்தைப் பருவம், திருமணம், குடும்பத்தைப் பிரிந்து செல்லுதல் ஆகியவை முதல் நூலின் முதல் பகுதியாக அமைகின்றன. இந்த நூலின் இரண்டாவது பகுதியில், புத்தர் நிரந்தரமாகத் துறவு மேற்கொள்ள முடிவு செய்ததின் விவரங்கள் பேசப்படுகின்றன. உலகத்தில் நிகழும் துன்பங்களைக் கண்டு, அதில் வெறுப்புற்றுத் துறவியானார் என்று வழக்கமான கருத்துக்கு மாறாக, இத்துன்பங்கள் ஏன் வருகின்றன? என்ற தேடலில் தொடங்கி, புதிய புத்தொளியைப் புத்தர் பெறுகிறார் என்பதாக இப்பகுதியை அம்பேத்கர் உருவாக்கியுள்ளார்.

புத்தர் தாம் கண்டறிந்த புத்தொளியைப் பலரிடம் கொண்டுசேர்க்கும் பணியைத் தொடர்கின்றார். அப்பகுதி, இரண்டாம் நூலாக அமைகிறது. இப்பகுதியில், புத்தர் பல்வேறு இடங்களில் நிகழ்த்திய பேருரைகள் குறித்த பதிவுகள் உள்ளன. சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ள மக்கள் பலரும் புத்தரோடு இணைந்து, அவரது பௌத்த மரபை முன்னெடுக்கின்றனர். உரிமை மறுக்கப்பட்டவர்களும் சமூகத்தில் அவமதிக்கப்பட்டவர்களும் பெண்களும் குற்றவாளிகளும் புத்தரோடு எவ்வாறு இணைந்தனர் என்பதை இந்நூல் பகுதி பேசுகிறது. இந்த உரையில், பௌத்தம் விளிம்பு நிலை மக்களையும் இணைத்த ஒரு சமய அமைப்பு என்று அம்பேத்கர் பதிவுசெய்கிறார்.

மூன்றாவது நூல், புத்தர் கற்பித்த அறமரபு. அதாவது தம்மம், தம்மம் அல்லாதது, சத்தம்மம் முதலியவை குறித்த விளக்கமாக அமைகிறது. புத்தர், தான் உருவாக்கியுள்ள இந்த அறநெறி பற்றி தனக்கென எந்த உரிமையும் கோரவில்லை. வாழ்க்கையில் தூய்மை, வாழ்வில் முழுமை, தடைகளைத் தவிர்த்தல், இயற்கை மரபுகளைப் போற்றுதல், கடவுள், வேள்வி போன்ற நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்ளாமை, மனத்தில் மாசில்லாமல் வாழ்தல், கல்வி பெறுதல், மனித உறவுகளைப் பேணுதல் ஆகியவை குறித்த விரிவான விளக்கங்களை இப்பகுதியில் பெற முடிகிறது.

நான்காவது நூல், 'மதம்' என்பதன் வரையறைகளைப் பேசுகிறது. 'தம்மம்' என்பது மதமா? அது எவ்வாறு அறநெறியாகச் செயல்படுகிறது? புத்தரின் ஆன்மா இல்லை என்ற கருத்துநிலை, இந்து மதத்தின் ஆன்மா, மறுபிறப்பு, பாவம்-புண்ணியம் முதலியவற்றிலிருந்து முற்றிலும் முரண்பட்டது என்பதை இந்தப் பகுதி வலியுறுத்துகிறது. மறுபிறப்பு, கருமம், அகிம்சை, பௌத்த வாழ்முறை ஆகியவற்றைப் பற்றிய விளக்கமாகவும் இப்பகுதி அமைகிறது. இல்லறத்தார், நல்லொழுக்கம் பேணுதல், நன்னெறி, ஆகியவை குறித்த பேருரைகள் அமைந்த பகுதியாகவும் உள்ளது. பௌத்தம் ஓர் அறநெறி என்பதன் விரிவான விளக்கங்களை இப்பகுதியில் பெற முடிகிறது.

ஐந்தாவது நூல், பௌத்தம் என்பது எவ்வாறு அமைப்பாகச் செயல்பட வேண்டும்? என்று பேசுகிறது. அது சங்கம் ஆகும். இந்தச் சங்கத்தில் பிக்குகள் எவ்வாறு செயலாற்றுவது? பிக்குகளின் வாழ்முறை ஆகிய கூறுகள் பேசப்படுகின்றன. ஆறாவது நூலில், புத்தரின் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் பௌத்தத்திற்கு எவ்வகையில் உதவினர். அதன் மூலம் பௌத்தத்தை எப்படி வளர்த்தெடுக்க முடிந்தது என்பதை அம்பேத்கர் பதிவு செய்கிறார். மேலும், புத்தரின் பகைவர்கள், அவரது கருத்துநிலை மீது விமர்சனம் செய்தவர்கள், நண்பர்கள் முதலிய பல்வேறு கூறுகளையும் பதிவுசெய்திருப்பதைக் காண்கிறோம். நூல் ஏழு மற்றும் எட்டில், புத்தரின் இறுதிக்காலம் பற்றிய செய்திகளின் பதிவு உள்ளது. சித்தார்த்த கௌதமர் எவ்வாறு கௌதம புத்தராக மாறிய மாமனிதர் ஆனார் என்ற விவரங்களை அம்பேத்கர் எழுதுகிறார். புத்தரின் மனிதாபிமானம், விருப்பம், விருப்பமின்மை முதலிய பல்வேறு தன்மைகளும் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

பௌத்தநெறி எட்டு நூல்களாக உருவாக்கப்பட்டதன் மூலத் தரவுகள், பாலி மொழியில் உள்ளவை இணைப்பாகத் தரப்பட்டுள்ளன. இவ்வகையில், அம்பேத்கர் உருவாக்கிய புத்தர் - அவரது தம்மம் எனும் நூல், பௌத்தத்தின் அடிப்படை நூலாகவும் அடையாள நூலாகவும் அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

பௌத்தம் முன்னிறுத்தும் அரசியல், பௌத்த வரலாறு, பௌத்த மூலநூலாக, புத்தர் - அவரது தம்மம் உருப்பெற்று வரும் பாங்கு ஆகியவற்றைப் பேசும் தொகுதிகளாக 20 முதல் 23 வரையுள்ள நான்கு தொகுதிகள் அமைகின்றன. அம்பேத்கரின் ஆக்கங்களில் உள்ள இந்தத் தொகுதிகள், இந்திய சமூக வரலாற்றில் பௌத்தம் எவ்வாறெல்லாம் முதன்மை பெறுகிறது, அது எவ்வாறெல்லாம் வளர்ந்துவந்தது, புத்தர் தமது அறநெறி மரபை எவ்வாறு பௌத்தமாக வடிவமைத்தார் முதலிய பலவற்றைக் குறித்த அரிய ஆவண உரையாடலாக அமைகிறது.

*முதன்மைச் சான்று அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் தொகுதிகள் 20, 21, 22, 23*

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர், ஓய்வு பெற்ற பேராசிரியர்.**


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 130/-





₹ 690/-




₹ 330/-




₹ 115/-




₹ 550/-





₹ 400/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

கட்டுரை



# உலகத் தலைவர்களை தமிழர்களுக்கு அறிமுகப்படுத்திய வெ.சாமிநாதசர்மா

எனது தந்தையார் நான் 7ஆவது வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது சென்னை தியாகராய நகரில் இப்போது ஜி.ஆர்.டி நகைக்கடை உள்ள உஸ்மான் சாலைக்கு உள்ள சர்மாஜி என்று நண்பர்களால் அழைக்கப்படும் வெ.சாமிநாதசர்மா வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அது ஒரு சிறுகுடில். குடிலைச்சுற்றி 5-6 சிறிய மாமரங்கள். சாமிநாத சர்மா, சிறிது குள்ளமானவர். சிவந்த மேனி, பளபளக்கும் மொட்டைத் தலை, வெள்ளை வெளேரென்று கதர் வேஷ்டியும் கதர் ஜிப்பாவும் அணிந்திருந்தார். இப்புகழ் பெற்ற எழுத்தாளர் சர்மாஜியின் வீட்டின் அருகிலுள்ள நூல் வெளியீட்டாளர் சின்ன அண்ணாமலையை, வீட்டில் இராஜாஜி சந்தித்த பிறகு, சில சமயம் உணவை உண்டபிறகு நடந்து சென்று சர்மாஜியுடன் அளவளாவுவது வழக்கம் என்று தியாகி சின்ன அண்ணாமலை தனது நூலில் குறிப்பிடுகிறார்.

சர்மாஜியின் பெயருக்கு முன் இருக்கும் வெ.வெங்களத்தூர் என்ற ஊர், திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு வட்டத்தில் உள்ள சிற்றூர். அங்குதான் இவர் 17.9.1895இல் பிறந்தார். தன் வரலாற்று நூலை எழுதாத இவர் இருபதுக்கும் மேற்பட்ட மற்றவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். இவருடைய தந்தை



டாக்டர் சு.நரேந்திரன்

பெயர் முத்துசுவாமி ஐயர், தாயார் பெயர் பார்வதி. நாகேசுவர சர்மா, சாமிநாத சர்மா, துரைசாமி சர்மா என்று மூன்று விதப் பெயர்கள் இவருக்குச் சூட்டப்பட்டாலும் சாமிநாத சர்மா என்ற பெயரே நிலை பெற்றது. இவருடன் ஒரு சகோதரி, ஒரு தம்பி பிறந்தாலும் இருவரும் இறந்து விட்டார்கள். இவருடைய கல்வித் தகுதி உயர் நிலைப்பள்ளிக் கல்வியோடு முடிவுற்றது. 'உண்மையில் பள்ளிக் கூடத்தை விட்ட பிறகுதான் என் படிப்பு ஆரம்பமாயிற்று' என்று சாமிநாத சர்மா தமது கல்வி வளர்ச்சியைப் பற்றிக் கூறுவதுண்டு.

சாமிநாத சர்மா ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய பாட்டனாரும், தந்தையும் பன்மொழிப் புலமை பெற்றவர்கள். இந்த சூழலே சர்மாவை இளமையிலேயே எழுதத் தூண்டியது. பதினேழாவது வயதிலேயே முதன் முதலில், "இந்து நேசன்", என்னும் இலக்கிய இதழில் எழுதினார். கட்டுரை எழுதும் முயற்சியில் முன்னேறிய சாமிநாத சர்மா, நூல் எழுதும் முயற்சியிலும் துணிவு பிறந்து, அது நாடகம் எழுதும் முயற்சியாக மலர்ந்து, 1921இல் 'ஹேமாங்கி' எனும் ஆங்கில நாடகத்தை எழுதினார். ஆனால் இது வெளிவரவில்லை எனினும், மனம் தளர்ச்சியுராது தமிழில், 'பாணபுரத்து வீரன்' எனும் நாடக நூலை 1923இல் விடுதலை இயக்க பிரச்சாரத்திற்காக எழுதி அது டி.கே.எஸ். பிரதர்ஸ் நாடகக் குழுவினரால் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

சாமிநாத சர்மாவின் 'கௌரிமணி' எனும் முதல் நூல் 1914இல் வெளியிடப்பட்டது. இந்த நூல் வெளிவந்த ஆண்டிலேயே சாமிநாத சர்மா 14 வயதான மங்களம் என்னும் பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டார். இவர்கள் பெற்றெடுத்த குழந்தைகள் நூல்கள்தான்.

சாமிநாத சர்மாவின் எழுத்துலகில் ஒரு திருப்பம் 1914இல் ஏற்பட்டது. 1917இல் திரு. வி. கல்யாணசுந்தரம் முதலியாரை ஆசிரியராகக் கொண்ட தேசபக்தன் என்னும் அக்கால தலை சிறந்த தமிழ் நாளிதழில் துணை ஆசிரியராக இணைந்து பணியாற்றினார். அப்போது சர்மாவின் தமிழ் நடையில் தேசிய நோக்கில் புதிய பரிமாணங்கள் வளர்ச்சியுற்றன. பிறகு திரு. வி.க. அவ்விதழ் ஆசிரியர் பொறுப்பில் இருந்து விலகி நவசக்தி என்னும் தமிழ் வார இதழை 1920இல் தொடங்கியதும் அதிலும் சாமிநாத சர்மா துணையாசிரியாரானார். இவர் தமிழ்த் தென்றலின் தம்பி என்று போற்றப்பட்டவர். அவருடன் குரு-சீடன் உறவு பிணைப்போடு பணியாற்றினார்.இந்நிலையில் சர்மாஜி சுதந்திரமான எழுத்துத்துறையில் ஈடுபாடு கொண்டதால் அரசுப் பணியை உதறிவிட்டு, இதழியல் துறையைத் தேர்ந்தெடுத்தார். மூன்று ஆண்டுகள் தேசபக்தன் நாளேட்டிலும், பன்னிரெண்டு ஆண்டுகள் நவசக்தி கிழமை இதழிலும் பணியாற்றியபின் இரண்டாண்டுகள் ஆந்திரகேசரி டி.பிரகாசம் நடத்திய சுயராஜ்யா தமிழ் நாளேட்டிலும் 1924-1926 வரை உதவியாசிரியராகப் பணியாற்றினார். பிறகு இதழியல் துறையில் இருந்து விலகி 1926-27ஆம் ஆண்டுகளில் மைசூரில் வேலை பார்த்தபின் அடையாறு பிரம்மஞான சபை நூல் வெளியீட்டுத்துறையில் பணிபுரிந்தார்.

அதன் பிறகு பர்மா (மியான்மார்)விற்கு (1932) சென்று பன் மொழி அறிந்த மனைவியுடன் 10 ஆண்டு காலம் வாழ்ந்தார். அங்கு "பாரதபந்தர்" என்னும் சுதேசிப் பொருட்கள், கதர், நூல்கள் முதலியவைகளை விற்கும் கடையை நடத்தினார்.

இரங்கூனில் 1936இல் அரு. சொக்கலிங்கம் செட்டியார் சர்மாஜியின் நூல்களை மட்டும் வெளியிடும் பிரபஞ்ச ஜோதி எனும் பதிப்பகத்தை நிறுவினார். இரங்கூனில்தான் சாமிநாத சர்மாவிற்குப் பெரும் புகழை அளித்து ஆசிரியப்பீடத்தில் அமர்த்திய 'ஜோதி' என்னும் தமிழ் மாத இதழ் 1927 முதல் 1942 வரையில் வெளிவந்தது.

இவ்விதழில், 'விபரீத ஆசை' முதலான புதுமைப் பித்தன் கதைகள் வெளிவந்தது. இலட்சியப் பிடிப்போடு ஒருமுன் மாதிரி இதழாக விளங்கிய ஜோதியில், வருணன், சரித்திரக்காரன், தேவதேவன். வ.பார்த்தசாரதி முதலான பல பெயர்களில் பல துறைகள் தொட்டு சர்மாஜி எழுதினார். இரண்டாம் உலகப் போரில் இரங்கூனில் பெய்த குண்டு மழைக்கு நடுவிலும் 'ஜோதி' அணையாமல் தொடர்ந்து சுடர்விட்டது குறிப்பிடத்தக்கது. எனினும் போர்க் காலத்தில் மனைவியுடன் பர்மாவிலிருந்து கல்கத்தாவரை மேற்கொண்ட நடைப்பயணம் துன்பங்கள் நிறைந்தது. தனது உடமைகளில் எழுது பொருட்களையே முதன்மையாகக் கருதினார். குண்டு மழைக்குப் பயந்து, பாதுகாப்புக் குழியில் முடங்க வேண்டிய தருணத்திலும் தமிழ்ப்பணியை

மறக்கவில்லை. தான் ஆரம்பித்த மொழிபெயர்ப்புப் பணியை முடித்தே ஆக வேண்டும் என்பதில் தீர்க்கமாக இருந்தார். அப்படி மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் பாதுகாப்புக் குழியில் இருந்தபடி மொழி பெயர்த்து எழுதி முடிக்கப்பட்டதுதான், 'பிளாட்டோவின் அரசியல்', என்ற உலகம் போற்றும் நூல். உயிருக்கு உத்திரவாதமில்லா இந் நடைப்பயணத்தைக் குறித்து "பர்மா வழி நடைப்பயணம்" எனும் நால் 1980இல் வெளிவந்தது. இதில் புலம் பெயர்வுச் சோதனைகளையும் அவர் அடைந்த துன்பங்களையும் அறியமுடிகிறது. சர்மாவின் நூல்களை வெளியிடுவதற்காகவே மட்டும் இரங்கூனில் அரு. சொக்கலிங்கம் செட்டியாரால் தோற்றுவிக்கப்பட்ட பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம், பின்னர் புதுக்கோட்டைக்கு மாற்றப்பட்டது.

கல்கத்தாவில் இருந்து சென்னை திரும்பியதும் சக்தி வை.கோவிந்தனின் அரிய தமிழ் மாத இதழாக நடத்திவந்த சக்தியில் சாமிநாத சர்மாவின் எழுத்துப்பணி தொடர்ந்தது.

இதையடுத்து கட்டுரைப் புதையல்களைத் திரட்டித் தருவதில் தன்னிகரற்று விளங்கிய தலை சிறந்த தேசியவாதியான உலகம் சுற்றிய தமிழனான ஏ.கே. செட்டியார் அயல்நாடு சென்றிருந்த போது சக்தி மாத இதழில் ஓர் ஆண்டு ஆசிரியராகப் பணியாற்றினார்.

1953இல் சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் இதழான பாரதியிலும் ஓராண்டுக் காலம் ஆசிரியராக இருந்தார்.

1954 பிப்ரவரி 6 இல் சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கம் இராஜாஜி தலைமையில் சாமிநாத சர்மாவின் எழுத்துப் பணியைப் பாராட்டி கேடயம் வழங்கி பெருமை சேர்த்தது. 1955இல் சென்னை, தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவரானார் சாமிநாத சர்மா.

இவர் எழுதிய நூல்களில் அரசியல் நூல்கள் சற்று கூடுதலாகும். இதற்கான காரணத்தை, 'இந்த துறைகள் பற்றிய நூல்கள் தமிழில் அதிகமாக இல்லை. இந்தக் குறையை நம்மால் தீர்ப்போம் என்று என்னுள் எழுந்த எண்ணம் இந்த துறைகளில் என்னை அதிகமாக ஈடுபடுத்தியது' என்று கூறுகிறார். தேசபக்தனில் பணியாற்றிய காலத்தில் லோக மான்ய திலகர், ஏப்ரல் 1919 அல்லது பஞ்சாப் படுகொலை முதலிய நூல்கள் வெளிவந்தன. பிறகு பர்மா வாழ்வில் 1936இல் முதல் நூலாக முஸோலினியும், இரண்டாவதாக, அபீசினிய சக்ரவர்த்தியும், மூன்றாவதாக, ஹிட்லரும், நான்காவதாக, ஸ்பெயின் குழப்பமும் வெளியிடப்பட்டன. இது குறித்து அப்பிரசுர நிறுவனர் அரு.சொக்கலிங்கம் செட்டியார், "அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டவுடன் மக்கள் தான்தோன்றித் தனமாக மாறி விடக்கூடாதே என்ற கவலையும் எங்களுக்கு ஏற்பட்டது. சுயராஜ்யம் கிடைத்ததும் அராஜகமும், தலைகனமும் ஏற்பட்டு, எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற பாணியில் ஜனங்கள் வளர்ந்து விடாமல் இருக்க சில ஆண்டுகளாவது நம்நாடு ஒரு சிறந்த தேசபக்தர் சர்வாதிகார ஆட்சியிலிருந்து விடுபடுவது நலமென்று சிந்திக்க ஆரம்பித்தோம்" என்று கூறுகிறார்.

முஸோலினியை ஒரு தாய்நாட்டுப் பற்றுள்ள சரித்திர நாயகனான பார்த்துள்ளார். இது குறித்து எழுதிய வரிகள் பின்வருவன: "முஸோலினி ஒரு சரித்திர புருஷர். வேற்றுமைகளினால் அளிக்கப்பெற்றும், சோர்வினால் உறங்கியும் கிடந்த ஒரு சமூகத்திற்குத் தன்மதிப்பு, கடமை, ஒழுங்கு, ஒழுக்கம் ஆகிய மருந்துகளை உட்புகுத்தி அதனைத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்வதோடு மற்ற சமூகங்களுக்கு எதிரே தோள்தட்டவும் செய்வித்தவன் ஒரு சரித்திர புருஷனாக அல்லாது வேறு எவ்விதமாக இருக்க முடியும்?" என்று வினவுகிறார்.

இது போன்ற அரசியல் நூல்களில் அடிக்குறிப்புகளையும் விளக்கங்களையும் தருகிறார். (எ.கா) எதியோப்பியர் என்ற சொல்லிற்கு வெயிலினால் கறுத்துப்போன முகமுடையவர்கள் வசிக்கும் நாடு என்றும், அபிசீனியா என்பதற்குக் கலப்பு சாதியினர் வசிக்கும் இடம் என்றும் விளக்கம் அளித்துள்ளார்.

இரண்டாம் உலகப் போரினால் பேரழிவை உண்டாக்கியவர் ஹிட்லர். இவர் வரலாற்றை வித்தியாசமான பார்வையில் சர்மாஜி எழுதியுள்ளார் என்பதற்கு, சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் இதழான ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், தனது த ஹிட்லர் நூலின் விமர்சனத்தில், "தமிழரிடத்து அஞ்சாமை, வீரம், அன்பு, அறிவு முதலியன பொலிய வேண்டுமானால் ஹிட்லர் போன்ற சிறந்த வீரர்களின் வரலாறுகளை கற்க வேண்டும். இந்நூலைப் போன்று தமிழில் உயர்ந்த நூல்கள்

பல வெளிவருதல் இன்றியமையாதது" என்று முற்றிலும் ஆன்மீக இதழ் பாராட்டியுள்ளது இவரின் எழுத்தாற்றல் வெற்றி எனலாம்.

"ஸ்பெயின் குழப்பம்", என்ற நூல் சர்வாதிகார சக்திக்கும் மக்களாட்சி சக்திக்கும் இடையே நிகழ்ந்த போராட்டத்தை விளக்குவதே ஆகும். இந்நூலைக் குறித்து பெ.சு.மணி, "இந்நூலின் வழியாக நமது நாட்டில் விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தையும் தமிழர்கள் வளர்ந்து கொள்வர் என்பதும் சாமிநாத சர்மாவின் கணிப்பு" என்று மதிப்பிடுகிறார்.

இதுவரை கூறப்பெற்ற நூல்களில் தேசபக்த சர்வாதிகார தத்துவத்தை ஓரளவு ஏற்றுக்கொள்ளும் பாங்கில் சாமிநாத சர்மா அணுகியிருந்தாலும் பிறநாடுகளை அடிமைப்படுத்தும் ஆக்கிரமிப்பு போக்கை ஏற்க மறுத்தவர்.

"நவீன துருக்கியின் தந்தை", என்று போற்றப்படும் கமால் அத்தாதுர்க் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல் எழுதப் பெற்றதன் நோக்கமும் இந்திய தேசியத்திற்கு வலுவூட்டவே ஆகும்.

பிளேட்டோவின் அரசியல் தமிழ் மக்களுக்கு அரசியல் அறிவு புகட்டியதோடு "அவர்களைத் தங்கள் சுதந்திரத்திற்குத் தகுதிப்படுத்தி கொண்டவர்களாவார்கள்" என்று சாமிநாத சர்மா குறிப்பிடுகிறார்.

நடக்க முடியாமல் படுக்கையில் படுத்துக் கொண்டேயிருந்த காலத்தில் படுத்த படியே எழுதப் பெற்ற நூல், 'கார்ல் மார்க்ஸ்".

கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு பற்றி அநேக நூல்கள் இதுவரை வெளி வந்திருந்தாலும் முதன் முதலாக மிக விரிவாக எழுதப்பட்டதும், மிகச் சிறப்பானதென்று எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டதும் சர்மாஜியினுடையதே!

இவர், இது போன்று உலகத் தலைவர்கள், இராஜ தந்திரிகள், புரட்சி வீரர்கள், தீர்க்கதரிசிகள், அறிவியல் அறிஞர்கள் முதலானோரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்தம் சாதனைகளையும் உள்ளது உள்ளபடி மிகச் சரியானபடி தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தியவர். இன்றளவும் இச்சிறப்பில் இவருக்கு இணை இவரே என்பது மிகையில்லை. ஆங்கில மொழி அறியாத அல்லது ஆங்கிலத்தில் போதிய பரிச்சயம் இல்லாத தமிழர்களுக்கு, உலகம் தொடர்பான ஆங்கில நூல்களை எளிய அழகு தமிழில் மொழி பெயர்த்து அளித்துள்ளார். மொழி பெயர்ப்புகள் நீங்கலாக மற்ற நூல்களை எழுதும்போதும் தனது விமர்சனங்களையும், கற்பனைகளையும், ஒருபோதும் கலந்து எழுதியவரல்ல. இப்பண்பே அவரது நூல்களில் மிகச் சிறந்த அம்சமாகும்.

பிளாட்டோ கூறினார், ரூஸோ சொன்னார், கார்ல் மார்க்ஸ் சாற்றினார், மாஜினி மொழிந்தார் எனத் தமிழக மேடைகளில் தமிழகப் பேச்சாளர்கள் அள்ளி வீச வாய்ப்பளித்தவர் சாமிநாத சர்மா. இதற்காக ஒவ்வொரு பேச்சாளரும் சர்மாஜிக்கு ராயல்டி கொடுக்கவேண்டும் என்பார், காகிதப் புரட்சி எனும் நூலில் திரு.ஸ்டாலின் குணசேகரன்.

சாமிநாத சர்மாவின் அரசியல் நூல்களைக் கற்ற, கற்கும் பலர் முற்போக்கான இடதுசாரி இயக்க சிந்தனைகளில் ஊக்கம் பெறுபவர்கள் என்பதையும் கண்டுவருகிறோம்.

இவருடைய மனைவி 1956இல் இறந்தார். இவர் துக்கம் தொடர்பாக தன் நூல்களின் பதிப்பாளரான அரு.சொக்கலிங்கம் செட்டியாருக்கு 6.3.56இல் இருந்து 17.4.1956 வரையில் பத்து கடிதங்கள் எழுதினார். இதுபற்றி அவர் கூறும் போது, "அழுது அழுது என் துக்கத்தை தணித்துக் கொள்வதற்குப் பதில் எழுதி எழுதி என் துக்கத்தை தணித்துக் கொள்கிறேன்" என்று கூறுகிறார். இக்கடிதங்கள் பிறகு ஒரு தொகுப்பு நூலாக, 'அவள் பிரிவு' என்று வந்தது.

**இறுதிக்காலம்:**

அவருடைய தனிமை வாழ்க்கையின் இறுதிக்காலம் சென்னை கலாசேத்ரா குடில் ஒன்றில் 1971இல் தொடங்கியது. அப்போது தம்முடைய நூல்களையும் மறுபதிப்புகளாகவும் புதிய நூல்களாகவும் வெளியிடத்தக்க உரிமையை திரு பெ.சு. மணியிடம் வழங்கினார்.

இம் மாபெரும் எழுத்தாளர் 1978 ஜனவரி 7இல் உயிர் நீத்தார். "நான் எழுதுவதற்காக வாழ்கிறேன், வாழ்வதற்காக எழுதவில்லை" என்று அவ்வப்போது கூறிவந்தார், சாமிநாத சர்மா. ஆம், அவருடைய நூல்கள் வழியாக அவர் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்.

●


**கட்டுரையாளர்: எழுத்தாளர்,**
**சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்**




# வடமொழி மேலாதிக்கத்தை தமிழகம் ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணம்

முனைவர் ஆ.கார்த்திகேயன்

தமிழ்க்கல்வியும் தமிழ்வழிக்கல்வியும் ஒன்றல்ல, அவை வேறுவேறு. தமிழ்க்கல்வி என்பது தமிழை ஒரு பாடமாகக் கற்பிப்பது. தமிழ்வழிக்கல்வி என்பது தமிழ்மொழியின் வாயிலாகப் பிற பாடங்களைக் கற்பிப்பது. அதாவது அறிவியல், சமூக அறிவியல், கணிதம் போன்ற பாடங்களையும் நம் மொழியின் வழியாகக் கற்பித்தலாகும். தமிழ்வழிக்கல்லி என்பது தமிழைப் பயிற்று மொழியாகப் பயன்படுத்துவது. தமிழ்க்கல்வியில் பாடநூல் தயாரிப்பது மிகவும் எளிது, இலக்கணமும், செய்யுள்களும் உரைநடைகளும் நம் மொழியில் ஏராளம், அவற்றைத் தேர்த்தெடுத்துப் பாடநூல் உருவாக்குவது சற்று எளிது. ஆனால் தமிழ்வழிக் கல்வியில் பாடநூல்கள் எழுதுவது சற்று கடினமானது. ஏனெனில் நமது மொழியில், அறிவியல், கணிதம் தொடர்பான கட்டுரைகள் இல்லை, அறிவியல் போன்ற பாடங்களைப் பள்ளிகளில் கற்பிக்க வேண்டிய அவசியம் ஐரோப்பியர் வருகையால் நமக்கு விளைந்த நன்மையாகும். அறிவியல் கட்டுரைகளை முதற்கண் மொழிபெயர்க்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. மொழிபெயர்த்த கட்டுரைகளைப் பாடங்களாக மாற்றி எழுத வேண்டியிருக்கிறது. அறிவியல், மருத்துவம்,




**அறியப்படாத மொழி இயக்கங்களும்**
**மொழிப்போராட்டங்களும்**
**கலைமாமணி மரு.சு.நரேந்திரன்**
**வெளியீடு: என்சிபிஎச், சென்னை | விலை: 215**

பொறியியல் தொடர்பான கட்டுரைகளை மொழிபெயர்க்க நம் மொழியில் கலைச்சொற்கள் தேவைப்படுகிறது. கலைச்சொற்கள் கருத்துக்களை (CONCEPTS) தாங்கிச் செல்பவை; அடிக்கடி பயன்படுத்தக் கூடியவை. கலைச்சொற்களின் உருவாக்கத்தில் மொழித்தேர்வு (LANGUAGE CHOICE) முக்கியமானதாகிறது.

பன்னாட்டு மொழியையா? தேசிய மொழியையா? தமிழ்மொழியையா? எதைத் தேர்வு செய்வது?

நமது மொழியில் கலைச்சொல் உருவாக்க மரபு நீண்ட நெடிய தோற்றமும் வளர்ச்சியும் கொண்டது. நமது இலக்கண ஆசிரியர்கள் மொழியை விவரிக்க சுருக்கமான தெளிவான சொற்களை உருவாக்கிக் கொண்டனர். பெயர், வினை, இடை, உரி, வேற்றுமை, பகுதி, விகுதி, சந்தி, சாரியை-இவையாவும் நாம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் சொற்கள். இவையே கலைச்சொற்களாகப் பயன்படுத்தப்பட்டன. பள்ளிகளில் இவை கீழ் வகுப்புகளிலேயே பயன்படுத்தப்படுகின்றன. இதுவே இவற்றின் சிறப்பு.

விடுதலைப் போராட்ட வேள்வியில் சுதேசிப் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதைப் போலவே சுதேசி மாநில மொழிகளும் கல்வித் திட்டத்தில் இடம் பிடிக்கத் தொடங்கின. அப்போது ஆங்கிலம் கோலோச்சிய நிலையில் மாநில மொழிகளைப் பயிற்றுமொழியாக ஆக்குவதில் கோரிக்கைகள் வலுப்பெற்றன. சவால்களும் பெரிய அளவில் தோன்றின. 1900 முதல் 1950 வரை பயிற்றுமொழி, கலைச் சொல்லாக்கம் குறித்து அப்போது ஆட்சி செய்த அரசு பல முயற்சிகள் எடுத்தது, பல குழுக்களை அமைத்து கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டன. இம் முயற்சியில் பல்வேறு தமிழறிஞர்களும் அரசியல், சமூகத் தலைவர்களும் பங்கெடுத்துத் தங்கள் கருத்துகளைத் தீவிரமாகத் தெரிவித்தனர். இவையாவும் இதுகாறும் அறியப்படாத வரலாற்றுப் பதிவுகளாகும். இவற்றைக் கண்டறிந்து தொகுத்து 'அறியப்படாத மொழி இயக்கங்களும், மொழிப் போராட்டங்களும்' என்னும் தலைப்பில் நூலாகப் படைத்துள்ளார் டாக்டர் சு.நரேந்திரன் அவர்கள். இந்நூலிலிருந்து சில முக்கியமான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

1916இல் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சேலத்தில் கலைச்சொல் உருவாக்க சங்கம் ஒன்று தொடங்குகிறார். அறிவியல் கலைச்சொற்கள் தமிழில் இல்லாமையும் அவற்றை உருவாக்குவதில் குழப்பமான நிலையும் மிகப் பெரிய சிக்கலாக உள்ளன. கலைச்சொற்களை உருவாக்கிச் கற்றவர்களால் நிலைபேறாக்கம் செய்யப்பட்டுக் கலைச்சொல்லகராதி வெளியிடுவதே இச்சங்கத்தின் நோக்கமாக இருந்தது. இச்சங்கத்தின் சார்பாக இதழும் வெளியிடப்பட்டது. ஆனால் இராஜாஜி அவர்களின் முயற்சியைப் பா.வே.மாணிக்க நாயக்கர் கடுமையாக விமர்சித்தார். மூதறிஞரின் அணுகுமுறை வடமொழி சார்புடையது என்று விமர்சனம் செய்யட்டாலும் அவர் இத்தகைய சங்கம் உருவாக்குவதற்குப் பின்னணியாக, தூண்டுகோலாக இருந்த நிகழ்வுகள் யாவை என்பது மேலும் கண்டறியத்தக்கது.

1917ஆம் ஆண்டு சிம்லா மாநாட்டில் வட்டார மொழிகளைப் பயிற்று பொழியாக்கும் திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. இதன்

தொடர்ச்சியாக சென்னை மாகாணக் கல்வி குறித்து ஆராய சால்டர் ஆணையம் அமைக்கப்பட்டது. இதே காலகட்டத்தில் அரசாங்கக் கல்வி மறு சீரமைப்புக் குழு வட்டார மொழிக்கல்வி, வட்டார மொழிகளின் பாட நூல்களைத் தயாரிப்பது தொடர்பாக முதற்படியான கலைக்கோல் தயாரிக்க சென்னை மாகாண அரசு கலைச்சொல் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் முயற்சியால் ஏறத்தாழ 7,400 கலைச்சொற்கள் உருவாக்கி வெளியிடப்பட்டன. இக்குழு உருவாக்கிய சொற்கள் யாவும் ஆங்கிலத்திலும் வடமொழியிலும் இருந்தன. மக்கள் தொகை அறிக்கை என்பதற்கு ‘குல ஸ்திரி புருஷ பால விருத்த அவ்யய பரிமாண அறிக்கை’ என்று உருவாக்கப்பட்டது. இதற்கும் பல்வேறு தரப்பிலிருந்து எதிர்ப்புகள் எழுந்தன. (பக்-43)

1940ஆம் ஆண்டு சென்னை அரசாங்கம் சீனிவாச சாஸ்திரி தலைமையில் ஒரு கலைச்சொல்லாக்கக் குழுவை அமைத்தது. சீனிவாச சாஸ்திரி குழுவின் தாங்குரைகள் (பரிந்துரைகள்) (பக்கம் 79,81) தரப்பட்டுள்ளது. வடமொழியில் உள்ள சொற்களையும் ஆங்கிலத்திலுள்ள கலைச்சொற்களை பெரிதும் பயன்படுத்திக்கொள்ள சாஸ்திரியார் முழு பரிந்துரை செய்யப்பட்டதற்கு எதிர்ப்புகள் வெகுவாக எழுந்தன.

சாஸ்திரியார் குழு அரசால் அமைக்கப்படுவதற்கு முன்னர் சென்னை மாகாண தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அச்சங்கத்தார் பல்வேறு கூட்டங்களை நடத்தி கலைச்சொற்கள் உருவாக்கம் குறித்து விவாதம் செய்து சொல்லாக்கக் கழகம் என ஓர் உட்கழகம் தொடங்கிக் கலைச்சொற்களை உருவாக்கத் தொடங்கினர். ‘தமிழ்த்தாய்’ என முத்திங்கள் இதழை வெளியிட்டனர். பல்வேறு அறிஞர்களின் முயற்சியால் சுமார் 5,300க்கும் மேற்பட்ட கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டன. (பக்.53) இச்சங்கம் வெளியிட்ட சொற்களை 'தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் கூடிய வரை உபயோகித்து அவைகளை முடிவாக நிர்த்தாரணம் செய்து அந்நூலின் புதிய பதிப்பு வெளிவருவதற்கு வேண்டிய உதவி செய்யுமாறு' ஆசிரியர்களையும் தலைமை ஆசிரியர்களையும் ராஜபாளையத்தில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (பக்.63). சென்னை மாகாண தமிழ்ச்சங்கத்தை வழி நடத்திய பெருமைக்குரியவர் இ.மு.சுப்பிரமணியபிள்ளை ஆவார்.

சாஸ்திரியார் குழுவின் தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் தமிழ்நாட்டுத் தமிழ் அறிஞர்களும் பெரியார் போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகளும் கடுமையாக எதிர்த்தனர். தஞ்சையில் கரந்தைத் தமிழ்ச்சங்கமும், தமிழ்ப்பொழில் இதழும் சாஸ்திரியார் குழு தீர்மானங்களைக் கண்டித்து அறிக்கைகள் வெளி வந்தன. இதில் குறிப்பிடத்தக்கது,

"தமிழில் பிறமொழிச் சொற்களே கலக்கக் கூடாது என்று முரட்டுக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்று நான் கூறவில்லை. எளிய பழக்கமான தண்ணீர் இருக்கும்போது 'ஜலம்' வேண்டியதில்லை என்கிறோம். எனவே கூடுமானவரையில் நல்ல எளிய சுத்தமான தமிழிலேயே கலைச்சொற்களையும் பிற சொற்களையும் கொண்ட நூல்களே இனி இயற்றப்படுதல் வேண்டும். கரடுமுரடான வட மொழிச் சொற்களைத் திணித்துவிட வேண்டாம்" என்பது ஈ.வெ.ரா. பெரியாரின் (பக்.141) விடுதலைத் தலையங்கம் ஆகும்.

எந்தப் பாஷையும் அதன் வாயிலாகப் பொருள்களை விளக்க முயன்றால் ஒழிய, நூல்களுக்கு வேண்டிய மொழிகளும் தொடர் மொழிகளும் அதன்கண் அமைவதில்லை. பொருள்களை எடுத்துக்கொண்டு விளக்க முயன்றால்தான் மொழிகள் தாமாகவே சமைந்து பொங்கும். தொடக்க கால முயற்சிகளை ஒரு முதற்படியாகக் கொண்டு ஆதரிக்க வேண்டும் என்பது மூதறிஞர் இராஜாஜியின் (பக்.108) கருத்தாகும்.

வடமொழி மேலாதிக்கத்தைத் தமிழகம் ஏற்றுக் கொள்ளாமைக்குரிய காரணங்களை நூல் பட்டியலிட்டு விளக்குகின்றது. கலைச்சொல்லாக்கத்தின் இன்றைய நிலை குறித்தும் நிறைவுப் பகுதியில் சுட்டிக்காட்டுகிறார் நூலாசிரியர். இந்நூல் கலைச்சொல்லாய்வில் ஈடுபடும் ஆய்வாளர்களுக்கும் மொழி அறிஞர்களுக்கும் மிகவும் பயன்படும். இந்நூலினை அனைவரும் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

●

**கட்டுரையாளர்: ஓய்வு பெற்ற பேராசிரியர்.**

கட்டுரை

# அங்கவை சங்கவை
## வரலாற்றுக் குழப்பங்களும் தீர்வும்



முனைவர் கி.சிவா

அங்கவை, சங்கவை என்னும் பெயர் கொண்டவர்கள் யாவரென்று கேட்டால், வள்ளல் பாரியின் பெண்கள் என்றே பலரும் கூறுவர். உண்மையில் பாரியின் பெண்மக்களுடைய பெயர்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. “அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின்” என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலின் (112) கீழே அப்பாடலைப் பாடியவர்கள் பாரி மகளிர் என்றுதான் குறிக்கப்பட்டுள்ளது. பாரிமகளிர் எனின் பாரியுடைய பெண்கள் என்று பொதுவாகச் சொல்லப்பட்டுள்ளது. அவர்களுடைய இயற்பெயர் இன்னவென்று குறிப்பிடப்படவில்லை. பாரியின் மக்களின் பெயரில் அறியப்படும் பாடல் இதுவொன்றே. மகளிர் என்று பன்மையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் ஒருவருக்கு மேற்பட்ட பெண்மக்கள் பாரிக்கு இருந்தனர் என்று அறியப்படுகிறது. மற்றெந்த நேரடிச் செய்தியும் இவர்களைப் பற்றி அறியக் கிடைக்கவில்லை. மேலும்,

"பரந்துஓங்கு சிறப்பின் பாரி மகளிர்" (புறம்.200:12)

"நெடுமாப் பாரி மகளிர்" (புறம்.201:5)

"கைவண் பாரி மகளிர்" (புறம்.202:15)

என மேலும் மூன்று பாடல்களில் பாரிமகளிர் என்ற சொல் இடம்பெற்றுள்ளது. இம்மூவிடங்களிலும் அங்கவை, சங்கவை என்ற பெயர்கள் பயன்படுத்தப்படவில்லை.

"ஆய்தொடி அரிவையர் தந்தை" (புறம்.117:10) என்று கபிலர் பிறிதோரிடத்திலும் பொதுவாகவே குறிப்பிட்டுள்ளார். பாரிமாய்ந்த பின்னர் விச்சிக்கோன் என்றும் மன்னனை அணுகிப் பாரிமகளிரைத் திருமணம் செய்துகொள் எனக் கபிலர் கேட்டார் (புறம்.200). அவன் மறுத்தான். அவ்வாறே இருங்கோ வேளிடமும் கேட்டார் (புறம்.201). அவனும் மறுத்தபிறகு கழாஅத்தலையாரை இகழ்ந்த உன் முன்னோன் ஒருவனின் அரையம் என்னும் பெருநகரம் அழிந்ததையொப்ப என்னை இகழ்ந்ததால் உனது குலம் அழியாது நிலைப்பதாக எனப் பாடிவிட்டுச் சென்றுவிட்டார் (புறம்.202). இம்மூன்று பாடல்களையும் பாடியவர் பாரியுடன் மிக நெருங்கிய தோழமைபூண்ட கபிலர். அத்தகைய கபிலரே பாரிமகளிரின் இயற்பெயர்களைச் சுட்டவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

சங்கம் மருவிய கால இலக்கியங்களிலும் பாரி பற்றிய தெளிவான செய்திகள் இல்லை.

"மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு – நீருலையுள்
பொன்தந்து கொண்டு புகாவாக நல்கினாள்
ஒன்றுறா முன்றிலோ இல்" (381)

என்று பழமொழி நானூறு நூலில் ஒரு பாடல் உள்ளது. இப்பாட்டுத் தமிழ் நாவலர் சரிதை நூலில் இடம்பெற்றுள்ள சில செய்திகளுக்கு முன்னோடியாக உள்ளது. இதில், தங்களுடைய தந்தையையும் மலையையும் இழந்தபிறகு பாரியின் மகள் ஓரிடத்தில் வாழ்ந்துவந்தார். அக்காலத்தில் மழை வறண்டுவிட்டது. அப்போது அவர்கள் இருக்குமிடத்திற்கு வந்த வழிப்போக்கர் (பாணன், பொருநன், முதலானவர்களில்) ஒருவர் உணவு கேட்க, உணவிற்கான உலையுள் பொன்னைப் போட்டுக் கொடுத்தார் எனச் சொல்கிறது. அத்துடன் பாரிமகளிர் எனப்படாது பாரிமகள் என்ற ஒருத்தியை மட்டும் குறிப்பிட்டுள்ளதையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

ஆகவே பதினெண் கீழ்க்கணக்கு, மேல்கணக்கு ஆகிய 36 நூல்களிலும் பாரியின் பெண்களின் இயற்பெயர் சுட்டப்படவில்லை என்பது தெளிபு. அத்துடன் கீழ்க்கணக்கிலேயே (பொ.ஆ. 3ஆம் நூற்றாண்டு) பாரியின் மக்கள் ஒருவரா? இருவரா? என்ற தெளிவில்லை.

கபிலர் இருங்கோவேளைச் சந்தித்ததற்குப் பிறகான செய்திகள் புறநானூற்றில் இல்லை. அங்கே தொடர்ச்சி அறுபட அண்ணாமலைச் சதகத்தில் ஒரு கண்ணி கிடைக்க அங்கவையும் சங்கவையும் இருபத்தோராம் நூற்றாண்டிலும் சங்க காலப் பாரியின் மக்களாகத் தொடர்கின்றனர்.

தமிழறிஞர் இரா.இராகவையங்காரால் யாக்கப்பட்ட 753 வெண்பாக்களாலான "பாரிகாதை" (1937) என்றொரு நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பதிப்புத்துறையிலிருந்து முதல் நூலாக வெளிவந்தது. அதன் முன்னுரையில், மாம்பாக்கம் உபாத்தியாயரென்னும் திருச்சிற்றம்பல நாவலர் என்பார் இயற்றிய அண்ணாமலைச் சதகத்தில் (பதிப்பு 1908), பாரியின் மகள்களுடைய பெயர்கள் முற்கூறப்பட்டவாறு சுட்டப்பட்டுள்ளனவென்று குறிப்பிட்டுள்ளார். அச்சதகத்தில் பாரி சிங்கள நாட்டையாளும் மன்னன் என்று குறிப்பிடப்பட்டுள்ளான்.

சிங்கள மெனுந்தேய முழுதாளு மன்னன்
சிறந்தபேர் பாரிசாளன்
செய்தவப் பயனாற் பிறந்தநற் குணமான
சிறுமியங் கவைசங்கவை
மங்கையர்க ளிருவரை வளர்த்தெடுத் தௌவையார்
மாமுகக் கணபதிகையால்
மணவோலை யெழுதிமும் மன்னரைக் கோவலூர்
வரவழைத் தறுகிடற்குத்
தங்கிப் பனந்துண்ட மரமாகி யேபழந்
தரநதிப் பெண்ணை நெய்பால்
தான்வரப் பாடியப் பெண்களைத் தெய்விகத்
தலைவன் மணம்புரியவே!" (பா.22)

இப்பாடலில், பாரி என்பதற்குப் பதிலாகப் பாரிசாளன் என்றிருப்பதைக் கவனிக்க வேண்டும். ஔவையார் இயற்கை இறந்த ஆற்றலுடையவராக இப்பாடலில் சித்திரிக்கப்பட்டுள்ளார். கணபதியை வரவழைத்து மூவேந்தர்க்கும் ஓலை எழுதச் சொன்னாராம். ஔவையார் பாடலியற்ற அதைக்கேட்டுக் காய்ந்த பனைமரத்துத் துண்டமொன்று வளர்ந்து மரமாகிப் பழம் கொடுத்ததாம். அவ்வாறே பெண்ணையாற்றில் நீருக்குப் பதிலாக நெய்யும் பாலும் ஓடச்செய்தாராம். இவற்றைப் பார்த்து வியந்த திருக்கோவலூரை ஆண்ட தெய்வீகன் என்னும் மன்னன் அவ்விருவரையும் மணந்தாராம். இவன் ஏற்கெனவே, சேரனின் மகள் பதுமாவதி, பாண்டியன் மகள் காஞ்சனமாலை, சோழனின் மகள் சண்பகமாலை முதலோனோரை மணந்ததாக இந்நூலில் (பா.20) குறிப்பிடப்பட்டுள்ளது. இவனுக்குப் பத்மாவதி,

காஞ்சனமாலை, சண்பகமாலை, கனகை, கலாவதி, உற்பலமாலை, கமலக்கண்ணி, உற்பலலோசனை, அன்னப்பிரபை, கமலாவதி, அங்கவை, சங்கவை" என மனைவிமார்கள் பன்னிருவர் என்று 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தெய்வீகபுராணம் என்னும் திருக்கோவலூர்ப் புராணத்தில் (1901:5) குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த "தமிழ் நாவலர் சரிதை" (1916) என்ற நூலில் ஔவையார் பாடியனவாகவுள்ள வெண்பாக்கள் ஏழனுள்,

> **"சேரலர்கோன் சேரல் செழும்பூந் திருக்கோவல்**
> **ஊரளவுந் தான்வருக உட்காதே – பாரிமகள்**
> **அங்கவையைக் கொள்ள அரசன் மனமியைந்தான்**
> **சங்கியா தேவருக தான்"** (பா.2, ப.72)

என்ற வெண்பாவில் பாரியின்மகள் அங்கவை பெயர் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. மேலும், அண்ணாமலைச் சதகத்தில் குறிக்கப்பட்டதைவிடக் கூடுதலாக இந்நூலில், ஔவையார் வருணனை நோக்கிப் "பொன்னை மழையாகப் பொழி" (7) என்று ஆணையிட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. நம்பகத்தன்மையற்ற பல செய்திகள் இதன்கண் உள்ளன. பாரி சிங்கள நாட்டு மன்னன் எனக்கூறும் சதகத்தின் ஏனைய செய்திகள் உண்மைதானா என்ற ஐயம் எழுகிறது.

சதகத்தில் இடம்பெற்றுள்ள ராசர், வசந்தராயர் (13), கெம்பீரதுரை (17) முதலான சொற்களால் அதன்காலம் 17ஆம் நூற்றாண்டதாகலாம். மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் மீனாட்சியைத் "துரைமகள்" (28:4, 82:4, 92:4) என்றே குமரகுருபரர் குறிப்பிட்டுள்ளார். குமரகுருபரரின் காலம் 17ஆம் நூற்றாண்டு என்பது ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, துரையென்ற சொற்கள் இடம்பெற்றுள்ள சதகத்தின் காலத்தையும் அவ்வாறே கொள்வது தவறில்லை.

கோவலூர்ப் புராணத்தில் சொல்லப்பட்ட செய்திகள் சிறிது மாற்றத்துடன் சதகம், சரிதை ஆகியவற்றில் மீளவும் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழ்நாவலர் சரிதை அங்கவையை மட்டும் ஏற்றுக்கொண்டு சங்கவையை மறுதலித்துள்ளது கருத்திற்கொள்ளத்தக்கது. ஆகவே, பாரியின் மகளிர் அங்கவை, சங்கவை என்ற கருத்தில் 17ஆம் நூற்றாண்டிலேயே முரண்பாடு ஏற்பட்டுள்ளதை அறியலாம். அதேநேரத்தில் அண்ணாமலைச் சதகம் சிறுமி (பன்மைப்பாலில் குறிப்பிடாது ஒருத்தி என்றவகையில்) அங்கவை சங்கவை என்று குறிப்பிட்டுள்ளதை நோக்க அது ஒரே பெயரோ என்று எண்ணவும் தோன்றுகிறது.

எது எப்படியாயினும் மூன்று நூல்களும் தரும் செய்திகள், செவ்விலக்கியக் காலத்துப் பாரிவேள் ஆட்சிசெய்தபின் பன்னூறு ஆண்டுகளுக்குப் பிற்பட்டவை. வெண்பா யாப்பும், விநாயகர் வணக்கமும் சங்க இலக்கிய நூல்களில் பயின்றுவரவில்லை. வெண்பா கலிப்பாட்டில் கலந்து வந்துள்ளதேயன்றித் தனித்தெங்கும் பயன்படுத்தப்படவில்லை. ஆகவே, இவற்றில் உண்மையிருக்கும் வாய்ப்பில்லை. தமிழ் நாவலர் சரிதையில் பாரியின் பெண்மக்களைப் பற்றி ஔவையார் பாடியதாகக் காணப்படும்

> **"பாரி பறித்த பறியும் பழையனூர்க்**
> **காரியன் றீந்த களைக்கோலும் – சேரமான்**
> **வாராயோ என்றழைத்த வார்த்தையு மிம்மூன்றும்**
> **நீலச்சிற் றாடைக்கு நேர்"** (ப.18)

என்ற பாடலை அடிப்படையாகக்கொண்டு "நீலச் சிற்றாடை" என்றொரு நாடகம் மிகப் பிற்காலத்தில் எழுதப்பட்டு, தமிழ்நாடு அரசின் ஐந்தாம் வகுப்புப் பாடநூலில் (1993) இடம்பெற்றது. 2007இல் வெளியான சிவாஜி திரைப்படத்தில்கூட அங்கவை, சங்கவை என்ற பெயர்கள் பயன்படுத்தப்பட்டன. அப்பெயர்கள் நல்ல தமிழ்ப்பெயர்கள் என்று படத்தில் ஒரு வசனம் இடம்பெறும். ஆனால் பாரியின் பெண்களை இழிவுபடுத்திவிட்டதாகப் பலர் அறியாமல் கருத்துரைத்தனர்.

திருக்கோவலூரில் வடக்கிருந்து உயிர்நீத்த கபிலர் பாரியின் நண்பர்தான் என்று நாவலர் ந.மு. வேங்கடசாமி முதலான அறிஞர்கள் கருதுகின்றனர். இதனை அடியொற்றி இராம.ஆநிரைக்காவலன் என்பார் எழுதிய "புறநானூறும் கபிலர் கல்வெட்டும்" என்ற ஆய்வு நூல் (மணிவாசகர், சென்னை, 2002) வெளியாகியுள்ளது. இந்நூலிலும் அங்கவை, சங்கவை பாரியின் மக்கள் எனப்பட்டுள்ளனர். அண்மையில் பாரிவேள் பற்றி சு.வெங்கடேசன் அவர்கள் எழுதிய "வீரயுக நாயகன் வேள்பாரி" (2018) என்ற புனைவு நூலிலும் பாரிமகளிர் இப்பெயர்களாலேயே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அறிஞர் தமிழண்ணலின் கருத்தை இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். "தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களைக் கூர்ந்து நோக்கும்பொழுது சில உண்மைகள் புலனாகின்றன. மிகப் பழங்காலத்தே ஏற்பட்ட கடல்கோள்களால் பாண்டியநாடு பெரிதும் பாதிக்கப்பட்டது. சேரநாடும் பாதிக்கப்பட்டது. அதனால் கடல்கோள்கள், காலப்பழைமை, ஏடுகளாதலின் கறையானரித்தல், மக்களின் அறியாமை முதலியவற்றால் தமிழ் இலக்கியச் செல்வத்தில் பத்தில் ஒன்பது பகுதியை நாம் இழந்துவிட்டோம். கடல்கோள்களால் போனவையே மிகுதி. போனவைபோக இருந்தவற்றைக் காக்கும் எண்ணம், நினைவிலுள்ளதைப் பேணி எழுதி ஆவணப்படுத்துதல் என்பன காணப்படுகின்றன"

(2008:31). இதனடிப்படையில் பார்த்தோமெனின் புறநானூறு தொகுக்கப்பட்ட காலத்திலேயே பாரி மகளிரின் இயற்பெயர் இல்லாமல்தான் கிடைத்திருக்க வாய்ப்புள்ளது என்றும் புரிந்துகொள்ளலாம்.

உறுதியாகப் பாரியின் பெண்மக்களுடைய இயற்பெயர் முற்காலத்திலிருந்த எந்நூலிலும் குறிப்பிடப்படவில்லை. பாரியின்மேற்கொண்ட பெருமதிப்பின் காரணமாக அவனுடைய பிள்ளைகளைப் பெயர்சுட்டாது பாரிமகளிர் என்றே அனைவரும் வழங்கிப் பிற்காலத்தில் உண்மைப்பெயர் முற்றாக வழக்கொழிந்திருக்கலாம். எது எப்படியாயினும் வேள்பாரியின் பெண்மக்களின் பெயர்கள் அங்கவை, சங்கவை ஆகா.

**துணைநூற்பட்டியல்**


1. ஆநிரைக்காவலன், இராம., **புறநானூறும் கபிலர் கல்வெட்டும்,** மணிவாசகர், சென்னை, 2002
2. இராகவையங்கார், இரா., **பாரிகாதை,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1937
3. சாமி தில்லை நடேச செட்டியார், பெ. (ப.ஆ.), **தமிழ் நாவலர் சரிதை,** கமர்ஷல் அச்சுக்கூடம், செனை, 1916
4. சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.), புறநானூறு மூலமும் உரையும், வெ.நா.ஜுபிலி அச்சுக்கூடம், சென்னை, 1894
5. சௌந்தரராஜ உடையார், வே. (ப.ஆ.), **தெய்வீகபுராணம் என்னும் திருக்கோவலூர்ப்புராணம்,** லார்ட் ரிப்பன் யந்திரசாலை, கும்பகோணம், 1901
6. தமிழண்ணல், **சங்க இலக்கியத் தொன்மை: அகச்சான்றுகள்,** நோக்கு, சென்னை, 2008
7. திருச்சிற்றம்பல நாவலர், **அண்ணாமலைச் சதகம்,** மதராஸ் அச்சியந்திர சாலை, சென்னை, 1908
8. வெங்கடேசன், சு. **வீரயுக நாயகன் வேள்பாரி,** விகடன், சென்னை, 2018
9. செல்வக்கேசவராய முதலியார் (ப.ஆ.), கே., **பழமொழி நானூறு,** எஸ்.பி.சி.கே. பிரஸ், வேப்பேரி, 1917


●


**கட்டுரையாளர்:** விரிவுரையாளர், தமிழ்த்துறை, காந்திகிராமியப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்



**உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!**





**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6890 | 5758 | 7926 | 7925 | 6888 | 313 | 6465 |
| 2978 | 2688 | 132 | 2689 | 5832 | 312 | 3109 |
| 1133 | 2728 | 133 | 1187 | 2399 | 2690 | 3108 |
| 7927 | 2724 | 134 | 3413 | 2726 | 2839 | |
| 370 | 6889 | 135 | 7989 | 2727 | 2838 | |
| 7990 | 5534 | 136 | 5377 | 8916 | 143 | |
| 5536 | 140 | 137 | 3107 | 369 | 142 | |
| 7991 | 6810 | 1134 | 3106 | 5760 | 6811 | |
| 3692 | 2725 | 5535 | 5759 | 138 | 3696 | |

தனி இதழ் ₹ 45.00 / ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00. / ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

சந்தாத் தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.



கட்டுரை

# தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களில் கூதிர்காலமும் திணையியல் பின்புலமும்

திணைக்கோட்பாடு எனும் கருத்தாக்கம் தொல்காப்பியம் தொடங்கித் தமிழ் மரபு நெடுகிலும் இலக்கிய வாசிப்பு, ஆக்க நெறியாகப் புலங்கிவருவதைப் பார்க்கமுடிகிறது. இக்கோட்பாட்டுச் சிந்தனைக்கு அடிப்படைக் கருவிகளாக (*Tool*) அமைவன முதல், கரு, உரி எனும் முப்பொருட்களே ஆகும். நிகழ்வொன்று நடப்பதற்கான இடம், காலம், உலகியல் பொருட்கள், நிகழ்வின் மையம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முழுமையான வடிவமாகத் திணையியல் சிந்தனை அமைகின்றது. இக்கருத்தாக்கத்தை அடிப்படையாக வைத்துத் தமிழ் இலக்கியங்கள் வாசிக்கப்பட்டும் இயற்றப்பட்டும் வந்தன என்பது அனைவரும் அறிந்ததே. குறிப்பாகச் சங்க இலக்கியங்கள் திணை இலக்கியங்களாகவே கருதப்படுகின்றன. அவற்றினுள்ளும் தொல்காப்பியச் சிந்தனையை மீறிய படைப்புகளும் உத்திமுறைகளும் உள்ளன என்பதை அம்மன்கிளி முருகதாஸ், மாதையன் உள்ளிட்டோர் ஆராய்ந்து உரைத்துள்ளனர். எவ்வாறாயினும் சங்க இலக்கியங்களின் பொதுப்போக்காகத் திணையியல் சிந்தனை கால்கொண்டிருப்பதைத் தவிர்க்க முடியாது. இத்திணையியல் சிந்தனை, கோட்பாடாக வடிவெடுத்ததன்வழித் தமிழில் பிற்கால இலக்கியங்களையும், பிறமொழி இலக்கியங்களையும் அதன்மூலம் விளக்கமுடியும் என்பதைத் தமிழவன், அய்யப்பப் பணிக்கர், ஜவகர், ஜமாலன், சண்முகம் உள்ளிட்டோர் செய்து காட்டினர். முப்பொருள் வினைநிகழ்வோடு அகம், புறம் எனும் சிந்தனையையும் இவர்களின் ஆய்வுகள் மையமிட்டன. தமிழண்ணல் ஆய்வுகளும் மரபார்ந்த



கா. விக்னேஷ்

பார்வையில் நவீனத்தை வலியுறுத்தின என்பதையும் இவ்விடம் சுட்டுதல் பொருத்தமுடைத்து. இவை நவீன ஆய்வுகள் எனும் தளத்தில் அமைய, உரையாசிரியர்கள், இலக்கணிகள் வசமும் திணைக் குறித்தான கருத்தாக்கம் விரிவடைந்துள்ளதைப் பார்க்கமுடிகிறது. இந்நிகழ்வு வரலாற்றுக் காலந்தோறும் எவ்விதம் வாசிக்கப்பெற்றும் விளக்கப்பெற்றும் வந்துள்ளது என்பதை ஜவகரின் ‘திணைக்கோட்பாடும் தமிழ்க் கவிதையியலும்’ எனும் நூலில் விவாதிக்கப்பட்டுள்ளது. எனவே, திணைவிரிவாக்கச் சிந்தனை குறித்து அதிகம் விளக்காமல் கட்டுரைக்குள் நுழையலாம். இந்நிலையில், சமஸ்கிருதத் தொகை நூலான சுபாசித ரத்னகோசாவிலுள்ள ‘இலையுதிர்காலப் பாடல்களைத்’ (Autumn) (விரிவாக்கப்பட்ட) திணைக்கோட்பாட்டுப் பின்னணியில் இக்கட்டுரை விளக்க முயல்கிறது.

## இலையுதிர்காலப் பாடல்கள்

சுபாசித ரத்னகோசாவில் இலையுதிர் காலத்திற்குரியதாக 22 பாடல்கள் உள்ளன. இவற்றுள் மனோவினோதா 6 பாடல்களையும் (268-74) சுபாங்கா இரண்டு பாடல்களையும் பாஷா, விசாகதத்தா, அபிநந்தா, ஸ்ரீ கமலாயுதா, சதானந்தா, மதுஷீலா, திம்போகா, யோகேஸ்வரா, வாகுரா ஆகியோர் தலா ஒரு பாடலும் எழுதியுள்ளனர். மேலும், பெயர் தெரியாத புலவர்கள் பாடியதாக ஏழு பாடல்களும் உள்ளன. “இலையுதிர் காலம் கரும்பு விளைந்து அறுவடை செய்வதற்கான பருவகாலத்தையும் (282, 291), நெல்லுக்குத் தொடக்க காலமாக இருத்தலையும் (285, 287, 291), அறுவடைக்கான பருவம் நெருங்கி வரும் வேளையில் காட்டு விலங்குகளை விரட்டிப் பயிர்களைப் பாதுகாக்க வேளாண்குடி மக்கள் வயல் இடைவெளிகளில் உயர்ந்த பரண்களைக் கட்டியிருத்தலையும் (285), கிராமங்களில் புல்வெளி பசுமையாகச் செழித்திருத்தலும் அதில் கால்நடைகள் மேய்தலையும் (279), நீரோடைகள் வற்றிச் சுருங்கி அதன் இருப்பிடத்திற்கே திரும்பி விடுதலையும் (268, 288, 289), வெள்ளம் வடிந்ததன் அடையாளமாகக் கரைகளில் அதன் தடம் தெரிவதையும் (283, 290), தண்ணீர் வற்றும்போது நீரோடைகளில் ஆங்காங்கே மணல் திட்டுகள் உயர்ந்து எழுந்திருத்தலையும் (268, 278, 289), அம்மணல் திட்டில் வெண்மையான மார்புப்பகுதியும் கருத்த வால்சிறகுகளையும் கொண்ட நூற்றுக்கணக்கான வாலாட்டிக் குருவிகள் (Wagtails (Khanjarita) அடைந்திருத்தலையும்; ஓடைத் தண்ணீரில் நீரல்லிகள் மீண்டும் பூத்திருக்க அவற்றின் அரும்புகளில் காட்டுக் கோழிகளுக்கான சுவைத்துகள்கள் பரவியிருப்பதையும் (284)” இப்பாடல்கள் உணர்த்துவதாக இங்கல்ஸ் (1965:136) குறிப்பிடுகிறார். இந்தச் செய்திகளே இலையுதிர்க்காலப் பாடல்களின் மையமாக அமைகின்றன. இப்பாடல்களில் இயற்கையை மட்டும் மையப்படுத்தாமல் அதன் ஊடுபாவாக அக உணர்வு இருப்பதையும் உணரவியலும். இவ்வுணர்நிலையைத் தமிழ்த் திணைக்கோட்பாடு வழங்குகிறது. இப்பாடல்களில் காதல் ஊடுபாவாக இருப்பது இங்கல்ஸ் குறிப்பிடாதது.

## திணைக்கோட்பாடும் இலையுதிர் காலமும்

ஒவ்வொரு திணைக்குமான பொழுதுகளை வரையறுக்கும் தொல்காப்பியம், மலையும் அதுசார்ந்த வெளியுமான நிலத்திற்கு உரிய பொழுதுகளாக, ‘... குறிஞ்சி கூதிர் யாமம்; பனியெதிர்ப் பருவமும் உரித்தென மொழிப’ என்று குறிப்பிட்டுள்ளது. கூதிர் காலம் என்பது இன்றைய நிலையில் ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களாகும். சமஸ்கிருத இலையுதிர்காலப் பாடல்களும் இந்தக் காலத்தை மையமாகக் கொண்டே அமைகின்றன. திணைக்கு உரிய பொருளைத் தொல்காப்பியம் குறிப்பிட்டிருந்தாலும் இன்ன திணைக்கு இதுதான் உரி என்பதைக் குறிப்பிடவில்லை. அதைச் சங்கப் பாடல்களின்வழியும் பிற்கால இலக்கண நூல்கள், உரைகளின்வழியும் அதை அறிந்துகொள்ள முடிகிறது. இந்நிலையில், குறிஞ்சித் திணைக்கான உரிப்பொருளைக் குறிப்பிடும் நச்சினார்க்கினியர் அதற்கான விளக்கத்தைப் பின்வருமாறு அளிக்கிறார்.

“இருள்தூங்கித் துளிர்மிகுதலின் சேறல் அரிதாகலானும் பானாட் கங்குலின் பரந்துடன் வழங்காது மாவும் புள்ளும் துணையுடன் இன்புற்று வதிதலின் காமக்குறிப்புக் கழியப் பொருதலானும் காவல்மிகுதி நோக்காதுவரும் தலைவனைக் குறிக்கண் எதிர்ப்பட்டுப் புணருங்கால் இன்பம் பெருகுதலின் இந்நிலத்துக்குக் கூதிர்க்காலம் சிறந்தது எனப்படும்” (துரைசாமிப்பிள்ளை. எ.மே.1957:499)

இக்குறிப்பின்வழிக் குறிஞ்சி எனும் திணைக்கு மனித அகவய உணர்வுகளில் / செயல்பாடுகளில் ஒன்றான புணர்தல் என்பது இதன் உரியாக அமைவதைக் காணமுடிகிறது. திணைவிரிவாக்கச் சிந்தனைப் பின்புலத்தில் சமஸ்கிருதக் கவிதைகளை அணுகுமிடத்து அவற்றிற்குத் தமிழ்த் தன்மையிலான வாசிப்பை அளிக்க முடியும்.

கூதிர்காலமும் முன்பனிக்காலமும் குறிஞ்சித் திணைக்குரிய பெரும்பொழுதுகளாகவும் யாமம் / நள்ளிரவு என்பது சிறுபொழுதாகவும் மலையும் அதுசார்ந்த வெளியை நிலமாகவும் கொண்டு

அமையும் குறிஞ்சித் திணைப் பின்புலத்திலும் தளர்வுகளுடன்கூடிய திணையியல் சிந்தனையிலும் சமஸ்கிருதக் கவிதைகளை இவ்விடம் விளக்குவது பொருத்தமுடையதாக அமையும்.

**குறிஞ்சியும் புணர்தல் நிமித்தமும்**

புணர்தலும் அதன் நிமித்தமும் குறிஞ்சிக்கு உரிப்பொருளென முன்னர் குறிப்பிடப்பட்டது. அதை; 'பல்பூம் பகத்தழை நுடங்கு மல்குற் றிருமணி புரையு மேனி மடவோள் யார்மகள் கொல்லிவ டந்தை வாழியர்' (நற்.8), 'காந்த ளூதிய மணிநிறத் தும்பி தீந்தொடை நரம்பின் முரலும் வான்றோய் வெற்பன் மார்பணங் கெனவே' (நற்.17) இப்பாடல்கள்வழி அறியலாம். இதே தன்மையிலமையும் சமஸ்கிருதப் பாடல்களை ஈண்டு பொருத்திக் காட்டுவது இன்றியமையாததாகும்.

**"இரவின் முடிவு மகிழ்ச்சிகரமானது**

**மலர்கள் பூத்து நிறைந்த மரங்களுடன்**

**வெண்மையாய் இரவில் பூத்துமலரும்**

**வளர்ந்த இதழ் அல்லிவட்ட மல்லிகளும்**

**இப்போது நிலத்தருகே கரைந்தமிழ்கின்றன**

**தென்றலில் சிலிர்த்தாடும் இதழ்விரிந்த நீரல்லிகள்**

**மண்ணெல்லாம் வாசம் வீசும் வசத்தில்**

**மகிழ் நெடுங்கூரலகு உள்ளான் குருகு**

**உடன் ஒரு பண்ணுடன் திடீர்ப்பாடலில்"** (271)

இந்தப் பாடலின் அடிக்கருத்தாக மகிழ்வு என்பதை அடையாளப்படுத்தவியலும். இந்த மகிழ்வு குறிஞ்சியுடன் தொடர்புடையது. மலர்கள் பூத்து மலர்தல் என்பது வளமையின் குறியீடு. அதன்வழித் தென்றலில் நீரல்லிகளின் இதழ்விரி வாசத்தில் பண்ணோடு இணைந்து குருகு ஆடுதல் என்பது புணர்ச்சிக் குறிப்பின் வெளிப்பாடகக் கொள்ள வாய்ப்புள்ளது.

இப்பாடலில் சிறுபொழுதாக இரவும் கருப்பொருள் செயல்பாடுகளாக மலர்தல், வாசம் வீசுதல், தென்றல் தவழ்தல் உள்ளிட்ட சூழல்கள் புணர்ச்சிக்குரிய அமைப்பை வலியுறுத்தும் வண்ணம் அமைகின்றன. இவ்விடத்தில் குருகு என்பதைத் தலைவன், தலைவிக்குப் பதிலியாகப் பொருத்திக் காண்பது கவிதை வாசிப்புக்கு ஏதுவாக அமையும். அன்றியும் மனித நீக்கம் செய்து இயற்கைச் செயல்பாடெனக் கொள்வதிலும் சிக்கல் எழாதெனலாம். திணைவிரிவாக்கத்தை வலியுறுத்தும் அய்யப்பப் பணிக்கர் 'படைப்புருவாக்க மனநிலை (Mental Landscape) குறித்தும் விவரிக்கிறார்.' அதை மேலும் விரிவாக்கும் நிலையில், "... இவ்வாய்வு படைப்பாக்கத்தின் அடிப்படைக் கூறுகளையும், படைப்புருவாக்க மன அமைப்புக் கூறுகளையும் உள்ளடக்கி முழுமைபெற்ற நிலையில் திணைக்கோட்பாட்டை வடிவமைக்கிறது. ஏனெனில் முதல், கருப் பொருட்கள் மட்டுமே படைப்பை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிப்பதில்லை. படைப்பின் இயல்புத்தன்மை, படைப்பின் வடிவம், படைப்பாக்க உத்திகள், படைப்புருவாக்க மன அமைப்பு, கவித்துவம் மிக்க கூறுகள் ஆகிய அனைத்தும் சேர்ந்தே கவிதையை, செய்யுளை, படைப்பை உருவாக்குகின்றன. அந்த அடிப்படையில் நிலம், காலம், சமூகச் சூழலோடு படைப்பாக்கக் கூறுகளும் படைப்பாளியின் மன அமைப்பும் இணைந்தே உரிப்பொருளாக்கம், படைப்பின் அடிக்கருத்து, படைப்பு தோற்றம் கொள்கிறது" (2017:61-2) எனும் ஐவகரின் கருத்தின்வழி இக்கவிதையை அதன் அர்த்தத் தளங்களை உள்வாங்கிக்கொள்ள வாய்ப்பாக அமைகிறது. எனவே, இக்கவிதையின் படைப்புருவாக்க மனநிலை புணர்ச்சிக் குறிப்பினைப் புலப்படுத்துகிறது எனலாம். அதற்கு விரிவாக்கப்பட்ட திணையியல் பார்வை அடிப்படைகளை உருவாக்கித் தருகிறது. இப்பார்வையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கவிதைகளை விளக்கலாம்.

**"மகரந்தம் அறி தேனீக்கள்**

**நீரல்லிகளின் மாயவட்டத்தில் காதல் வசீகரம்**

**ரீங்காரவாய் முணுமுணுக்கும் பூசாரிகளாய்**

**அடுத்து, கர்வக்காதலரை வென்ற வெற்றியில்**

**தேன் குடிக்க அங்கு**

**அவர்கள் மந்திர ஒலி அதீதக்கிளர்ச்சி அமளியாய்"** (272)

இக்கவிதையின் பொருட்தளம் குறியீட்டு நிலையில் இயங்குகிறது. தேனீயைத் தலைவனுக்கும் மலர் என்பது தலைவிக்கும் குறியீடாகின்றன. மகரந்தச் சேர்க்கைக்கான வெளியாக இக்கவிதையின் பொருட்தளம் விரிகிறது. எனவே புணர்ச்சிச் செயல்பாடு இக்கவிதையின் உரிப்பொருளாவதை அடையாளப் படுத்தவியலும். இந்நிலையில் இதையும் குறிஞ்சித் திணையில் வைத்து வாசிக்கலாம். இதேபோல;

"... தன் இணையருகில், ஏக்கத்துடன் எதிர்பார்த்திருக்கும் பெடையின் கொண்டாட்டக் கண்ணீரில் நீந்தும் கண்கள்" (274), எங்கும் சந்த இனிமைபரவ ரீங்கரிக்கும் வண்டுகள் (275), "பனிபடர்ந்த மலைகளைப் போல வெளிரித் திரண்டிருக்கும் முகில் முலைகள். வெளிநாட்டிலிருக்கும் ஒரு கணவனின் மனைவிபோல் இலையுதிர் காலம்" (277), "...

காட்டுவாத்துகள் கேவிக்கரையுமவை எழுப்பும் ஒலியொரு மந்தகார இனிமை'' *(284)* ஆகியன உரிப்பொருள் தளத்திலும் புணர்ச்சிக் குறிப்பை வெளிப்படுத்தும் வண்ணம் அமையும் கவிதைகளாக உள்ளன. இதுவன்றி, ''வேளாண்குடிகள் அமைத்த பரண்கள்; விளைச்சலைத் தின்னவரும் காட்டுப்பன்றிகளை விரட்ட''*(285)*, ''இலையுதிர் காலம் உவந்தளிக்கும் விளைநெல் புனம் காக்கும் பெண்ணுக்கு''*(287)* ஆகியன தினைப்புனம் காத்தல் எனும் செயல்பாட்டின்வழிக் குறிஞ்சித் திணையோடு பொருத்தமுடையதாகிறது.

**"முருகிமுற்றி உலர்கிறது சேறு**
**ஏழையொருவன் உல்லாசிக்க**
**ஒரு தொடுப்புப்பெண் போல"** (276)

எனும் இக்கவிதை 'செம்புலப் பெயல் நீர்போல அன்புடை நெஞ்சம்தாம் கலந்தனவே' எனும் குறுந்தொகை 41 -ஆவது பாடலை நினைவுபடுத்துவதாக அமைகிறது. உவமைநிலையில் ஒத்துள்ள இப்பாடல் உரிப்பொருள் நிலையில் வேறுபட்டுள்ளது. இதேபோல், ''... கார்வண்ணன் நிற வான் ...'' *(283)* எனும் உவமை தமிழோடு நெருங்கிய நிலையில் காணப்படுகிறது. ''நனந்தலை உலகம் வளைஇ, நேமியொடு ... நீர் செல நிமிர்ந்த மாஅல் போல'' (முல்லை.1-3) இதுபோன்று பலவிடங்களிலும் ஒப்புமையைக் காணமுடியும். இந்நிலையில் இலையுதிர்காலப் பாடல்கள் எனும் இப்பகுப்பில் ஆறு கவிதைகள் உரிப்பொருள் தளத்தில் (புணர்தலும் அதன் நிமித்தமும்) இணைந்த நிலையில் காணப்படுகின்றன. பின்வரும் பகுதிகளில் உரிப்பொருள் நிலையில் பிறழ்ந்து முதல்பொருள், கருப்பொருள் நிகழ்வின்வழிக் குறிஞ்சியாவதை விளக்கலாம்.

## உரிப்பொருள் விரிவாக்கப் பின்னணியில் இலையுதிர்காலப் பாடல்கள்

'தேருங்காலை திணைக்குரிப் பொருளே' எனும் சிந்தனையின்வழி ஏற்கனவே தொல்காப்பியம் வரையறுத்திருக்கிற உரிப்பொருட்களைக் கடந்து இலக்கியத்திற்கு உரிய பொருளைப் படைப்பாளர், வாசகர் தெரிவுசெய்ய இயலும் என்ற கருத்திற்கு வரலாம். அதாவது பிற்கால, பிறமொழி இலக்கியங்களின் பாடுபொருள் தொல்காப்பியம் வரையறையில் அடங்கவில்லை எனில் அதனைச் சற்று விரிவாக்கித் திணையுள் அடக்கலாம் என்பது திணைவிரிவாக்கச் சிந்தனையின் அடிப்படையாகும். பின்வரும் பாடல்களுக்கான உரிப்பொருளை அதன் இயங்குதளத்திலிருந்து விளக்குவது அவசியமாகிறது.

**"நெடுநேரம் பருந்து விழிகூர் கீழ் நோக்கில்,**
**இருபுறமும் தலையைத் திருப்புகிறது**
**சிறகின் வலிமையால் மெல்ல வளைந்து**
**வட்டங்கள் வரைகிறது வானில்,**
**பிறகு வேகமாக, சாய்வாக, திறன் வாய்ந்த வகையில்**
**இரைமேல் வீழ்ந்து எதிர்பாரா வகையில்**
**ஒளிரும் அலகாலும் கால் நகத்தாலும் தாக்குகிறது."**
(273)

இந்தப் பாடலின் உரிப்பொருள் என்பதைத் தொல்காப்பியம்வழி விளக்க வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. இந்நிலையிலேயே திணைவிரிவாக்கத்தின் தேவையை அறியமுடிகிறது. இந்தப் பாடலின் உரிப்பொருளை, 'இரைமேல் வீழ்ந்து எதிர்பாரா வகையில் ஒளிரும் அலகாலும் கால் நகத்தாலும் தாக்குகிறது' எனும் வரிகளே புலப்படுத்துகின்றன. அதாவது, வேட்டை அல்லது இரையைத் தாக்கி அழித்தல் எனும் செயல்பாடே உரிய பொருளாய் அமைகிறது. இதற்கான முதல், கருப்பொருட்கள் தெளிவற்ற நிலையில் இருப்பதால் திணையை வரையறுப்பதிலும் சிக்கல் உள்ளது. இருப்பினும் இப்பாடல் இலையுதிர்காலம் எனும் பகுப்பில் உள்ளமையால் குறிஞ்சித் திணையில் அமைந்த வேட்டையை உரியாகக் கொண்ட பாடல் இதுவென அடையாளப்படுத்த முடியும்.

**"இரண்டு விடயங்களுக்காய் அரசவை**
**வந்த பிராமணர்கள் பெருங்கவலையில்:**
**செல்வந்தனிடமிருந்து ஈமச்சடங்குச்**
**சங்கதிகளைப் பெறுவது எவ்வாறு?**
**சேற்றுப்பாதையில் தங்கள் கூடாரம்**
**திரும்புவது எப்படி?"** (292)

இப்பாடல் தமிழில் இல்லாத ஒன்றாகும். குறிப்பிட்ட சமூகத்தாரின் வாழ்வியலைப் பேசுவதாக அமையும் இதில் இயற்கையும் இணைக்கப்படுகிறது. அதாவது, மழைபெய்த பின் உண்டாகும் சேற்றில் செல்ல கவலைகொள்ளல் என்பதே ஈண்டு முக்கியமாகப்படுகிறது. இக்கவிதை மாந்தராக எச்சமூகத்தவரைக் குறிப்பிட்டாலும் அதன் பாடுபொருண்மை நோக்கம் பருவத்தை மையமிட்டமைந்ததே என்பது புலனாகும். சான்றாக; முருகிமுற்றி உலர்கிறது சேறு *(276)*, திறந்து கிடக்கும் சேற்றுத் துளைகள் புலிகளின் தடித்த கால் சுவடுகளுடன் *(281)*, சேறு அப்பிய கிளைகள் குளியலுக்குப் பின் தேய்த்த வாசனைக் கழிம்பென *(283)*, அரசவாத்துகளின் அலைவுத்தடங்களோடு சேறு *(289)* ஆகியவற்றைச் சொல்லலாம். இப்பாடல்களின் நோக்கம் பருவமாற்றத்தின் இயற்கை நிகழ்வுகளைச் சுட்டுவதே ஆகும்.

இயற்கையின் அழகைப் புகழ்ந்துபாடும் கருத்தாக்கம் சமஸ்கிருதக் கவிதைகளில் மேலோங்கியுள்ளதைப் பார்க்கமுடிகிறது. 'நிலம் எனும் இயற்கை வெளி, திணை எனும் கருத்தாக்கத்தின்வழிப் பண்பாட்டு வெளியாக உருவெடுக்கிறது' (2018:267-74) என்கிறார் இ.முத்தையா. மேலும், 'மனிதர்கள், கட்டற்ற இயற்கை வெளியைப் பெயர்சூட்டித் தன் நினைவடுக்குகளில் வைத்துக்கொண்டதன் மூலம் நிலத்தைத் தன்வயப்படுத்திக் கொண்டனர்' (மேலது.395-99) என்கிறார் பஞ்சாங்கம். இக்கருத்துகளின்வழித் திணை உருவாக்கப் பின்புலத்தை அறிந்துகொள்ள இயலும். இந்நிலையிலேயே சங்கப் பாடல்களும் தொல்காப்பியச் சிந்தனைகளும் அமைந்துள்ளன. அதாவது, மனித உணர்வுகளை மையமிட்டமையும் உரிப்பொருட்களைப் பாடுதல் என்பதாகவே சங்கக் கவிதைகள் அமைகின்றன. அதன்வழி இயற்கையும் மனிதனும் வேறல்ல எனும் நிலைக்கு மாற்றமடைந்து மனித உணர்வுகளை இயற்கையோடு ஏற்றிக்கூறும் தன்மையில் அமைகிறது. முன்னர் சுட்டிய படைப்புருவாக்க மனநிலை என்பதை மனித உணர்வுகளுக்குள் அடக்கி அர்த்தப்படுத்துதல் என்னும் ஜவகரின் கருத்தை ஈண்டு நினைவுபடுத்திக் கொள்ளுதல் அவசியமாகிறது. இந்நிலையில் இயற்கை நிகழ்வுகளைத் தன் போக்கிலேயே பதிவுசெய்து மனிதத் தன்னிலைகளை நீக்கம் செய்த பிரதிகளாக இருக்கும் சமஸ்கிருதக் கவிதைகளை அர்த்தப்படுத்த தமிழின் விரிவாக்கப்பட்ட திணையியல் சிந்தனை வாய்ப்பளிக்கிறது.

> **"மெதுமெதுவாய் அமைதியில் வளர்கிறது வானம்**
> **சொர்க்கத்தின் குறுக்கில் ஓடும் ஆற்றைப்போல.**
> **மணற்கரையாக வெள்ளை மேகங்கள்**
> **ஒழுங்குசிதறிப் பறக்கும் மென்கேவல் நாரைகள்**
> **நீரல்லி நட்சத்திரங்களோடு இரவில்**
> **நிறைந் தோடும் ஆறுகள்"** (278)

இப்பாடலின் முதற்பொருள் யாமம் எனும் சிறுபொழுது. உரிப்பொருளாக இயற்கையின் அழகைப் புகழ்தல் அல்லது போற்றல் என்பது அமைகிறது. அன்றி மனிதவயப்படுத்தலுக்கான இடம் இப்பாடலில் இல்லை. எனவே, இப்பாடல் முதற்பொருள் அடிப்படையில் குறிஞ்சித் திணையாகவும் உரிப்பொருள் அடிப்படையில் இயற்கையைப் போற்றுதல் என்பதாகவும் அமைகிறது. தமிழில் இயற்கையைப் போற்றுவது என்பது உரிப்பொருளாக அடையாளப்படுத்தப்படவில்லை. ஆனால், இந்த விரிவைத் திணைக்கோட்பாடு அளிக்கிறது. இதே பண்பிலான பாடல்களின் உரிப்பொருளை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாக அமையும். "ஆறுகளில் இப்போது வாலாட்டிக் குருவிகளிடும் நீர்க்கோடுகளின் அணிவரிசை" (268), "புன்னகை தவழக் களமளிக்கும் இரவு முழுமதியைச் சொர்க்கத்தின் முற்றத்தில் ஆக்குகிறது" (269), "ஆற்றின் நீர்ச்சுழல் சுழியலைகள் அழகுப் பெண்ணின் அணிமணிகொள் கணுக்கால் கொலுசுகளாய்"(270), "... அல்லிக்குவளை ... குளத்து நீரில் கிளர்த்திப் பரவிவீசும் இனிய நறுமணம்" (280), "திறந்துகிடக்கும் சேற்றுத் துளைகள் புலியின் தடித்த கால் சுவடுகளுடன், கண்ணாடியெனக் கறுத்து இதமாய் ஓடும் நீர்" (281), "ஆற்றங்கரையில் நல்ல சேற்றுமண் மந்தைமேய்ப்பனைக் கதிரவன் காயாது குளிரூட்டலில்" (282), "கார்வண்ணன் நிற வான் கீழ் காட்டுவாத்துகள் கடல் சிப்பிபோல் என்ன ஓர் அழகு" (283), "சிறுமிகள் துள்ளல் கொண்டாட்டம் காற்றில் பறக்கும் பருத்திப்பஞ்சுகளை அலங்காரப் பொம்மைக் கூட்டம் ஆக்கமுடிந்ததில்"(286), "நகைத்தோடும் நீரில் சிறுமீன்கூட்டம் மீன்கொத்தி அலகருகே ஆபத்தெனும் பயத்தில்"(288), "அரசவாத்துகளின் அலைவுத் தடங்களோடு சேறு"(289), "கிளைகளில் செத்துத் தொங்கும் பாசிகள் அருமைபெருமை பறைசாற்றும் அண்மையில் வடிந்த வெள்ளத்தை"(290), "நாட்கள் இனிக்கின்றன நன்கு முற்றிய கரும்பால்"(291) ஆகிய பாடல்களில் இயற்கையழகைப் போற்றிப்பாடுதல் எனும் உரிப்பொருளையே அடையாளப்படுத்த முடிகிறது.

இப்பாடல்களின் பொதுப்போக்காகப் பெரும்பொழுதை அடையாளப்படுத்தும் வேளையில் சிறுபொழுதும் யாமமாகவே வருவதைக் காணமுடிகிறது. இந்த இடத்தில் தான் ஸிக்பிரடு லீன்ஹார்டின், 'முக்தகப் (தனிப்பாடல்) பாடல்கள் தமிழ் அகமரபை அடிப்படையாகக் கொண்டவையே. குறிப்பாகத் திணையமைப்பில் விவரிக்கப்படும் உரிப்பொருள் பண்பு சமஸ்கிருத முக்தகப் பாடல்களிலும் காணப்படுகிறது. பெயர் சுட்டா மரபும் தமிழ் அகமரபிற்கே உரியது. இவை சமஸ்கிருத மரபில் இல்லாததாகும். எனவே, தொல்காப்பியமே முக்தகப் பாடல்களைக் கற்க ஏதுவான தரவுத்தளம்' (2022:19-30) எனும் கருத்தை நினைவுகொள்ள வேண்டியதன் அவசியம் புலப்படுகிறது. இலையுதிர்காலத்தில் பாடப்படும் பாடல்களின் சிறுபொழுதாக வேறெந்த பொழுதுகளும் அமையாமல் 'யாமமே' அமைவது தமிழ்க் குறிஞ்சித் திணைக்கு மிகநெருங்கிய நிலையில் உள்ளதைக் காட்டுகிறது. ஆனாலும், நிலம் என்பது திணையியல் சிந்தனையில் முக்கியத்துவம் வாய்ந்தது. குறிஞ்சித் திணைக்கான நிலமாகத்

தொல்காப்பியம் மைவரை உலகமாகிய மலையும் அது சார்ந்த பகுதியுயையும் குறிப்பிடுகிறது. சமஸ்கிருதக் கவிதைகளில் மலைநிலத்திற்கான குறிப்புகள் இல்லை. காரணம், பாலாவின் அரசாட்சியில் (Pala Empire) நிலவிய நிலமானிய சமூக அமைப்பில் இவற்றின் பெரும்பாலான பாடல்கள் தோற்றம் பெற்றுள்ளதால் மலை எனும் நிலம் ஒழிந்து நாடு எனும் வெளியைப் பெற்றுள்ளன.

தமிழ், சமஸ்கிருத இலக்கியங்கள் இயற்கையை அணுகும் பண்பு என்பது இருவேறு நிலையினது எனும் வாசு.அரங்கநாதன், 'உள்ளுறை உவமமாக இயற்கையை விவரிக்கும் பாங்கு தமிழைப்போல் சமஸ்கிருதத்தில் அமையப்பெறவில்லை என்றும் உவமைகளின்வழி மெய்ப்பாடுகளை அறியமுடியும் என்றும் ஆந்தையின் அலறல் என்பது அச்சம் எனும் மெய்ப்பாட்டை உணர்த்துவதாய் அமைகிறது என்றும் சொல்கிறார். மேலும், அதுகுறித்து கருத்துரைக்கும் அவர் சமஸ்கிருதத்தில் உவமைவழி மெய்யபாட்டை அறியமுடியாது என்றும் தமிழில் மெய்ப்பாட்டியலை அடுத்து உவமையியல் அமைந்திருப்பது இதை விளக்கவே' (2023:413-28) என்றும் கருத்துரைக்கிறார். இயற்கையை மையமாகக் கொண்டிருக்கும் இப்பாடல்கள் சிலவற்றில் தமிழின் தன்மையைக் காணமுடிகிறது. அதேநேரத்தில் அரங்கநாதன் குறிப்பிடுவதுபோல சமஸ்கிருதப் பாடல்கள் தனித்தும் உள்ளன. எனவே, இவை இரண்டும் வேறுபட்ட இலக்கிய மரபுகளாக இருப்பினும் இவற்றிற்கிடையில் ஒத்துள்ளதும் தனித்ததுமான பண்புக் கூறுகளை அடையாளப்படுத்த இயலும். அதற்குத் தமிழின் விரிவாக்கப்பட்ட திணைக்கோட்பாடு உதவுகிறது.

### முடிவுரை


திணையியல் சிந்தனை முப்பொருளை அடிப்படையாகக் கொண்டது. குறிஞ்சி எனும் திணை கூதிர், முன்பனி ஆகிய பெரும்பொழுதுகளையும் யாமம் எனும் சிறுபொழுதையும் அடிப்படையாகக் கொண்டது. இக்காலப் பின்னணியில் அமையும் சமஸ்கிருதப் பாடல்கள் சிறுபொழுது எனும் தளத்திலும் மனித உணர்வுகள் (புணர்தலும் அதன் நிமித்தமும்) எனும் தளத்திலும் ஒத்துக் காணப்படுகின்றன. உரிப்பொருள் எனும் தளத்தில் வேட்டையாடல், இயற்கையைப் போற்றிப் பாடல் எனும் இருநிலையில் விரிவாக்கம் கொள்கின்றன. அவ்வாறு விரிவாக்கம் கொள்ளும் பாடல்களின் முதல் பொருளான காலம் (பெரு, சிறு பொழுதுகள்) குறிஞ்சித் திணையோடு ஒத்த நிலையிலேயே உள்ளன. நிலம் எனும் நிலையில் மாறுபட்டு அமைகின்றன. இவற்றை விரிவாக்கப்பட்ட திணைக்கோட்பாட்டு வாசிப்பு சாத்தியப்படுத்துகிறது. இலக்கிய வாசிப்பு முறையாக / விளக்க முறையாக ஒரு பனுவல் வாசிப்பு மாதிரியை இக்கட்டுரையின்வழி அடையாளப்படுத்தலாம். அன்றி ஜார்ஜ் எல். ஹார்ட், ஸிக்பிரடு லீன்ஹார்டு, ப.மருதநாயகம் உள்ளிட்டோரின் ஆய்வுகள் அடிப்படையில் சமூகப் பின்னணியோடு இலக்கியவியலை இணைப்பது அடுத்த நிலையாகக்கொள்ள முடியும்.

### துணைநின்றவை


1. Ingalls H.H. Daniel., (Edit. & Trans.). (1965). An Anthology of Sanskrit Court Poetry – Vidyakara's Subhasitaratnakosa. Cambridge: Harvard University Press.
2. இராசாராம். சு., பெருமாள். அ.கா., (ப.ஆ)., (2023). தமிழ் சமஸ்கிருத செவ்வியல் உறவுகள். நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்
3. இராமர். சு., (தொ.ஆ.), (2018). திணைக்கோட்பாடும் தமிழாய்வுச் சூழல்களும். மதுரை: பிறழ் வெளியீடு.
4. கணேசையர்., (ப.ஆ.), (1948). தொல்காப்பியம் பொருளதிகாரம் முன் ஐந்தியல்களும் நச்சினார்க்கினியமும். சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்.
5. கமலக்கண்ணன். பு., (தொ. & மொ.ஆ.). (2022). அகப்பொருளும் சமஸ்கிருத முக்தகப் பாடல்களும் - லீன்ஹார்டு ஸிக்பிரிட். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
6. துரைசாமிப்பிள்ளை, சு, ஔவை., (உ.ஆ), (1957). ஐங்குறுநூறு மூலமும் விளக்க உரையும் 2 -ஆவது தொகுதி. அண்ணாமலைநகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.
7. பாலாஜி, க., (உ.ஆ.), (2024), நற்றிணை உரைவேறுபாடு (2 தொகுதிகள்). சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
8. மனோகரன். ந., (மொ.பெ.)., (2013). இந்திய இலக்கியக் கோட்பாடுகள் சூழலும் பொறுத்தமும் - அய்யப்ப பணிக்கர். சென்னை: மாற்று வெளியீடு.
9. ஜவகர். க., (இ.ப.2017). திணைக்கோட்பாடும் தமிழ்க் கவிதையியலும். சென்னை: காவ்யா வெளியீடு.


●


**கட்டுரையாளர்: முனைவர்பட்ட ஆய்வாளர்,**
**சிறப்புநிலைத் தமிழ்த்துறை, ஜவகர்லால்நேரு**
**பல்கலைக்கழகம், புதுதில்லி.**




வாழ்க்கை எனும் மொழி விளையாட்டு
இரா. வீரமணி / டிஸ்கவரி வெளியீடு /
விலை : ரூ. 200/-

# தமிழில் நவீனத் திறனாய்வுக் கோட்பாட்டு வாசிப்பில் புதுப் பாய்ச்சல்



முனைவர் பி. பாலசுப்பிரமணியன்

அண்மைக்காலத் தமிழ்க் கல்விப்புலச் சூழலில் திறனாய்வுக் கோட்பாடுகள் சார்ந்த வாசிப்பு வெகுவாகக் குறைந்து வருகிறது. கல்விப்புலத்தில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், மாணவர்களிடையே ஏற்பட்டிருக்கின்ற வாசிப்புத் தேக்கம் அவர்களது சிந்தனையை, ஆய்வு மனப்பான்மையை நிர்மூலமாக்கியிருக்கிறது. மரபிலக்கியங்கள் (தொல்காப்பியம் தொடங்கிச் சிற்றிலக்கியக் காலம் வரை) மீது எந்தவிதமான கேள்வியையும் விமர்சனங்களையும் முன்வைக்கக்கூடாது என்று ஒருவிதமான புனிதத்தன்மையையும் கற்பிதத்தையும் வைத்திருக்கிறவர்களிடையே திறனாய்வு, கோட்பாடுகள் சார்ந்து எப்படி உரையாடுவது? சமகால இலக்கியங்களை அறிந்து கொள்ள முயற்சிக்காத ஆசிரியர்களிடம் பயிலும் மாணவர்களின் நிலை? மேலைக் கோட்பாடுகளின் வழி தமிழிலக்கிய இலக்கணங்களை மறுவாசிப்பு செய்வது பொருத்தமானதா? மரபையும் நவீனத்தையும் எப்படி இணைத்துப் பார்க்க முடியும்? நவீன இலக்கியங்கள் தமிழின் மரபையும் பண்பாட்டையும் சீர் குலைத்து, நுகர்வுக் கலாச்சாரத்தை முன்வைக்கிறதா?

கோட்பாட்டுப் பார்வை என்ற புரிதலில் அனைத்தையும் எதிர் கேள்விக்குட்படுத்துவது, புனிதக் கற்பிதங்களை உடைத்தெறிய முற்படுவது, அதிகாரத்திற்கு எதிராகக் குரல் எழுப்புவது போன்ற நடவடிக்கைகளை நடைமுறையில் எப்படிச் சாத்தியப்படுத்துவது? இப்படியாகத் தொடரும் எண்ணற்ற கேள்விகள் கல்விப்புலங்களுக்குள் ஊடாடி வருகிறது. இதற்கு மாற்று என்ன? என்று யோசித்துக் கொண்டிருக்கும் வேளையில் புதுவைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் பா.இரவிக்குமார் அவர்களின் நெறியாளுகையில் முனைவர் பட்ட ஆய்வு நிகழ்த்தும் ஆய்வு மாணவர் இரா.வீரமணி அவர்கள் "வாழ்க்கை எனும் மொழி விளையாட்டு" (தமிழில் நவீனத் திறனாய்வுக் கோட்பாட்டு வாசிப்பு) என்ற நூலை சமீபத்தில் டிஸ்கவரி புத்தக நிலையத்தின் மூலமாக வெளியிட்டிருக்கிறார். இந்நூலிற்கு, தமிழ்ச் சூழலில் ஆகச் சிறந்த திறனாய்வுப் பங்களிப்புகளை நிகழ்த்திய பேரா.க.பஞ்சாங்கம் அவர்கள் வாழ்த்துரை வழங்கியுள்ளார். அதேபோல், நவீன இலக்கிய வாசிப்பில் ஆழங்கால்பட்ட பேரா. பா.இரவிக்குமார், 'தமிழ் அறிவுலகின் தற்கால அடையாளம்' எனும் தலைப்பில் நூலாசிரியரின் ஆய்வு நெறியாளராக இருந்தாலும் சமன்செய்யும் துலாக்கோல்போல நின்று நூலின் நிறை, குறைகளைச் சுட்டிக்காட்டி நேர்த்தியானதொரு அணிந்துரையை வழங்கியிருக்கிறார். அந்தவகையில், ஆக்கப்பூர்வமான கோட்பாட்டு வாசிப்பினை முன்வைக்கும் இந்த நூல் மேற்கண்ட கேள்விகளுக்கெல்லாம் விடைகளைத் தேடித்தரும் நோக்கில் அமைந்துள்ளதை முதற்கண் சொல்லியாக வேண்டும்.

தமிழில் இலக்கிய வரலாற்று நூல்கள், ஆராய்ச்சி வரலாற்று நூல்கள் தோன்றிய அளவிற்குத் திறனாய்வு வரலாறு சார்ந்து நூல்கள் பெரிதும் வெளிவரவில்லை. இருபதாம் நூற்றாண்டின் செம்பாதியில் விமர்சனம், திறனாய்வு போன்ற சொற்கள் புழக்கத்திற்கு வந்திருந்தாலும், வெகுகாலத்திற்குப் பிறகுதான் அதன் செயல்வடிவங்களான படைப்பை விமர்சித்தல், திறனாய்வு செய்தல் ஆகிய செயல்பாடுகள் ஆக்கப்பூர்வமாக நிகழ்ந்திருக்கின்றன என்ற கருத்தைத் 'தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாற்று நூல்கள்: தேடல்களும் புரிதல்களும்' என்ற தமது முதற் கட்டுரையில் அழுத்தமாகப் பதிவு செய்கிறார் நூலாசிரியர். இதனைத் தொடர்ந்து, முனைவர் க.பஞ்சாங்கத்தின் 'தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு' (1990), முனைவர் க. பூரணச்சந்திரனின் 'தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு' (2007), முனைவர் ம. மதியழகனின் 'தமிழாய்வு – திறனாய்வு வரலாறு' (2009) ஆகிய மூன்று நூல்களை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு அதன் உள்ளடக்கச் செய்திகள் குறித்து விரிவான ஓர் உரையாடல் கட்டுரையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மூன்று திறனாய்வு வரலாற்று நூல்களுமே கல்விப்புலம் சார்ந்தவர்களால் எழுதப்பட்டுள்ளது என்பதை முன்வைக்கிறார். தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு இக்கால நவீன இலக்கியத்திலிருந்து தொடங்குகிறது என்பதை மூவருமே குறிப்பிடுகின்றனர் என்ற செய்தியைத் திறனாய்வு வரலாற்று நூல்களின் வரவும் காலப்பின்புலமும் என்ற பகுதியில் விவரிக்கிறார். திறனாய்வு வரலாற்று நூல்களை எழுதுவதில் உள்ள சிக்கல்கள், தரவு சேகரிப்பில் போதாமை, சிற்றிதழ் வட்டாரத்தின் முக்கியத்துவம், நூலாசிரியர்கள் பயன்படுத்திய ஆய்வு முறைமையியல், திறனாய்வு வரலாற்று விவரிப்புமுறைமையில் மூவரிடையே உள்ள வேறுபாடு, க.பஞ்சாங்கம், ம.மதியழகன் ஆகிய இருவரும் க.பூரணச்சந்திரனின் நூல் பற்றிக் குறிப்பிடாமை, உள்ளடக்கப் பொருண்மையில் வளர்ச்சி, திறனாய்வு வரலாற்று ஆவணப்பதிவுகள், திறனாய்வு வரலாற்று நூல்களின் எதிர்காலத் தேவைகள் குறித்து இக்கட்டுரை காத்திரமாகப் பேசுகிறது.

சமகால இலக்கியங்களை மேலைக்கோட்பாட்டு ரீதிய திறனாய்வு அணுகுமுறைகளைத் தொடர்புபடுத்தி வாசிப்பதை அண்மைக்காலச் செயல்பாடாகப் பார்க்கிறோம். தொடர்ந்து வாசிக்கின்ற நவீன இலக்கியப் பரிச்சயமுள்ள ஆசிரியர்களால் மாணவர்களுக்கு திறனாய்வுப் பார்வை அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது. இன்றைய வாழ்வு நவீன இலக்கியங்களில் புனைவாக்கம் செய்யப்படுகிறது. நவீன இலக்கிய வடிவங்கள் ஆங்கில ஆட்சியில் வழங்கப்பட்ட கல்வியின் தாக்கத்தாலும் மேற்குலக நாடுகளின் இலக்கியப்போக்கை உள்வாங்கி எழுந்தவை. ஆங்கிலேயக் காலனியாதிக்கம் நீக்கமாகியிருப்பினும் மக்கள் வாழ்வியலையும் மொழியையும் பண்பாட்டு விழுமியங்களையும் அச்சிந்தனை வெகுவாகப் பாதித்திருக்கிறது என்ற நூலாசிரியரின் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது. இதனால், இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்டுள்ள பண்பாட்டு மாற்றங்களுக்கும் திறனாய்வுச் செல்நெறிகளுக்கும் இடையே தொடர்பிருப்பதைத் தமிழில் நவீன இலக்கியத் திறனாய்வுச் செல்நெறிகளும் பண்பாட்டு மாற்றப் பின்புலங்களும் என்ற கட்டுரையில் விவரிக்கிறார். தமிழில் இதுவரை நடைபெற்ற திறனாய்வுகளுள் மார்க்சியத் திறனாய்வு அணுகுமுறைகளே அதிகம் என்று திறனாய்வு அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதற்கு முன்பு இருந்த திறனாய்வு முறைகள் ஒரு படைப்பின் உருவத்தையும் உள்ளடக்கத்தையும் மட்டுமே அணுகியிருப்பதை நூலாசிரியர் சுட்டிக் காட்டி மார்க்சியத் திறனாய்வின் நிலைபேற்றையும் அதன் பின்னடைவு பற்றியும் கட்டுரையில் விவாதிக்கிறார். மார்க்சியத்திற்குப் பிறகு விளிம்புநிலை மக்களின் வாழ்க்கை இலக்கியங்களில் முதன்மைப்படுத்தப்பட்டபோது, பின்னமைப்பியல், பின்காலனித்துவத் தாக்கத்தால் தலித்தியம், பெண்ணியம், சூழலியப் பெண்ணியம், திருநர், திருநங்கை சார்ந்த இலக்கியத்தைத் திறனாய்வுக் கண்ணோட்டத்துடன் அணுகும்முறை மேலெழுந்த சூழலை நூலாசிரியர் தகுந்த தரவுகளுடன் விளக்கியிருப்பது இந்தக் கட்டுரையின் பலமாகக் கருதுகிறேன்.

இந்திய வரலாற்றில் தத்துவப் பின்புலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய பௌத்தமும் உலகளாவியத் தத்துவப் பின்புலத்தில் கோலோச்சிய, கோலோச்சி வருகின்ற மார்க்சியமும் எவ்வாறு பொருள்முதல்வாதச் சிந்தனைகளின் அடிப்படையில் செயல்பட்டன என்பதை விவாதிக்கும் நோக்கில் 'பௌத்த – மார்க்சியப் பொருள்முதல்வாதச் சிந்தனைகள் : சில ஒப்பீடுகள்' என்ற கட்டுரை எழுதப்பட்டுள்ளது. தத்துவத்தை எவ்வாறு பொருள் விளங்கிக் கொள்வது, கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் பற்றிய விளக்கம், பொருள்முதல்வாதம் வேறுபடும் தன்மை, வேத மறுப்பை முன்னிறுத்தி எழுந்த பௌத்தம், புத்தர் காலத்தில் நிலவிய வர்க்கச் சமுதாயம், பொது உடைமை, தனிமனித அதிகார நீக்கம், பரிபூரண எளிமை ஆகிய இலக்குகள் வழி கட்டமைக்கப்பட்டப் பௌத்தத்தின் 'சங்கம்' என்ற நிறுவன உருவாக்கம் பற்றி விவரிக்கும் அதேவேளையில், மார்க்சியச் சித்தாந்த முன்னோடிகளான லுட்விக் பாயர்பாக், வில்லியம்ஹெகல் ஆகிய பொருள்முதல்வாதச் சிந்தனைவாதிகளின் கருத்துகள், மார்க்சியப் பொருள்முதல்வாதச் சிந்தனைக் கட்டமைப்பு, பௌத்தமும் மார்க்சியமும் ஒத்திருக்கும் புள்ளிகள், வேறுபடும் புள்ளிகள் குறித்தும் பொருள்முதல்வாதச் சிந்தனையின் சமகாலத் தேவை குறித்தும் வாசகர்களிடையே பெரும் விவாத்தை முன்வைக்கிறது இக்கட்டுரை.

பண்டைத் தமிழ்ச் சமூகம் இனக்குழுவிலிருந்து (தாய்வழிச் சமூகம்) விடுபட்டு முடியாட்சி நோக்கி வளர்ச்சி பெற்று உடைமைச் சமூகமாக (தந்தைவழிச் சமூகம்) மாறியதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழி அறிகிறோம். உடைமைச் சமூகத்திற்கு எதிராக வைக்கப்பெற்ற முற்போக்குச் சிந்தனையாக நிலையாமையைப் பார்க்க முடிகிறது. இதனை அடியொற்றி அமைந்த தொடக்க கால அற இலக்கியங்களில் வலியுறுத்தப்பட்ட 'நிலையாமை' குறித்த சிந்தனை சைவ, வைணவப் பேரியக்கங்கள் தமிழ் மண்ணில் வலுப்பெற்றப் பின் பல நூற்றாண்டுகள் கடந்து மீண்டும் வலியுறுத்தப்படும் போக்கினைப் பார்க்க முடிகிறது. குறிப்பாக, சைவ மரபிலிருந்து கிளம்பிய தமிழ்ச் சித்தர் மரபு இதனைக் கைக்கொண்டது என்கிறார் நூலாசிரியர். மேலும் சித்தர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் சமூக அமைப்பில் இருந்த பொருளாதாரப் படிநிலைகள், சாதியப் பாகுபாடுகள், ஆண் – பெண் பேதங்கள் இருந்தன என்பதைக் கட்டுரையின்வழி நிறுவமுயல்கிறார். இதற்கு, சித்தர்கள் வெளிப்படையாகப் பாடித் தமது எதிர்ப்பை நிலைநாட்டிய சூழல் இருந்தமை சான்றுகளுடன் கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்தக் கருத்தியலின் பின்னணியில் பட்டினத்தாரின் அருட் புலம்பல் (117 பாடல்கள்), நெஞ்சொடு புலம்பல் (37 பாடல்கள்) ஆகிய இரு புலம்பல் பாடல் பகுதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையாமை குறித்து சமூகவியல் திறனாய்வு நோக்கில் இக்கட்டுரை ஆராய்கிறது. பட்டினத்தாரின் இருப்பு சமூகநிலை, புலம்பல் பாடல்களில் வெளிப்படும் தத்துவச் சார்பு, நிலையாமை, சமூகச் சமநிலை நோக்கிய விழைவு, அற நூல்களில் சொல்லப்படும் நிலையாமை கருத்தியலிலிருந்து பட்டினத்தார் வேறுபடும் இடத்தையும் அவரது தனித்தன்மையையும் சுட்டிக்காட்டி அவரது பாடல்கள் பன்முகக் கோணங்களில் ஆய்தற்குரியவை என்பதை முன்வைத்து நூலாசிரியர் விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கரிசல் எழுத்தாளர் கி.ராஜநாராயணன் 1986-இல் நெல்லை வானொலிக்காக எழுதி ஒலிபரப்பப்பட்ட 'முரண்பாடுகள்', 1997-இல் சிறார்களுக்காக எழுதிய 'ராஜா வீட்டுக் கல்யாணத்துக்குப் பூசணிக்காய்' ஆகிய இரண்டு நாடகங்களில் இழையோடும் பின்காலனித்துவக் கூறுகள் குறித்து மற்றொரு கட்டுரை நூலாசிரியரால் ஆய்ந்து எழுதப்பட்டுள்ளது. மங்கம்மாவின் மூத்த மகளான பி.ஏ. இலக்கியம் படித்த புஷ்பா முரண்பாடுகள் நாடகத்தின் தலைமைக் கதாபாத்திரம். தீப்பெட்டித் தொழிற்சாலைகளின் பெருக்கத்தால் விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக்காமை, கிராமப் பொருளாதாரப் பின்னடைவு, வறுமை, வரதட்சணைக் கொடுமை, இயந்திரப் பெருக்கம், நலத்திட்டம் என்ற பெயரில் நிலவும் போலித்தனம், பெருமுதலாளித்துவ நுழைவிற்கு அரசின் ஆதரவு,

கிராமத்துப் பெண்களின் நிலை, கிராமத்து வாழ்வில் முன்னேற்றமின்மை, ஆணாதிக்கச் சிந்தனையிலிருந்து விடுபடும் பெண்கள், காலனியாதிக்கத்தின் நுண்ணரசியல், முன்னேற்றம் என்பதன் அரசியல் புரிதல் போன்றவை நாடகப் பிரதியின் உள்ளடக்கத்திலிருந்து கட்டுரையில் விவாதிக்கப்பட்டுள்ளது. ராஜா வீட்டுக் கல்யாணத்துக்குப் பூசணிக்காய் என்ற நாடகமும் விவசாயத்தைப் பின்புலமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளதை அறிகிறோம். அதிகாரத்தைக் கேள்விக்குட்படுத்தும் போக்கும் அதிகாரத்திற்கெதிராகக் குரலெழுப்பும் போக்கும் இந்நாடகத்தில் வெளிப்பட்டிருப்பதை நூலாசிரியர் கட்டுரையில் சுட்டிக்காட்டியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். கி.ரா. நாடகத்திற்குள் வெளிப்படும் சமூக, அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட பின்காலனித்துவக் கூறுகளைக் கடந்து, ஒடுக்கப்படுவோர் சார்புநிலைப்பட்ட கதைப்போக்கைக் கைக்கொள்வதும் இக்கட்டுரையின் மூலம் புலனாகிறது என்ற நூலாசிரியரின் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

‘தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்தல் எண்ணுங்காலைக் கிழத்திக் கில்லை’ என்ற தொல்காப்பிய நூற்பாவை மறுவாசிப்பாக எடுத்துக் கொண்டு ‘தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல் கிழத்திக்கு உண்டு’ என்ற மீள்பார்வையில் அ. வெண்ணிலாவின் ‘இந்திர நீலம்’ சிறுகதைத் தொகுப்பில் இந்திர நீலம் (ஆண்டாள்), சிலம்பின் ரகசியம் (கண்ணகி), அட்சயப்பாத்திரத்தின் பசி (மணிமேகலை), என்புதோல் உயிர் (காரைக்காலம்மையார்) ஆகிய கதைகளின் பின்புலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆண்டாள், கண்ணகி, மணிமேகலை, காரைக்காலம்மையார் போன்ற இலக்கியப் பரப்பில் பேசப்படும் பெண்களையும் தர்மத்தின் ஆகுதி (திரௌபதி), கண்ணனிடமிருந்து வெளியேறாத கோபியர்கள் (பிருந்தாவனத்தில் வாழும் பெண்கள்) ஆகிய கதைகளின் பின்புலத்தில் சொல்லப்பட்டுள்ள திரௌபதி, பிருந்தாவனக் கோபியர்கள் போன்ற புராணம் வழி அறியப்படும் பெண்களையும் நித்ய சுமங்கலி (நக்கன்) என்ற கதையின் பின்புலத்தில் சொல்லப்பட்டுள்ள தேவரடியார் வழிவந்த பெண்ணையும் விலக்கப்பட்ட கனி கதையின் பின்புலத்தில் இடம்பெறும் இயேசுவிடம் உரையாடும் தாசியையும் மையப்படுத்தி எழுதப்பட்டுள்ள எட்டு கதைகளைப் பெண்மொழி நோக்கில் ஆராய்ந்து இக்கட்டுரையை எழுதியிருக்கிறார் நூலாசிரியர். எழுத்தில் கிளர்ந்தெழும் பெண்மொழி, மதிப்பீடுகளைக் கேள்விக்குட்படுத்தும் பெண்மொழி, காதல் x காமம் என்கிற எதிர்நிலைகள், கணவன் x மனைவி: எதிரெதிர் அவாவும் உறவு நிலை எனும் தலைப்புகளில் விரிவாக விவாதித்து சமூகப் போக்கில் ஆணாதிக்க மனநிலைக்கு எதிராக, கலகக் குரலாகப் பெரும் உடைப்பை ஏற்படுத்துமளவிற்கு வலிமை வாய்ந்ததாக அ.வெண்ணிலாவின் கதைகள் இடம்பெற்றிருக்கின்றன என்று சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்ச் சூழலில் புலம்பெயர்வு இலக்கியங்கள் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிச் சமகாலம் வரையிலும் தொடர்ந்து எழுதப்பட்டு வருகின்றன. கல்வி, வேலைவாய்ப்பு போன்ற காரணங்களால் நிகழும் புலப்பெயர்வு விருப்பத்தின் பேரில் நிகழ்வதென்பதும் அரசியல் நெருக்கடி, பொருளாதார வீழ்ச்சி, போர் காரணங்களால் வெளியேற்றப்படும் புலப்பெயர்வு கட்டாயத்தின் பேரில் நிகழ்வதென்பதும் வெளிப்படை. இப்பொருண்மை சார்ந்து புலம்பெயர் இலக்கியங்கள் ஆக்கம் பெறுவது காலத்தின் தேவையாகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு புலம்பெயர் இலக்கியங்கள் அடைந்திருக்கின்ற உச்சம், அதன் எதிர்காலப் போக்கு, புலம்பெயர் இலக்கியத்தின் முக்கியத்துவம் போன்றவை குறித்து நூலாசிரியர் ‘தமிழ்ச் சூழலில் புலம்பெயர் இலக்கியத் திறனாய்வின் தேவையும் வரவும்’ என்ற கட்டுரையில் விவாதிக்கிறார். புலம்பெயர்வு – புகலிடப்பெயர்வு குறித்தப் பொருள் விளக்கம், தமிழில் புலம்பெயர் இலக்கியம் தோன்றுவதற்கான காலப் பின்னணி, தமிழ்ப் புலம்பெயர் இலக்கியப் படைப்பாளர்களும் படைப்புகளும், புலம்பெயர் கவிதை, சிறுகதை, நாவலாக்க முயற்சிகள், படைப்பாளர்கள், தமிழில் புலம்பெயர் இலக்கியம் குறித்த உரையாடல்கள், தமிழில் புலம்பெயர்வு இலக்கியத் திறனாய்வு – தோற்றப் பின்புலம், புலம்பெயர் இலக்கியத் திறனாய்வு செய்தனவும் செய்ய வேண்டியனவும் குறித்துக் காத்திரமாக நூலாசிரியர் கட்டுரையில் விவாதித்திருப்பது கவனத்திற்குரியதாகும்.

இன்றைய நவீனத் தமிழ் வாழ்வியல் பண்டைத் திணை மரபின் தொடர்ச்சிதான் என்கிற பார்வை பொருத்தமானதா? உலகளவில் பேசு பொருளாக இருக்கும் சூழலியல் திறனாய்வின் வகிபாகம் தற்காலத் தமிழ்ச் சூழலில் என்ன? என்ற கேள்விகளோடு ‘தமிழில் திணைக் கோட்பாடும் சூழலியல் திறனாய்வும் : மரபும் நவீனமும் நிகழ்த்தும் வாழ்வியல் ஊடாட்டங்கள்’ கட்டுரையை எழுதியிருக்கிறார் நூலாசிரியர். திணைக்கோட்பாடு – சில சூழலியப் புரிதல்கள், நிலத்தைப் பெயரிடுதலின் நுண்ணரசியல், திணைக்கால, தற்கால உணவு முறை,

பண்டைத் திணைச் சமூகம் இயற்கையைத் தன்னிலையிலிருந்து விலக்கியதா?, தமிழும் சூழலியல் திறனாய்வும், சூழலியப் பெண்ணியம், பண்பாட்டுச் சூழலியல், நாட்டுப்புறவியல் நோக்கில் திணைக்கோட்பாடும் சூழலியலும், சூழலியல் பார்வையில் மீள்வாசிப்புக்குள்ளாகும் ஆளுமைகளும் கருத்தாக்கங்களும் எனும் பொருண்மையில் விவாதிக்கின்ற இக்கட்டுரை நம்முன்னே பல கேள்விகளையும் ஆய்வின் தேவைகளையும் விட்டுச் செல்கின்றன.

நிறைவாக, இந்நூலின் பொருண்மைகளில் காணலாகும் தனித்தன்மைகள் குறித்துச் சுருக்கமாக இங்கு உணர்ந்துகொள்ளலாம். தமிழில் திறனாய்வு வரலாற்றை விவரிக்கும் மூன்று நூல்களை அறிமுகம் செய்து, அதன் உள்ளடக்கங்கள் குறித்த காத்திரமான விவாதங்கள், பண்பாட்டு மாற்றப் பின்புலங்களுக்கு ஏற்பப் புதிய திறனாய்வு முறைகள் உருவான விதம், மார்க்சியம், சமூகவியல், பின்காலனித்துவம், பெண்ணியம், புலம்பெயரியம், சூழலியம் ஆகிய திறனாய்வு முறைமைகளைக் கோட்பாட்டுப் பின்புலத்துடன் எழுதப்பட்டுள்ள எட்டு நீள் கட்டுரைகள் நூலில் இடம்பெற்றுள்ளன. ஆய்விற்கு எடுத்துக்கொண்ட பொருண்மை குறித்த அறிமுகம், கருதுகோள், வினாக்கள், திறனாய்வு அணுகுமுறை, ஒப்பீடு, பொருண்மையை ஒட்டிய பிற அறிஞர்களின் கருத்துகள், சான்றாதாரங்கள், தமது கருத்தை நிலைநாட்டல், எதிர்காலத்தேவை, மதிப்பீடு என அனைத்துக் கட்டுரைகளும் நேர்த்தியான ஆய்வு முறையியலைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளன. தமிழில் வெளிவந்துள்ள ஆகச் சிறந்த திறனாய்வு, ஆய்வு நூல்கள், இதழ்கள், ஆய்வேடுகள், அகராதிகள் சான்றாதாரங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள், ஆய்வு மாணவர்களிடையே இந்நூல் பரவலாகப் போய்ச் சேரவேண்டும். ஓர் ஆய்வாளர் கட்டுரை எழுதுவதற்கு எவ்வளவு நூல்களை வாசிக்க வேண்டும், அதை எவ்வாறு ஒரு கோர்வையாக ஆய்வுப் பின்புலத்துடன் வெளிப்படுத்த வேண்டும் என்பதற்குச் சான்றாக இந்நூலைக் குறிப்பிடலாம். ஒட்டுமொத்தத்தில், தமிழ்ச் சமூகம் வரவேற்கத் தகுந்த ஒரு தேர்ந்த கோட்பாட்டாய்வு நூலாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

●

**கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை – 600 030.**


NCBH

**நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடாக**

# மீள் புரிதல் நோக்கில் செவ்வியல் நூல்கள்

# தமிழாய்வு வரலாற்றில் ஓர் அரிய முயற்சி

**கூர்மையான, பல அடுக்குத் திட்டமிடலுடன்**

**பல முறை பலரால் மதிப்பீடு செய்யப்பெற்று**

**‘விழி’ - இணைய அமர்வில் விவாதித்து மேம்படுத்தப்பட்ட**

**64 அறிஞர்களின் ஆய்வுரைகள் 1300 பக்கங்களில்**

**12 தொகுதிகளாக விரைவில் வெளிவருகின்றன**



# பெண் பெண்ணியம் பெண்ணிய

## அரசியல் குறித்த மீள் வரையறைக்கான உரையாடல்



முனைவர் மு. ஏழுமலை

பேராசிரியர் அ. மங்கை அவர்களால் பல்வேறு சூழல்களில் எழுதப்பட்டக் கட்டுரைகளின் தொகுப்பாக 2025 மே மாதத்தில் நியுசெஞ்சுரி புத்தக நிறுவனத்தின் வெளியீடாகத் தமிழ் ஆய்வுலகத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ள நூல் “ஒரு கோப்பைத் தண்ணீர் – பெண்ணியம் குறித்த கட்டுரைகள்” என்னும் நூல்.


பேராசிரியர் அ. மங்கை அவர்கள் குறித்த அறிமுகம் தமிழ்ச் சமூக வாசிப்பாளர்களுக்கு வேண்டப்படாதுதான். ஆனாலும் அவரின் தொடர்ச்சியான செயல்பாடுகளை இளம் ஆய்வாளர்கள் அறிந்துகொள்வதும் இன்றியமையாதது. இந்நிலையில், பேராசிரியர் அ. மங்கை அவர்கள் பெண்ணியம், நாடகவியல் சார்ந்த களங்களில் தொடர்ச்சியாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பவர். படித்ததும் பணியாற்றிய துறையும் ஆங்கிலத் துறையாக இருப்பினும் தமிழ் இலக்கியம் சார்ந்த வாசிப்பிலும் ஆழங்கால் பட்டவர். தமிழில் தொடர்ச்சியாக உரையாற்றியும் எழுதியும் வரக்கூடியவர். இத்தகைய முற்போக்கு நிலையிலான செயல்பாட்டின் தொடர்ச்சிக்கு இடதுசாரிய சிந்தனையாளர்கள் குழுமிய சூழலில் வளர்ந்ததும்/வாழ்ந்து வருவதும் மிக முக்கியக் காரணம் எனலாம்.

தமிழ்ச் சமூகம் குறித்த அடையாளங்களை மீட்டெடுத்தலுக்கான முறையியலாக: யூகங்களை முன்வைத்த கற்பனாவாத கருத்தியலைத் தவிர்த்து மக்களின் வாழ்வியல் அடிப்படையில் யதார்த்தவாத பின்புலத்தோடு அணுகுதல் என்பது பேராசிரியரின் ஆய்வு அணுகுமுறையாக உள்ளது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் அவர்கள் பெண்ணியம், நாடகவியல் சார்ந்த அணுகுமுறையிலான நூல்களை வெளியிட்டு, தமிழ்ச் சமூக அடையாள மீட்டுருவாக்கத்திலும், புதிய தலைமுறையினர் முன்னெடுக்க வேண்டிய ஆய்வு முறைக்கான வழிகாட்டியாகவும் தம் ஆய்வு நூல்களை கொண்டுவருவதில் சிரத்தையான செயல்பாட்டை மேற்கொண்டு செயல்படக்கூடிய செயல்பாட்டாளர்.

பேராசிரியர் அ. மங்கை அவர்களின் "ஒரு கோப்பைத் தண்ணீர் – பெண்ணியம் குறித்த கட்டுரைகள்" என்னும் இந்நூல் சமகாலத்திற்கு பன்முக முக்கியத்துவத்திற்கு உரியதாக உள்ளது. குறிப்பாகத் தமிழ்ப் பெண்ணிய சிந்தனையைப் புரிந்துகொள்வதில் முக்கிய பங்கு வகிக்கும். பெண் உடல் சார்ந்த தாக்குதல்களும் பெண்ணிய கருத்தியல் சார்ந்த விமர்சனங்களும், பெண் அரசியல் மீதான விவாதங்களும் தற்போது தொடர்ந்து அதிகரித்துவரும் சூழலில் இந்நூல் உணர்த்தும் பால்/பாலினம், பெண் – பெண்ணியம் – பெண்ணிய அரசியல் குறித்த கருத்துகள் காலத்திற்கு வேண்டிய வினையாற்றும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் பெண் – பெண்ணியம் சார்ந்த உரையாடலை முன்வைப்பதற்கான இருபது கட்டுரைகளைத் தாங்கியுள்ளது. இக்கட்டுரைகள் பல்வேறு சூழலில் பல நோக்கங்களுக்காக எழுதப்பட்டக் கட்டுரைகளைகளாக இருந்தாலும் இக்கட்டுரைகளை அனைத்தையும் தொகுத்து வாசிக்கும்போது கிடைக்கக்கூடிய புரிதல் இதுவரை போதிக்கும் கருத்துகளிலிருந்து வேறுபட்ட புரிதலையும் உணர்வையும் அளிக்கக் கூடியதாக உள்ளது. பெண் எனும் பாலினம் சார்ந்த மதிப்பீடுகள் காலந்தோறும் தொடர்ந்து கொண்டே வருவதை வரலாற்றுச் சான்றுகளாக நாம் கொள்ளும் அனைத்திலும் படிந்துள்ளதைக் காண முடியும். இந்நிலையில்தான் இந்நூலாசிரியர் ஒரு குறிப்பிட்ட இலக்கியங்களையோ, ஒரு குறிப்பிட்ட இயக்கங்களையோ, ஒரு குறிப்பிட்ட கருத்தியலையோ மட்டும் எடுத்துக்கொண்டு பெண்ணிய அரசியல் குறித்து தன் உரையாடலை நிகழ்த்தவில்லை. பல நூற்றாண்டு கால வெளியின் பதிவுகளில் குறுக்கும் நெடுக்குமான பார்வையினால் பெண்ணியம் குறித்து உரையாடுவது ஒரு பெண்ணிய ஆய்வாளருக்கான நேர்மையையும், நோக்கத்தையும் உணரச் செய்கிறது. மேலும், இந்நூலின் எழுத்துகள் பேராசிரியரின் வாசிப்பு, பேச்சு, எழுத்து ஆகியவற்றில் இருந்த எல்லைகள், விரிவுகள் ஆகியவற்றையும் உணர்த்துகின்றன.

பெண்களைப் பற்றி பேசுபவர்கள் பெண்ணியவாதிகள் என்ற வரையறையில் உள்ளவர்களிலிருந்து இவரின் எழுத்தும் உரையாடலும் வேறுபடுவதை இந்நூலின் எழுத்துகள் நுட்பமாக உணர்த்துகின்றன. இந்நூலுக்கான அணிந்துரையில் பேராசிரியர் மங்கை அவர்களின் எழுத்துகள் குறித்து பொன்னி அரசு அவர்கள் குறிப்பிடும்போது "அறிவுருவாக்கம் மட்டுமே தமது வேலையாக செய்பவரின் எழுத்து முறைக்கும், சமூக மாற்றச் செயல்பாட்டாளராக இருந்து பலவகை மனிதர்களை தினமும் சந்தித்து வரும் நபர்கள் செய்யும் அறிவுருவாக்க எழுத்திற்கும் பெரும் வித்தியாசம் உண்டு. மங்கையின் எழுத்துக்கள் மனக் கிளர்ச்சியை உருவாக்குபவையாக இருப்பதற்கு முக்கியக் காரணம், பலரும் புரிந்துகொள்ளும் வரைகயில் விளங்கும் அவரது எழுத்து நடை, இத்தகைய எழுத்துமுறை சமூக மாற்றம் சார் அறிவுருவாக்கத்தில் ஒரு முக்கிய விழுமியமாக விளங்குவது அவசியம். இலகுவாக உள்ளதனால் கூறும் விடயங்கள்




**ஒரு கோப்பைத் தண்ணீர் – பெண்ணியம் குறித்த கட்டுரைகள் | அ. மங்கை | நியு செஞ்சுரி புக் ஹவுஸ் | மே 2025 | விலை 230**

ஆழமற்றவையோ, நுணுக்கமற்றவையோ அல்ல. மிகவும் சிக்கலான சிந்தனைகளை, உலகளாவிய சூழலிலிருந்து தமிழில் இலகுவாக வெளிப்படுத்த, முற்போக்குவாத சமூக மாற்றப் பணி, குறிப்பாக பெண்ணியப் பணி எம்மை பழக்குகிறது. இந்தப் பயிற்சி மங்கையின் எழுத்துகளில் தெளிவாகின்றது'' என்று விளக்குவதன் மூலம் பேராசிரியரின் இந்நூல் எழுத்துகள் வெறும் அறிவுருக்கத்தோடு மட்டும் நின்றுவிடாமல் கலையுருவாக்கமாகவும் சமூக மாற்றத்தினை அடிப்படையாகக் கொண்டதாகவுமான காத்திரக் குரலையும் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

இந்நூலின் எழுத்து சார்ந்த மொழி, நடை உள்ளிட்ட புறச் சிறப்புகளோடு, எழுத்தின் உள்ளடக்க அக உரையாடல் என்பது பெண்ணிய கருத்தியலை விளக்குவதோடு, பெண்ணிய வாதிகள் குறித்த வரையறையையும் விளக்கத்தையும் உணர்த்துகிறது. இவற்றை பொன்னி அரசு தன் தாயின் ஆளுமைப் பண்மை விளக்க முற்படும்போது, ''பெண்ணியவாதிகள் என்று நான் கூறுவது, ஆணாதிக்க சிந்தனை மற்றும் சமூக ஏற்றத்தாழ்வினை புறக்கணிக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு, அவ்வடித்தளத்திலிருந்து பேசி, எழுதி, வாழ்ந்து வருபவரைத்தான். இந்த ஏற்றத்தாழ்வுகளை வாயால் மட்டும் எதிர்த்து, மனதால் ஏற்று, பெண்கள் பற்றிப் பேசினால் அது பெண்ணியம் என்று எண்ணும் நபர்களை அல்ல! இப்படியான பெண்ணிய வரலாற்றினுள் 1980களில் கற்று வளர்ந்தவருள் ஒரு முக்கிய ஆளுமையே எனது தாயான மங்கை'' என்று குறிப்பிடும் தன்மை இந்த நூல் முழுவதும் பிரிதிபலிக்கிறது. அவற்றிற்குச் சான்றாக பெண்ணியம் 'பெண்' பற்றியதோ 'பெண்'ணிடம் பேசுவதோ, 'பெண்' களால் பேசப்படுவதோ அல்ல. பெண்ணியம் பாலின அடிப்படையில் தொழிற்படும் ஒட்டுமொத்தச் சமூகம் பற்றியது என்ற பேராசிரியர் மங்கை அவர்களின் கருத்து சமூகத்தின் மீதான அவரின் பிரக்ஞையை வெளிப்படுத்துகின்றது.

பெண்ணியம் பேசுகிறோம் என்ற நிலையில் ஒரு வறட்டுத்தனமான மொழியில் வலிமையிழந்த மொழியில் பேசிக் கொண்டிருக்கும் நிலையிலிருந்து மாற்றம்பெற்று இந்நூல் வழியாக பேராசிரியர் மங்கை அவர்கள் பெண்ணியம் சார்ந்து முன்வைக்கும் வினாக்களும், விளக்கங்களும் இச்சமூகம் காலந்தோறும் பெண் – பெண்ணியம், பால் – பாலினம் மீது கொண்டிருக்கும் மதிப்பீடுகளை, கருத்தியல்களை கலைத்துப் போடுவதாக உள்ளது. பெண்ணியம் சார்ந்து எடுக்க வேண்டிய கருத்தியல் சார்ந்த முன்மொழிவுகளையும் எடுத்துவைப்பதாகவும் உள்ளது.

பெண் விடுதலையை முன்னிருத்தி பெண்ணியம் தொழிற்படுகிறது எனில், பெண் ஏன், எப்போது விடுதலையற்றுப் போனாள்? என்ற பேராசிரியர் அவர்களின் கேள்வியும், உடல் குறித்து நமது புரிதல் என்ன? உடலைக் குறித்து எப்படி பேசுகிறோம்? உடலைக் கட்டமைப்பதில் மொழியின் பங்கு என்ன? ஆகியவை பெண்ணிய அரசியலின் முக்கிய அடிப்படையாகிறது என்ற கருத்தும், மத நிறுவனங்கள் எல்லாக் காலத்திலும் தமது அடையாளங்களைப் பெண்ணின் இருப்பு மூலமே வலியுறுத்தி வந்துள்ளது என்பதும் பேராசிரியரின் மிக முக்கியத்துவம் வாய்ந்த பதிவுகளாகும். இவைமட்டுமின்றி, தாய்மை என்பதை உணர்ச்சிப் பிழம்பாக்கிக் குமுறும் பிம்பங்கள் நம் மத்தியில் ஏராளம் உண்டு. தாய்மையைத் தனி மனித உணர்வாக மட்டுமே பார்ப்பது அன்னையர் தின வரலாற்றைத் திரிப்பதாகும். அன்னையர் தினம் என்பது போருக்கு எதிரான குரல், பெண்கள் மற்றும் குழந்தைகளின் உடல் நலம் – சுகாதாரம் குறித்த புரிந்துணர்வைக் கோருவது, மாற்று மதிப்பீடுகளை முன்வைப்பது என்பதும், பெண்ணினம் இன்று பெண்களாக அறியப்படுவது உடற்கூறு சார்ந்த விஷயமாக மட்டும் இல்லை. பெண் என்றால் அழகு, சுகம், மென்மை, வலிமையற்ற தன்மை, அடக்கம், பொறுமை, தியாகம் போன்ற பல சிந்தனைகள் மனதில் வேகமாகப் பரவுகின்றன. அதேபோல, ஆண் என்றால் வீரம், வலிமை, வேகம், சினம், தலைமை போன்றவை தோன்றுகின்றன என்பதும், அகலிகை, நளாயினி, சீதை என்று கற்பை முக்கியப்படுத்தும் புராணங்களுக்கு மாற்றாகப் பழையனூர் நீலி, மாரியம்மன், வண்டி மலைச்சி போன்ற சிறு தெய்வங்கள் சார்ந்த படிமங்கள் வாய்மொழி வடிவங்களில் காணக்கிடைக்கின்றன என்ற பல்வேறு கருத்துத் தெறிப்புகள் இந்நூலின் முக்கியத்துவத்தை வெளிப்படுகின்றது.

தமிழ்ச் சமூகத்தில் இந்நூல் வாசிப்பளவில் பரவலாக்கம் அடைந்தால் தமிழ்ப் பெண்ணிய சிந்தனையைப் புரிந்துகொள்வதோடு பெண் – பெண்ணியம் – பெண்ணிய அரசியல் சார்ந்த மீள்வரையறையும் கட்டமைக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

●

**கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை.**



# தமிழக கம்யூனிச இயக்கமும் தோழர்களும்

தோழர் கே. ஜீவபாரதி அவர்கள் இடதுசாரி இயக்கத் தோழர்களிடம் நன்கு அறிமுகமானவர். மார்க்சியக் கருத்தியலைத் தமது எழுத்துகளின் மூலம் அனைவரிடமும் எளிதாகக் கொண்டு சேர்த்த மூத்த தோழர். எதனையும் இயக்கவியல் பார்வையில் அனுகி அதன் உண்மைத் தன்மையை அறிந்து வெளிப்படுத்தும் ஆற்றல் உடையவர். இலக்கியவாதி, இதழியலாளர், திரைப்பட பாடலாசிரியர் மற்றும் இயக்குநர் எனப் பல்வேறு முகங்களைக் கொண்ட இவர் பல்வேறு ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார். கம்யூனிஸ்ட் தலைவர்கள் தமிழகச் சட்டப்பேரவையில் நிகழ்த்திய உரைகளைத் தேடித் தொகுத்து சிறந்த ஆவணமாக அளித்துள்ளார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், தோழர் ப.ஜீவானந்தம், வேலு நாச்சியார் ஆகியோரின் வரலாற்றினைக் கள ஆய்வின் வழி ஆவணப்படுத்தியதில் இவரின் கடுமையான உழைப்பினை அறிந்து கொள்ளலாம். இவ்வரிசையில்



முனைவர். சி. இளங்கோ

சமீபத்தில் 'காலந்தோறும் கம்யூனிஸ்டுகள்' (பாகம்- 1,2) என்ற தலைப்பில் இடதுசாரி இயக்கத் தோழர்களின் இரத்தக் கறைபடிந்த வாழ்க்கையை நூலாக ஆவணப்படுத்தியுள்ளார். இந்நூலுக்குச் சிறந்த ஆய்வுரையினைத் தோழர் இரா. முத்தரசன் அவர்கள் வழங்கியுள்ளது சிறப்பாகும்.

ஒவ்வொரு காலத்திலும் தொகுப்பாளர்கள் தோன்றுகின்றனர். அவர்கள் தங்கள் வாழ்ந்த காலத்தின் சமூக இயக்கப் போக்குகளையும் செயல்பாடுகளையும் ஏதோ ஒரு வகையில் அடுத்தத் தலைமுறையினருக்கு ஆவணப்படுத்தி தொகுத்தளிக்க வேண்டும் என்ற சமூக அக்கறையோடு செயல்படுகின்றனர். கள ஆய்வின் வழி கிடைத்த தரவுகளை இயக்கவியல் பார்வையில் ஒழுங்குபடுத்தி உருவாக்கப்படும் தொகுப்புகளே காலம் கடந்தும் சமூக வரலாற்றினை எழுதும் கருவி நூல்களாக மாற்றம் பெறுகின்றன. இந்தத் தன்மைகளை உள்வாங்கி தோழர் கே. ஜீவபாரதியால் உருவாக்கப்பட்ட தொகுப்பு நூல்தான் இது.

18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மார்க்சிய தத்துவம் உலகத் தொழிலாளி வர்க்கத்தினரிடம் பெரிய செல்வாக்கினைப் பெற்றது. நாளடைவில் அது காலனிய நாடுகளில் உள்ள ஆட்சியர்களுக்கு எதிரான அரசியல் வேலைத் திட்டமாக மாறியது. இவ்வாறாக ஜெர்மன் சித்தாந்தவாதி மார்க்சின் தத்துவம் ஆசிய நாடுகளின் அரசியலைத் தீர்மானித்தது என்று கூறலாம்.

இந்திய இடதுசாரி இயக்க வரலாற்றில் தமிழகத்தின் பங்கு முக்கியமானதாகும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் வேர்பிடித்த கம்யூனிச இயக்கம் விடுதலை வேண்டி போராடிய மக்களிடம் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது.

தத்துவவாதிகள், நடைமுறைவாதிகள் என்ற படிநிலையில் தோழர்கள் மார்க்சியத் தத்துவத்தினை அடுத்தடுத்த நிலைக்கு வளர்த்தெடுத்தனர். பாட்டாளி வர்க்க ஆசான்களான மார்க்ஸ்-எங்கெல்ஸ் இவர்களைத் தொடர்ந்து மார்க்சிய தத்துவத்தினை நடைமுறைப்படுத்திய தலைவர்களான லெனின், ஜே.வி, ஸ்டாலின், மாவோ சே துங், ஃபிடல் காஸ்ட்ரோ முதலான செயல்பாட்டாளர்கள் மார்க்சியத்தினை வளர்த்தெடுத்தனர். முதலாளித்துவ அடிமை முறைக்கு மாற்றான சமத்துவ - கம்யூனிச உலகினை இவர்கள் பாட்டாளி வர்க்கத்திற்கு அடையாளம் காட்டினர். கம்யூனிசம், சோசலிசம் குறித்த விவாதங்கள் உலக அரசியலை தீர்மானிக்கும் சக்தியாக மாறியது.

'நடைமுறையில்லாத தத்துவம் வரட்டுத் தனமானது, தத்துவம் இல்லாத நடைமுறை குருட்டுத் தனமானது' - என்று மார்க்சியம் தன்னைத்தானே சுயவிமர்சனம் செய்து கொள்ளும். மார்க்சியத்தினை லெனின் 1917 ஆம் ஆண்டு ருஷ்யப் புரட்சியின் மூலம் நடைமுறைப்படுத்திக் காட்டினார். இது உலக தொழிலாளி வர்க்கத்தினரிடம் புதிய நம்பிக்கையினை ஏற்படுத்தியது, இதன் தொடர்ச்சியாக நடைபெற்ற சீனப் புரட்சியானது ஆசியக் கண்டத்தின் அரசியல் மாற்றத்திற்கான பாதையை பிற கண்டங்களுக்கு உணர்த்தியது.

## தமிழகமும் கம்யூனிஸ்டுகளும்

முதலாளித்துவச் சுரண்டல் போட்டியால் வெடித்த இரண்டு உலகப் போர்களும் உழைக்கும் மக்களை அகதிகளாகவும் அடிமைகளாகவும் மாற்றியதோடு அல்லாமல் அணு ஆயுதத்தால் கொன்றும் குவித்தது. நாசிஸ்டுகளுக்கும் பாசிஸ்டுகளுக்கும் எதிராக மார்க்சிய இயக்கத்தின் தேவையை உழைக்கும் மக்கள் அப்பொழுது முழுமையாக உணரத் தொடங்கினர். ஐரோப்பாவின் காலனியச் சந்தையாக விளங்கிய இந்திய அரசியலில் இடதுசாரி இயக்கக் கருத்துகளும் அதன் செயல் வடிவத்திற்கான இயக்கக் கட்டமைப்புகளும் இக்காலத்தில்தான் உருப்பெற்றன. தமிழகத்தில் தோழர் சிங்காரவேலர், ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, வி.சிந்தன், பாலதண்டாயுதம் முதலானத் தோழர்கள் பொதுவுடைமை இயக்கத்திற்கு அடிகோலி அதனை வளர்த்தெடுத்த வரலாற்றினை நாம் அறிவோம்.

முதலாளித்துவத்தின் சுரண்டலையும் உழைக்கும் மக்களுக்கான விடுதலையையும் பேசிய இந்தியப் பொதுவுடைமை இயக்கமானது பல்வேறு அடக்குமுறைகளைச் சந்திக்க நேர்ந்தது. இதில் பல்வேறு இயக்கத் தோழர்கள் கடுமையான நெருக்கடிகளை எதிர் கொண்டனர். பகத்சிங் தொடங்கி அடிமட்டத் தோழர்கள் வரை அவர்கள் அனுபவித்த துன்பங்கள் அளவிட முடியாததாகும்.

இந்தியத் தொழிலாளி வர்க்கத்தினர் ஏற்படுத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர் அமைப்புகளைக் கண்டு ஆங்கிலேயர்கள் அச்சமடைந்தனர். மக்களிடம் புரட்சிகர சிந்தனைகள் வேகமாகப் பரவிய நிலையில் 1934 இல் இந்தியாவில் இயங்கிய கம்யூனிஸ்ட் கட்சி முதல் முறையாகத் தடை செய்யப்பட்டது. பின்னர் தடை நீக்கப்பட்டு இரண்டாம் உலகப் போர் சூழலில் கட்சி இரண்டாவது முறையாக 1940 இல் தடைசெய்யப்பட்டு, பின்னர் 1942 இல் தடை நீக்கப்பட்டது. 1948 இல் சுதந்திர இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி மூன்றாவது முறையாகத் தடை செய்யப்பட்டு இயக்கத் தோழர்கள் வேட்டையாடப்பட்டனர். தலைமறைவு வாழ்க்கை, கண்டதும் சுடும் உத்தரவு, தீவிரவாதிகள் என்று முத்திரைக் குத்தி சித்திரவதை




**காலம்தோறும் கம்யூனிஸ்டுகள் | கே. ஜீவபாரதி | வெளியீடு: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை**

செய்வது, இயக்கத் தோழர்களின் இருப்பிடங் களைக் கேட்டு கொடுமைப்படுத்துவது எனப் பல அடக்குமுறைகளை அன்றைய ஆளும் காங்கிரஸ் கட்சி எடுத்த நடவடிக்கைகள் மனிதத் தன்மையற்றதாகவே இருந்தது. தொடர்ந்து இயக்கத்தினைப் பலவீனப்படுத்த அவர்கள் முன்னெடுத்த முயற்சிகளும் ஒடுக்குமுறைகளும் அதன் காரணமாக பலியான தோழர்களின் தியாகமும் துயரமும் வலி மிகுந்ததாகும். அவர்கள் அனுபவித்த சிறைக் கொடுமைகளோ அளவிட முடியாதது. இதனை ஆழமாக தோழர் கே. ஜீவபாரதி இந்நூலில் தொகுத்தளித்துள்ளார்.

இந்திய அரசியலில் அன்றைய இடதுசாரி இயக்கத் தோழர்கள் முன் பல்வேறு களங்கள் இருந்தன.

- காலனிய ஆட்சியாளர்களின் செயல்பாடுகளை எதிர்கொள்வது.
- மதவாத அடிப்படைச் சக்திகளுக்கு எதிராகப் போராடுவது.
- பிரிவினைவாதத்திற்கு எதிராகப் போராடுவது.
- சாதிய - தீண்டாமைக்கு எதிரான அரசியலை முன்னெடுத்தல்.
- சுரண்டலுக்கு எதிரான வர்க்கப் போராட்டத்தினைக் கட்டமைத்தல்.
- பண்ணை அடிமை முறைக்கு எதிராகப் போராடுவது.
- கோயில் நுழைவு உரிமைக்கானப் போராட்டங்களை முன்னெடுப்பது.

இவை அன்றைய தமிழகத்தில் இடதுசாரி இயக்கத் தோழர்கள் முன்னெடுத்த மாற்று அரசியல் இயக்கத்திற்கான களங்கள் ஆகும். சமூக விடுதலைக்கான அரசியலை முன்னெடுக்கும் பொழுது அந்நாட்டின் தன்மைகளை அறிந்து அதற்கு ஏற்றார் போல் கட்சிக் கட்டும் நடைமுறையினைத் தோழர்கள் நன்கு புரிந்து செயல்பட்டனர்.

தமிழக இடதுசாரி இயக்க வரலாற்றினையும் தோழர்களின் வெகுசன செயல்பாடுகளையும் காலவரிசையில் கே. ஜீவபாரதி இந்நூலில் தொகுத்தளித்துள்ளார். கட்சியின் தலைமைத் தோழர்கள் முதல் கடைநிலைத் தோழர்களின் செயல்பாடுகள் வரை இந்நூல் பதிவு செய்கின்றது. ஒவ்வொரு தோழர்களும் முன்னெடுத்தப் போராட்டங்கள், அவர்கள் சந்தித்த நெருக்கடிகள், சிறைக் கொடுமைகள், குடும்ப நெருக்கடிகள், காவலர்களால் அவர்கள் சித்தரவதைச் செய்து சுட்டுக் கொல்லப்பட்ட வரலாறு என அனைத்தையும் பதிவு செய்கின்றது. தமிழக கம்யூனிச இயக்கத் தோழர்களின் வர்க்கப் போராட்ட வரலாற்றினை இந்நூல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

தமிழகத்தில் கம்யூனிச இயக்கம் தோன்றுவதற்கு முன்னர் காங்கிரஸ் இயக்கத்திலும், சீர்திருந்த அரசியலிலும் தங்கள் செயல்பாடுகளை வகுத்துக் கொண்ட தோழர்களே பின்னாட்களில்

பொதுவுடைமை இயக்கத்தில் இணைந்து மக்களுக்காக போராடிய வரலாற்றினை இந்நூல் நுட்பமாகப் பேசுகின்றது.

### போராட்டமும் தோழர்களும்

இந்நூல் முழுவதும் இயக்கத் தோழர்கள் முன்னெடுத்த போராட்டங்களையும் இயக்கத்தினை அவர்கள் வளர்த்தெடுப்பதற்கு எவ்வாறு உழைத்தனர் என்பதை எடுத்துரைக்கின்றது. அவ்வகையில் சில தோழர்களின் செயல்பாடுகளைப் புரிந்து கொள்ளலாம். அவை வருமாறு:

- மகாத்மா காந்தி முன்னெடுத்த அந்நியத் துணிகளுக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டத்தில் தோழர் பாஷ்யம் தனியாக நின்று அந்நியத் துணிகளை விற்கும் கடைகளுக்குத் தீ வைத்த அந்த சாகச மனிதர்தான், 1932 ஜனவரி 25 இல் செயின்ட் ஜார்ஜ்கோட்டையில் இந்தியக் கொடியை பறக்கவிட்டார், என்ற செய்தி இடதுசாரி இயக்கத் தோழர்களின் மன உறுதியையும் துணிச்சலையும் காட்டுவதாகும்.
- தெலுங்கானாப் போராட்டத்தில் கலந்து கொண்ட பி. சுந்தரையா ஆந்திராவில் முதல் கட்சிக் கிளையை உருவாக்கினார், அதுமட்டுமல்லாமல் தென்னிந்தியா முழுவதும் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளைகளை உருவாக்க முயற்சித்தார்,
- தென் கன்னடாவில் உள்ள படகரா என்ற கிராமத்தில் 1907 இல் பிறந்த தோழர் பி. சீனிவாசராவ் தஞ்சைப் பகுதியில் அன்று பண்ணையார்கள் நடைமுறைப்படுத்திய கொத்தடிமை முறைக்கு எதிராக மக்களைக் கிளர்ந்தெழச் செய்து அவர்களை அரசியல்படுத்தினார். ஒடுக்கப்பட்ட விவசாயக் கூலித் தொழிலாளர்களைச் 'செங்கொடி சங்க'த்தில் இணைத்தார். அதுமட்டுமல்லாமல் அவர்களுக்குப் போராட்ட முறைகளையும் பயிற்றுவித்தார்.

அன்று தலைமைப் பொறுப்பில் இருந்த அமீர் ஹைதர்கான், மணலி கந்தசாமி, சி. எஸ். சுப்பிரமணியம் பி. சீனிவாசராவ் முதலானோர் புதிய தோழர்களுக்கு அரசியல் வகுப்புகளைக் கற்பித்து இயக்கத்தினை வலுப்படுத்தினர். தென்னிந்தியா முழுவதும் இயக்கத் தலைமைகள் ஓர் இணக்கமானத் தொடர்பில் இருந்து கட்சியினை வளர்த்தனர்.

### தோழர்கள் சந்தித்த நெருக்கடிகள்

இந்திய விடுதலைக்குப் பின் இயக்கம் தடைசெய்யப்பட்டிருந்த காலத்தில் இயக்கத் தோழர்கள் சந்தித்த நெருக்கடிகள் கடுமையானதாகும். இந்தியாவின் விடுதலை யாருக்கானது? என்ற கேள்வியும் அப்பொழுது எழுந்தது. இந்தக் காலகட்டத்தில்தான் வலதுசாரி சக்திகள் மதத்தின் பெயரால் அடித்தளமிட்டு மெல்ல வளர்ந்து வந்தன. இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சியானது ஆளும் இந்திய வர்க்கத்திற்கும் இந்திய முதலாளித்துவத்திற்கும் கடுமையான நெருக்கடியாக அமைந்திருந்த சூழலில், அதனை எப்படியாவது ஒடுக்க வேண்டும் என்ற வேலைத்திட்டத்தினை அவர்கள் கையில் எடுத்தனர். இச்சூழலில் தான் தோழர்கள் பலர் தங்கள் உயிரை மக்களுக்காக தியாகம் செய்யும் நிலை உருவானது. சில தோழர்கள் சந்தித்த வலி நிறைந்த கொடுமைகள் வருமாறு:

- 1950 களில் இயக்கம் தடைசெய்யப்பட்டிருந்த காலத்தில் திருப்பூர் பழனிச்சாமி தோழர் காவல் துறையினரின் சித்திரவதைக்கு ஆளானார். இயக்கத் தலைமைத் தோழர்களின் இருப்பிடங்களைக் கேட்டு அவர் துப்பாக்கி முனையில் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டார். பிற தோழர்களைக் காட்டிக் கொடுக்க முடியாது, தைரியம் இருந்தா என்னைச் சுடுடா, எனத் துப்பாக்கி முனையில் 'உன்னைச் சுட்டுவிடுவேன் டா' என மிரட்டிய காவலரிடம் நெஞ்சை நிமிர்த்தி வீரத்துடன் கூறி தன்னுயிரை விட்டார். சுடப்பட்டு கீழே விழும்பொழுது செங்கொடிக்கு ஜே!, புரட்சி ஓங்குக! என முழக்கமிட்டார்.
- தூத்துக்குடி மாவட்டத்தினைச் சோர்ந்த தோழர் பொன்னு 1944 இல் 'இந்திரகுல வேளாளர் சங்க'த்தை தொடங்கி அந்த மக்களுக்காகப் போராடினார். 1948 இல் 'உப்புத் தொழிலாளர் சங்க'த்தினையும் அவர் தோற்றுவித்து அவர்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடினார். விடுதலைக்குப்பின் இயக்கம் தடைசெய்யப்பட்ட காலத்தில் கட்சியில் தீவிரமாகச் செயல்பட்ட பொன்னுவை காவல்துறையினர் தேடிப் பிடித்து கைது செய்தனர். இயக்கத் தோழர்களின் மறைவிடங்களைக் கேட்டு அவரைக் கடுமையாகத் தாக்கினர். அவரது முதுகு சதை பிய்ந்து போகும் வரை அடித்தனர். இரு புஜங்களிலும் தீயை வைத்துக் கொளுத்தி மகிழ்ந்தனர். அவர் முகத்தில் காரி உமிழ்ந்தும் மூத்திரத்தினைப் பெய்தும் அவமானப்படுத்தினர். மீசையின் முடிகளை ஒவ்வொன்றாகப் புடுங்கினர். பல பொய்

வழக்குகளை அவர் மீது பட்டு இறுதியில் அவரை அடித்தே கொன்றுவிட்டனர்.

- திண்டுக்கல் மாவட்டத்தினைச் சேர்ந்த தோழர் மதனகோபால் கல்கத்தாவில் நடந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் கலந்து கொண்டவர். ஜனசக்தி பத்திரிகை நிதிக்காக தன் மனைவியின் ஒரு பவுன் மோதிரத்தைக் கழற்றி தோழர் ஜீவாவிடம் கொடுத்தவர். இவர் 1950 இல் இயக்கம் தடை செய்யப்பட்டிருந்தக் காலத்தில் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார். இயக்கத் தோழர்கள் எங்கு தங்கியுள்ளனர்? என்று கேட்டு அவரை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கடுமையாகத் தாக்கினார். நீண்ட சங்கிலியால் அவரது கால்களையும் கைகளையும் கட்டி வீதி வழியாக மக்கள் பார்க்கும்படி இழுத்துச் சென்றனர். அப்பொழுது காவல் துறையினர் பெண்களிடம் துடைப்பத்தைக் கொடுத்து, அவர்களை மிரட்டி தோழர் மதனகோபாலை அடிக்க வைத்தனர். ஒரு செருப்பைக் கொடுத்து அவரை வாயில் கவ்வும்படி வற்புறுத்தி அடித்து படுபயங்கரமாகத் தாக்கி இழுத்துச் சென்றனர். இவ்வளவு நெருக்கடிகளையும் தாங்கி உயிர் பிழைத்த தோழர் மதனகோபால் 1952 இல் நடந்த பொதுத் தேர்தலில் கட்சி சார்பாக வேடச்சந்தூர் சட்டமன்றத் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார். கம்யூனிஸ்டுகளை ஆளும் வர்க்கம் எவ்வளவு அவமானப் படுத்தினாலும் மக்களிடம் அவர்கள் பெற்றிருந்த செல்வாக்கினை இதன் வழி அறியலாம்.

இப்படி பல தோழர்கள் சந்தித்த நெருக்கடிகால வரலாறு இந்நூல் முழுவதும் விரிவாக உள்ளன.

### இயக்கத்தினை வலுப்படுத்தும் சங்கங்கள்

இடதுசாரி இயக்கச் செயல்பாட்டினூடாக தோழர்கள் சிலர் அதனை வலுப்படுத்த துணை அமைப்புகளை உருவாக்கினர். தோழர் ஏ.எஸ்.கே அவர்கள் அவ்வாறு உருவாக்கிய அமைப்புதான் 'இளைஞர்கள் பௌதீகக் கழகம்' என்ற அமைப்பாகும். இதுபோன்றே அவர் 1934 இல் 'தொழிலாளர் பாதுகாப்புச் சங்கம்' என்ற அமைப்பினைத் தோழர் ஜீவா தலைமையில் உருவாக்கினார். மதராஸ் துறைமுகத் தொழிலாளர்கள் சங்கம், சென்னை துறைமுக ஐக்கிய தொழிலாளர்கள் சங்கம், சென்னை துறைமுக ரயில்வே தொழிலாளர்கள் சங்கம் முதலான சங்கங்கள் இவரால் உருவாக்கப்பட்டவையே.

'சென்னை கம்யூனிஸ்ட் குழு' என்ற அமைப்பில் இயக்க முன்னணித் தோழர்களுடன் இணைந்து பணியாற்றிய தோழர் பி. சீனிவாசராவ் தஞ்சைப் பகுதியில் நிலவிய பண்ணையாளர்களின் கொத்தடிமை முறைக்கு எதிராக மக்களைத் திரட்டியவர். தஞ்சைப் பகுதியில் பொதுவுடைமை இயக்க அரசியலுக்கு அடித்தளமிட்ட தோழர்களில் முக்கியமானவர். இவர் மூக்குப்பொடி தொழிலாளர் சங்கம், கள் இறக்கும் தொழிலாளர் சங்கத்தினை உருவாக்கி அவர்களின் உரிமைக்காகப் போராடினார்.

தோழர் ஏ. எம். கோபு நாகப்பட்டினத்தில் ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் போது (1943) பைந்தமிழ் இளைஞர் கழகம் என்ற அமைப்பினை நிறுவினார். கும்பகோணம் அரசினர் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு இண்டர் மீடியர் படித்த போது 18 கிராமங்களில் விவசாய சங்கங்களைத் தோற்றுவித்தார் என்பதன் முலம் அவரது அயராத உழைப்பினைப் புரிந்து கொள்ளலாம்.

குடியாத்தம் பகுதியினைச் சேர்ந்த மருத்துவம் படித்த தோழர் ஜி. கண்ணபிரான் அவர்கள் 1948 இல் இயக்கம் தடை செய்திருந்த காலத்தில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தபடி கட்சி வேலைகளைத் தொடர்ச்சியாக செய்து வந்தார். இவர் பஞ்சாலைத் தொழிலாளர் சிக்கனக் கூட்டுறவு சங்கம், குடியாத்தம் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் ஆகியவற்றை நிறுவினார். வீட்டு வசதி சங்கத்தில் இருந்த 400 சங்க உறுப்பினர்களுக்குச் சொந்தமாக வீடும் கட்டிக் கொடுத்தார்.

- தோழர் எஸ். சுப்பிரமணி சர்மா (சர்மாஜி) கல்லூரியில் படித்த காலத்தில் 'தோழர்கள் மன்றம்' என்ற அமைப்பினை 1930 களில் உருவாக்கினார்.
- தோழர் மணலூர் மணியம்மை 'நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில் தொழிலாளர் சங்க'த்தைத் தொடங்கிப் பல போராட்டங்களை நடத்தினார்.
- தோழர். கே. பாலதண்டாயுதம் 1945 இல் 'சோவியத் நண்பர்கள்' சங்கம் என்ற அமைப்பினை உருவாக்கினார்.

இந்நூலில் இடம்பெற்ற சங்கங்களை இவ்வாறு தொகுத்துப் பார்ப்பதன் மூலம் அன்று இடதுசாரி இயக்கத்தினை மக்கள் எவ்வளவு ஆழமாக நம்பியிருந்தனர் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இதன் விளைவாகத்தான் அன்று பல தொழிற் சங்கங்கள் தோன்றி, வேகமாக வளர்ந்தன. சான்றாக,

- சுருட்டுத் தொழிலாளர்கள் சங்கம்,
- லாரி பஸ் தொழிலாளர்கள் சங்கம்,
- நகரசுத்தித் தொழிலாளர்கள் சங்கம்,
- ஓட்டல் தொழிலாளர்கள் சங்கம்,
- நெசவுத் தொழிலாளர்கள் சங்கம்

எனப் பல சங்கங்கள் தமிழகத்தின் ஊர்கள் தோறும் பரவியிருந்தன. இதனைத் தலைமையேற்று இடதுசாரி இயக்கத் தோழர்கள் செம்மையாக வழி நடத்தினர். ஊர்கள் தோறும் கம்யூனிஸ்ட் கட்சியினை இச்சங்கங்களே வலுப்படுத்தின. இந்நூலினை வாசிக்கின்றபொழுது பல்வேறு தொழிற் சங்கங்களின் செயல்பாடுகளையும் அதன் வரலாற்றினையும் புரிந்துகொள்ள முடிகின்றது.

**இந்நூலின் இன்றையத் தேவை**

இந்திய இடதுசாரி இயக்கத்தின் நூற்றாண்டு கொண்டாட்டச் சூழலில் வெளிவந்த இந்நூல் பல்வேறு தோழர்களின் உயிர்த் தியாகங்களை நமக்கு எடுத்துரைக்கின்றது. அடுத்த தலைமுறையினர் இதுபோன்ற தொகுப்புகளை வாசிக்கின்ற பொழுதுதான் ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறை வரலாற்றினை அறிந்து கொள்ள முடியும். முதலாளித்துவ சமூகம் எவ்வளவு நெருக்கடிமய மானது? அதனை இடதுசாரி இயக்கத் தோழர்கள் எவ்வாறு வென்றெடுக்க வழிகாட்டினர்? என்ற புரிதலையும் இந்நூல் அளிக்கின்றது. இந்நூலினை 'நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்' பதிப்பகம் சிறப்பாக வெளியிட்டுள்ளது. வண்ணப் படங்களுடன், தரமான தாளில் அச்சிட்டு, கெட்டி அட்டைக் கட்டினால் காலம் கடந்து வாழும் நூலாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கட்டுரையினைப் படிக்கும் பொழுதும் எளிதாக அதனைவிட்டு நாம் வெளியே வருவது கடினமாகவே உள்ளது. தோழர்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையையும் ஆண்டு வரிசையில் ஒழுங்குபடுத்தி ஆசிரியர் நேர்த்தியாக அளித்துள்ளார். இந்நூலினைப் படிக்கும்பொழுது அக்காலத்திற்கே நாம் சென்று தோழர்களின் வலியினையும் துன்பத்தினையும் அனுபவிப்பது போன்ற உணர்வினை ஆசிரியரின் எழுத்துநடை ஏற்படுத்துகின்றது.

தோழர்கள் அனைவரும் அவசியம் வாங்கிப் படித்து அடுத்த தலைமுறைக்கு அளிக்க வேண்டிய மிக முக்கிய நூல். இன்றையத் தலைமுறை தோழர்களுக்கு வகுப்பெடுக்க வேண்டிய வரலாற்று ஆவணமாக இந்நூல் அமைந்துள்ளது.

●

**கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, பச்சையப்பன் கல்லூரி. சென்னை.**




**'உங்கள் நூலகம்' ஈரோடு புத்தகத் திருவிழாச் சிறப்பிதழ் 07.08.2025 ஆம் தேதி மாலை ஈரோடு புத்தகத் திருவிழா சிந்தனை அரங்க மேடையில் வெளியிடப்பட்டது. செங்குந்தர் மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் எஸ். சிவானந்தன், ஆஸ்திரேலியா மருத்துவர் கார்த்தி தங்கராஜ், மேனாள் சட்டப்பேரவை உறுப்பினர் விடியல் சேகர், உங்கள் நூலகம் ஆசிரியர் த. ஸ்டாலின் குணசேகரன், அரிமா மேனாள் ஆளுநர் டி. சண்முகன், மணிமேகலைப் பிரசுரம் ரவி தமிழ்வாணன், புலவர் செந்தலை ந. கவுதமன், பாவலர் அறிவுமதி, ஜப்பான் ச. கமலக்கண்ணன், ஹைதராபாத் என். முரளி ஆகியோர் உள்ளனர்.**



கட்டுரை

# கி.ராஜநாராயணன் சிறுகதைகளில் மையமாக்கப்பட்ட விளிம்பினர் பின்நவீன நோக்கு


ரெ.காயத்ரி

முனைவர் இரா.பூங்கோதை


**பின்நவீனமும் விளிம்பு நிலையினரும்**

தொடக்க காலப் பின்நவீனச் சிந்தனைகளில் அரசியல் என்பது மையப்படுத்தப்பட்டதாக இருப்பதே அநீதியாக அறிவிக்கப்பட்டது. அரசனின் அதிகாரத்திற்கு நான்கு வகையான படைகளும் மக்களைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்பட்டன. அதையே இன்றைய அரசுகள் நவீன ஆயுதங்கள் கொண்டு செய்கின்றன. ஏதோ ஒரு வகையில் அதிகாரம் மக்களை விளிம்பு நிலையாக்கி வைத்து தன் ஆட்சியை நிகழ்த்துகிறது என்றனர். ஒரு சமூகத்தில் பல்வேறு அடுக்குகள் உள்ளன. அதில் விளிம்பாக்கப்பட்ட மக்கள் என்போர் வெகு மக்களின் நியதிகளுக்கு உட்படாதவர்கள் ஆவர். குடும்ப அமைப்பில் தன்னை இணைத்துக் கொள்ளாத பெண்கள் பரத்தையர் ஆக்கப்படுவது போல, மனநிலை பிறழ்ச்சியானவர்கள், நோயுற்றவர்கள், வறுமைக்கு ஆளானவர்கள், பிச்சைக்காரர்கள், அரவாணிகள் எனப் பலரும் விளிம்பாக்கப்பட்டவர்கள் ஆவர். பெருங்கதையாடலுக்கு மாற்றான சிறுகதையாடலை முன்னிறுத்தல் என்று இதனை பின்நவீனத்துவம் கூறுகிறது, “விளிம்புகள் ஒரு படித்தனாவை அல்ல. ஒற்றைக் கருத்தியல் கொண்டவையுமல்ல. விளிம்பு

என்பது ஒரு ஒப்பீடான கருத்தாக்கமும் கூட ஒரு மையத்திற்கு விளிம்பாக இருக்கின்ற ஒன்று அதனினும் விளிம்புடன் ஒப்பிடும் போது மையமாகச் செயல்படுகிற வாய்ப்பு உண்டு”[1] என்று அதிகாரத்துவம் செயல்படுவது போல ஒற்றைத் தன்மையில் விளிம்பினர் இருப்பதில்லை. அதன் அடிப்படையே பன்மைத்துவம் அல்லது வித்தியாசம்தான். வித்தியாசம் என்பது ஒரு படித்தானது என்பதிலிருந்து வேறுபட்டது. ஒரே உண்மை, ஒரே நீதி என்பது எப்படி சாத்தியமில்லையோ அது போல ஒரே மாதிரியான பாத்திரங்கள் சமூகத்தில் இருப்பதில்லை.

தமிழ்ச் சமூகத்தில் இலக்கியங்களில் பாண்டித்யம் என்பது போற்றப்பட்ட சூழலில் பேச்சு மொழியையும் எளிய மக்களையும் பாத்திரங்களாகக் கொள்ளும் போக்கு உருவானது. அது இலக்கியத்தில் நிகழ்ந்த பெரிய மாற்றம் என்றே கொள்ளலாம். குறிப்பாக பார்ப்பன, வெள்ளாளச் சாதியினரின் எழுத்துக்கள் மேட்டிமைத் தன்மையோடு இருந்ததற்கு மாறாக ஒதுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, பாட்டாளி மக்களை பாத்திரங்களாகச் சித்திரிக்கும் போக்கு திராவிட இயக்கக் கருத்தியல்களால் உருவானது. அது மார்க்சிய சிந்தனையினாலும் ஏற்பட்டது. “தமிழகத்தில் ஐம்பது, அறுபதுகளில் திராவிட எதிர்ப்பிலக்கியதில் ஒரு புனித ஏழை கதாநாயகனான். பண்ணைகளிடம் வேலை பார்க்கின்ற வேலையாட்கள், வண்டிக்காரர்கள், நகரங்களிலிருந்த ரிக்ஷாக்காரர்கள், குப்பை கூட்டுபவர்கள், விதவைகள், விபச்சாரிகள், அனாதைகள் போன்றவர்கள் இத்தகைய புனித ஏழையின் பிம்பத்தை அடைந்தார்கள்”[2] என்று அடித்தட்டு மக்கள் விளிம்பிலிருந்து மையப் பாத்திரங்களாக மாறிய நிலைமையைப் பற்றிக் கூறுகிறார் ராஜ்கௌதமன். ஏழை என்னும் புனிதப் பாத்திரம் என்ற அடிப்படையில் அவர்கள் கடுமையான ஒடுக்குமுறைகளை பண்ணையார்களால் எதிர்கொள்கிறார்கள் என்று சித்திரிக்கப்பட்டமையைப் பற்றிய பகடியை இக்கூற்றில் வெளிப்படுத்துகிறார்.

அவரே விளிம்பு நிலைப் பட்ட மக்களை புறக்கணிக்கப்பட்ட மக்கள் என்று அழைக்கிறார். “Subaltern” என்பதற்கு விளிம்பு நிலை மக்கள், ஓரப்பகுதி மக்கள் என்று பொருள் கூறப்படுகிறது. குறிப்பாக இனம், வர்க்கம், பண்பாட்டுப் பால், சாதி, இனக்குழு ஆகிய பிரிவுகளில் தள்ளப்பட்ட மக்கள் திரள்களை இச்சொல் குறிப்பது வழக்கம். வேறு விதத்தில் கூறுவதானால் இதுவரை புனைந்துரைக்கப்பட்ட மேலாதிக்கப் பிரிவினரின் வரலாறுகளால் பொருட்படுத்தப்படாத அல்லது புறக்கணிக்கப்பட்ட மக்கள் திரள்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.”[3] என்று குறிப்பிடுகிறார். புறக்கணிக்கப்பட்ட மக்கள் திரளில் அடையாளப்படுத்தப்படும் மக்களை மூன்று வகையாகவும் சிலர் மேலும் சிலரை இணைத்துக் கூறுவது வழக்கமாக இருக்கிறது என்றும் குறிப்பிடுகிறார்.

சமூகத்தின் பார்வையில் மனிதர்களின் செயல்பாடுகள் பல்வேறு மதிப்பீடுகளுக்கு உள்ளாகின்றன. நாகரிக மனிதன், நாகரிகமற்ற மனிதன் என்ற பகுப்புகள் காணப்படுகின்றன. அறிதல் முறையிலும் இத்தகைய பாகுபாடு இருக்கிறது. அறிவாளி, முட்டாள் என்பது போன்ற பகுப்புகள் ஒதுக்குதலுக்கும் விலக்கப்படுதலுக்கும் காரணமாகின்றன. இதனை பகுத்தறிவின் வன்முறை என்று பின்நவீனத்துவம் கூறுகிறது. அறிதல் முறையில் அறிஞர், முட்டாள், பைத்தியம் என யாவருடைய கருத்தையும் ஒதுக்க முடியாது என்று குறிப்பிடுகிறது. “மாறாக அறிவு முற்றிலும் ஒன்றுடன் ஒன்று பொருந்தாத எண்ணற்ற பல்வேறு மாற்றுச் சாத்தியக் கூறுகள் நிரம்பிய பெரும் சமுத்திரமாக இருக்கிறது. எந்தப் பிரச்சினையும் என்றென்றைக்குமாய்த் தீர்க்கப்படுவதில்லை. எனவே எந்தக் கருத்தையும் நாம் ஒவ்வாது எனத் தூக்கி எறிய முடியாது. துறை வல்லுநர்கள், மாபெரும் அறிஞர்கள் போன்றோரின் கருத்துக்கள் மட்டுமின்றி சாதாரண மக்கள், முட்டாள்கள், பொய்யர்கள், ஏமாற்றுப் பேர்வழிகள், பைத்தியங்களின் உளறல்கள் என எதையும் பயன்படாது உண்மைக்குப் பொருந்தாது எனத் தூக்கி எறியும் உரிமை நமக்கு இல்லை”[4] என்று குறிப்பிடுகிறார் அ.மார்க்ஸ். எனவே உயரிய அறிவையும், நுட்பமான திறனையும் கொண்டவர்களே அறிவுக்குச் சொந்தக்காரர்கள் என்னும் பகுத்தறிவு சார்ந்த வன்முறைக்கு ஒழுங்கவிழ்ப்பாளர்களான பின்நவீனத்துவர் முடிவு கட்டுகின்றனர்.

பகுத்தறிவின் வன்முறையைப் போலவே பண்பாட்டின் வன்முறையும் பிறரை ஒடுக்கும் வகையிலானது என்பதை அறிய முடிகிறது.

விளிம்பு நிலை பற்றிய அசூயை இருந்து வருகிறது. “மரபு வழி நமக்குக் கையளிக்கப்பட்டுள்ள இலக்கியத் தொகுதியில் விளிம்பு நிலை மக்கள் குறித்த மேட்டிமைச் சக்திகளின் பார்வையினூடான பதிவுகள் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன. மிகச் சமீப காலம் வரை விளிம்பு நிலைக் குரல்கள்

இங்கு பதிவு செய்யப்படவில்லை."[5] என்ற கருத்தின் அடிப்படையில் இரண்டாயிரமாண்டு கால இலக்கிய வரலாற்றில் மேட்டிமைப் பார்வையினூடாகவே பதிவுகள் காணப்படுகின்றன. திராவிட, மார்க்சி, தலித்திய, பெண்ணிய மற்றும் விளிம்பு நிலை கருத்தாக்கங்கள் மேலெழுந்து வந்த சூழலில்தான் விளிம்பு நிலையில் ஆட்படுத்தப்பட்டகள் முதன்மைப் பாத்திரங்களாக உருவாகும் நிலை ஏற்பட்டது. ஆனால் பார்ப்பனிய, வெள்ளாளர்களின் பிரதிகளில் அடித்தட்டு மக்கள் சித்திரிக்கப்படும் விதம் கீழ்மையாக இருக்கிறது. இதற்கு புதுமைப்பித்தனின் சிறுகதைகள் உதாரணம் கொள்ளலாம் "புதுமைப்பித்தனுக்கு ஊர் என்றால் அது பார்ப்பனர், வெள்ளாளர் மற்றும் அவர்களுக்குச் சேவகமும் திருட்டுத் தொழிலும் செய்கிற மறவர்களும் மற்றவர்களும் வசிக்கும் இடம்தான். சேரிப் பறையருக்கு இதில் இடமில்லை. பறையர்களும் மற்றவர்களும் மனித மேன்மையில் ஒரு படி குறைந்தவர்கள் என்கிற சாய்வுடனேயே புதுமைப்பித்தன் பிரதிகளில் காட்டப்படுகின்றனர். குடிகாரர்கள், அசுத்தமானவர்கள் இவற்றின் விளைவாக இழிநிலை எய்தியவர்கள், தங்களின் இழிவு பற்றிய பிரக்ஞையற்றவர்கள், உரிமை வேட்கையைச் சீர்திருத்த மனம் கொண்ட பார்ப்பன வேளாளர் ஊட்டினால் கூட அதனை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள், முரடர்கள், எடுபிடிகளாகவும், அடியாட்களாகவும், வைப்பாட்டிகளாகவும், விபச்சாரிகளாகவும் இருக்கத் தகுதியானவர்கள் என்பதாகவே பறையர்களும் மறவர்களும் புதுமைப்பித்தனின் பிரதிகளில் இடம்பெறுகின்றனர்"[6] என்று அ.மார்க்ஸ் குறிப்பிடுகிறார். இத்தகைய விளிம்பு நிலையினர் குறித்த பார்வை காலப் போக்கில் மாற்றம் பெற்றிருக்கிறது. அதாவது விளிம்பில் உள்ள மக்கள் மையத்திற்கு வந்துள்ளனர். அவர்கள் வாழ்வு மேம்பாட்டினை அடைந்திருக்கிறது.

அந்த வகையில் விளிம்பு நிலை மக்களை மையப் பாத்திரங்களாக்கிய கூர்ந்த நோக்கினை கி.ராஜநாராயணன் சிறுகதைகளில் காணமுடிகிறது.

### கோமதி செட்டியார் திருநங்கை

சமூகத்தில் அரவாணிகள் என்றும் மூன்றாம் பாலினத்தவர் என்றும் அழைக்கப்படுபவர்கள். சிலர் இவர்களை இழிவாக 'அசக்கு' என்றும் ஒம்போது என்றும் அலி என்றும் அடையாளம் சொல்வார்கள். அவர்கள் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட பாலினத்தவராக இருக்கின்றார்கள். இன்றைக்கும் கூட அந்நிலை மாறவில்லை. ஆயினும் சிலர் தம் நிலையை கல்வி, வேலை வாய்ப்புகளால் உயர்த்திக் கொண்டுள்ளனர் என்பதைக் காணமுடிகிறது.

கி.ரா.வின் கோமதி என்னும் சிறுகதையில் மூன்றாம் பாலினத்தவராக கோமதி குறிப்பிடப்படுகிறார். அவரை பெண்பாலாகக் குறிக்காமல் ஆண்பாலாகக் குறிக்கும் பொருட்டு கோமதி செட்டியார் என்றே குறிப்பிடுகிறார். ஒதுக்கப்பட்ட தன்னிலையாக இருக்கும் கோமதி அக்கதையின் நாயகத் தன்மையை அடைய கி.ரா. வின் முற்போக்குச் சிந்தனையே காரணமாக அமைந்திருக்கிறது. குழந்தையிலிருந்தே பாலின மாறுபாடு ஏற்படுவது பற்றிய பிரக்ஞை அற்று வளரும் நிலையினைப் பற்றி "இவனுக்குச் சிறு பிராயத்திலிருந்தே ஜடை போட்டு பூ வைத்துக் கொள்வதிலும், வளை அணிந்து கொள்வதிலும் கொள்ளை ஆசை. உருவம் ஆணாக இருந்தாலும் பெண்ணாகவே வளர்ந்து வந்தான். நீட்டி, நீட்டி தலை அசைத்துப் பேசுவது அவனுக்குக் குழந்தையாக இருக்கும் போதுதான் பொருத்தமாக இருந்தது. பெண் குழந்தைகளோடுதான் விருப்பமாக விளையாடப் போனான்" (கி.ரா. சிறுகதைகள், ப.123) என்ற கூற்றில் குழந்தையாக இருக்கும் கோமதி என்று பெயர் வைத்து விடுகிறார்கள். ஆனால் அவன் பெண்ணின் பண்புகளைக் கொண்டிருக்கிறான்.

பெண்களோடு பெண்களாகவே வளர்ந்து வந்தான். பெண்களும் இவனை வேறுபாடுடன் நடத்துவதில்லை. சமூகத்தில் ஒதுக்கப்படும் நிலையில் உள்ள ஒருவன் மீது சமூகம் கொண்டிருக்கும் ஆதர்சம் இவருடைய கதையில் வெளிப்படுகிறது. "பெண்கள் இவனை வித்தியாசமாக நினைப்பது இல்லை. நடத்துவதும் இல்லை. இவன் எங்கு சென்றாலும் இவனைப் பிரியமாக வைத்துக் கொள்வார்கள்" (கி.ரா.சிறுகதைகள், ப.125) இவனுக்குச் சமையலில் மிகுந்த திறமை இருந்தது என்பதால் ஒரு கல்யாணத்தில் சென்ற இடத்தில் ரகுபதி நாயக்கரின் வீட்டில் சமையல் வேலைக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

அவனுடைய நடையுடை பாவனைகள் மற்றவர்களிடமிருந்து வித்தியாக இருப்பதை கேலி செய்யாமல் ரஸித்து சிரித்தார்கள் என்று கூறப்படுவதைக் காணமுடிகிறது. "பக்கத்து வீட்டுப் பெண்களெல்லாம் இவனைப் பார்க்க வந்து விட்டார்கள். இவனுடைய நடையையும் நீட்டிப் பேசுகிற பேச்சையும் அசைவுகளையும் கண்ட பெண்கள் சிரித்து ரஸித்தார்கள்" (கி. ரா.சிறுகதைகள், ப.126) இவ்வாறு கேலி செய்து

ஒதுக்கம் செய்ய வேண்டிய பாத்திரமான கோமதி பாத்திரம் பிற பாத்திரங்களை விடவும் தகுதி வாய்ந்த முதன்மையான பாத்திரமாக வார்க்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

வேறுபட்ட பாலாக இருந்தாலும் கோமதிக்கும் காதல் உணர்வுகள் வருகிறது என கி.ரா. சுட்டுகிறார். ரகுபதி நாயக்கரின் மகன் இவளுடைய சமையல் குறித்துப் பாராட்டுகிறார். கோமதியைப் பார்க்கவும் விரும்புகிறார். ஆனால் கோமதியை நேருக்கு நேராகப் பார்த்து அதிர்ச்சி அடைகிறார். "ரகு திரும்பிப் பார்த்தான், முகத்தச் சுழித்தான். இந்த ரஸவிஹாரத்தை அவன் ஆண்மை நிறைந்த உள்ளத்தால் தாங்க முடியவில்லை" (கி.ரா.சிறுகதைகள், ப.129) என்று குறிப்பிடுவதில் ரகு கோமதியைப் பார்த்து சிறிது அருவருப்பை வெளிப்படுத்துவது கூறப்படுகிறது. சீ வெளியே போ என்றும் உதாசீனம் செய்கிறான். இதனால் மனம் உடைந்து போகிறான் கோமதி. அவன் அவ்வாறு நடந்து கொண்டதை ஆட்சேபித்த அவனுடைய தங்கை இரக்கம் கொள்ள வேண்டிய ஒருவனிடம் உதாசீனத்துடன் நடந்து கொண்டது தவறு என்று சுட்டிக் காட்டுகிறாள். அவன் கோமதி மேல் இரக்கம் கொள்கிறான். கோமதியை நல்லமுறையில் நடத்த தீர்மானிக்கிறான். அவனுக்கு கோமதி பால் கொண்டு போய் கொடுக்கிறான். ரகுவின் நாடியைப் பிடித்து கொஞ்சுவது போல் பாலைக் குடிக்கச் சொல்கிறான். இதனால் எரிச்சல் அடைந்த ரகு அவனை ஓங்கி அறைந்து விடுகிறான். ரகுவின் மேல் அவனுக்கு சிறிது காதல் இருந்திருக்கும் அதனால்தான் உரிமையோடு தொட அவனோ வெறுப்படைந்தான். ரகு ஊருக்குச் சென்று விடுகிறான். வழக்கம் போல கோமதி தன் வேலைகளைச் செய்தாலும் ஈடுபாட்டினை இழந்தவன் போல இருக்கிறான். பின்பு அந்த வீட்டை விட்டு வெளியேறிச் சென்று விடுகிறான். இவ்வாறு ஒரு பாத்திரத்தை முதன்மைப் பாத்திரமாக படைத்து அக்கதையின் நடுநாயகமாக நிறுத்துகிறார் கி.ரா.

### அவத் தொழிலாளர்

இச்சிறுகதை அரை ஊமையும் வாய் கொன்னிப் பேசும் மூட்டை தூக்கும் தொழிலாளி. கருகருவென்று இருக்கும் அவனைக் கண்டாலே யாராயிருந்தாலும் ஒரு அறை விடணும் போல இருக்கும் என்று கூறுகிறார். அவனைச் சீண்டுவது பிறருக்கு மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் அவன் அவர்கள் மேல் எரிச்சலும் கோபமும் வந்து அடிக்கப் பாய்வான். கல்லைத் தூக்கி எறியப் போவான். ஆனால் எறிய மாட்டான். "எதிர்பாரா சமயத்தில் ஒரு கண்டக்டரோ, டிரைவரோ அவன் முதுகில் ஒரு குடுப்புக் குடுப்பான். வீல் என்று அவன் அடித்தவன் மேல் பாயும் போது மற்றவன் அதை விட வேகமாக ஊமையின் முதுகில் ஒன்று கொடுத்து அவனை திசை திருப்புவான். அடிகளும் வேதனையும் தாங்க முடியாமல் போகும் போது அந்த அனாதை ஓடிச் சென்று ஒரு பெரிய்ய கல்லை இரண்டு கைகளாலும் தூக்கிக் கொண்டு வருவான். ஆனால் அவனிடமுள்ள நல்லகுணம் யார் மீதும் அதைப் போடமாட்டான்" (கி. ரா.சிறுகதைகள், ப.139) அவனை மேலும் பலபேர் அடித்துத் துன்புறுத்துவார்கள் என்று கூறுகிறார். மாற்றுத் திறனாளிகள் மற்றும் வயதானவர்களை உதாசீனப்படுத்தும் நிலை படிப்படியாக மறைந்து இன்று அவர்கள் அனைவரும் முதன்மை இடம் கொடுக்கப்படுபவர்களாக மாறிய நிலைமையினை ஒரு கிழவி இடைச் செவல் செல்ல பஸ் பயணத்திற்கான டிக்கெட் எடுப்பதற்காக நிற்பதும் திருநெல்வேலி பேருந்துகள் இடையில் நில்லா பேருந்து ஆகையால் கிழவியைக் கண்டு கொள்ளாமல் இருப்பதையும் பற்றிக் கூறி அத்தகைய நடத்துனர்கள், ஓட்டுநர்கள், பேருந்து உரிமையாளர்கள் இன்று இல்லை என்பதை உணர்த்தும் முகமாக "இதோ இருக்கும் இவர்களெல்லாம் தேவர்களா கண்டக்டர்கள்தானா? வயசான ஒரு கிழவியைக் கைலாகு கொடுத்து காரில் ஏற்றி விடுகிறானே. இப்போதெல்லாம் கிழவர்களுக்கும் குழந்தைகளுக்கும்தான் முதல் மரியாதை" (கி.ரா.சிறுகதைகள், ப.143) என்று பின்நவீனத்துவ உலகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் முதல் மரியாதைத் தரப்படும் நிலை பற்றிக் கூறப்படுகிறது,

### கறிவேப்பிலைகள்

முதியவர்களைத்தான் இந்தப் பெயர் இட்டு ஆசிரியர் குறிப்பிடுகிறார். கறிவேப்பிலைகள் தாளித்தவுடன் அதன் பணி முடிந்தது. அதை கீழே பொறுக்கிப் போட்டு விட்டுத்தான் சாப்பிடுவார்கள். அப்படித்தான் பப்புத் தம்பதியினர் இந்தக் கதையில் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களுக்கு சிறு இடம் குடியிருக்க இருந்தால் போதும். ஏதேனும் ஒரு வேலை பார்த்துக் கொண்டு காலத்தை ஓட்டி விடலாம். நல்ல சாப்பாடு கிடையாது, பார்த்துக் கொள்ள ஆட்கள் கிடையாது. சொந்த பந்தம் யாரும் இல்லை. இளவயதில் ஊருக்கு உழைத்தவராக பப்புத் தாத்தா குறிப்பிடப்படுகிறார். வயதாக வயதாக அவருடைய தேவை யாருக்கும் அவசியம் இன்றி போய் விட்டது. பப்புக்

கிழவனும் கிழவியும் மட்டும் தங்களுக்குள் ஆதரவாக இருந்து கொள்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை லட்சியம் என்று எதுவுமில்லை. நல்ல சாப்பாடுதான் என்று கூறுகிறார் "அந்த வங்கிழடு தம்பதியர்க்கு இப்பொழுதெல்லாம் ஒரே ஒரு ஆசைதான். இழவு வீடுகளில் போய் உட்கார்ந்து இலை போட்டு அதில் நிறைய்ய நெல்லுச் சோறு போட்டு காரமும் புளிப்புமாயுள்ள பூசணிக்காய்க் குழம்பை தாராளமாய் விட்டு மூக்கில் நீர் சொட்டச் சொட்ட பெரிய பெரிய கவளமாகச் செய்து ஆசைதீரச் சாப்பிட வேண்டும் என்பதுதான்" (கி.ரா.சிறுகதைகள். ப.202) என்று கூறப்படுகிறது. அவர்களின் வாழ்வு ஒதுக்கப்பட்டதாக இக்கதையில் கூறப்படுகிறது. அதனால்தான் அவர்கள் கறிவேப்பிலைக்கு ஒப்பாக வாழ்கின்றனர் என்றும் கொள்ளமுடிகிறது.

### ஜீவன்

ஊர்ப் பெண்கள் பகடி செய்து சிரித்து விளையாடும் ஆகருதியும் மனவளமும் கொண்டவனாக அங்குப்பிள்ளை இந்தக் கதையில் கூறப்படுகிறது. பெண்கள் தங்களுக்குள் சீண்டுவதற்கு அங்குபிள்ளையைத்தான் பயன்படுத்துவார்கள். "கிராமத்திலுள்ள குமரிப் பெண்டுகளுக்கு அங்குப்பிள்ளையைக் கண்டு விட்டாலே ஒரு வித குஷி வந்து விடும். ஜாடை செய்து ஒவ்வொரு வார்த்தைக்குமே ஜாடை செய்து ஒனக்கு (அங்குப்பிள்ளையைக் காட்டி) கலியாணம் (தாலி) கட்டுவதைப் போல கழுத்துப் பக்கம் கைகளைக் கொண்டு போய்) எப்போ (விரல்களை முஷ்டி மடக்கிக் குலுக்க வேண்டும்" (கி. ரா.சிறுகதைகள், ப.239) என்று அங்குப் பிள்ளையை பெரிதும் பகடியும் எள்ளலும் செய்வார்கள். அங்குப்பிள்ளை ஒரு அரைக்கால் பேச்சு ஊமை அவன் முன்னால் மூக்கில் கை வைத்து விட்டால் பழியாகக் கோபம் வரும். அவனது உடை உடுத்தும் விதமே எத்தகைய நிலையில் அவன் இருக்கிறான் என்பதை சுட்டுவதாக அமைந்து விடுகிறது "அவன் எப்பவும் துவைத்து நிழலில் உலர்த்திய ஒரு புழுக்க வாடையுள்ள பளுப்பு நிற வேட்டியையே உடுத்திக் கொண்டிருப்பான். துண்டுக்குப் பதிலாக மேலே போர்த்திக் கொண்டிருப்பதும் ஒரு வேட்டிதான். அதை ரெண்டாக மடித்துக் குறுக்கு வசத்தில் மேலே போட்டு இடது கக்ககத்துக்குள் அதன் மல்க்கோடிகளை இடுக்கிக் கொண்டிருப்பான்" (கி.ரா.சிறுகதைகள், ப.240) என்று அவனது உடை உடுத்தும் தன்மையில் அவனது இயல்பற்ற மனநிலை கூறப்படுகிறது. மேலும் அவனது முகலட்சணமும் பொருந்தா நிலையில் இருக்கும். "அவனுக்கு நான்கு முன்னத்தம் பற்கள் மிகவும் நீளம் பெரியவர்களின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் போது பற்கள் தெரியாமல் மரியாதைக்காக மூடிக் கொள்ள வேண்டும் என்று நினைத்து உதடுகளால் மறைத்துக் கொண்டு ஊ என்று இருப்பதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும்" (கி.ரா.சிறுகதைகள், ப.240)

இத்தகைய ஒருவனை தன் கதையின் மையப் புள்ளியில் வைத்து நகர்த்துகிறார் ஆசிரியர். அவனைச் சீண்டும் போது அவனது செயல்களை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. "நல்ல இளவட்டமான அங்குவை குமரிப் பெண்டுகள் விஷமில்லாத தண்ணிப் பாம்பு போல் நினைத்து நடத்தி வந்தார்கள்." (கி.ரா.சிறுகதைகள், ப.241) என்று அங்குப் பிள்ளை பெண்களால் பரிகசிக்கப்படும் ஆகுருதியாக இருப்பதும் அவர்களால் ஏளனத்திற்கு உள்ளாகும் தன்னிலையாக இருப்பதும் சுட்டப்படுகிறது.

இத்தகைய பாத்திரங்கள் ஏளனத்திற்கு மட்டும் ஆட்படுவதில்லை. சுயவதைககும் உள்ளாகிறார்கள். அங்குப்பிள்ளைக்கு பெண் தர மறுக்கும் சொந்தக்காரர்கள் அவனை உதாசீனம் செய்யும் போது மனமொடிந்து போகிறவனாக மாறி விடுகிறான். அவனிடம் கல்யாணம் பற்றிக் கேட்கும் போது வெட்கம் கொள்கிறான். தனக்கும் தன் தந்தை திருமணம் செய்து வைப்பார் என்று நம்புகிறான். அவனுடைய தம்பி ஆதிலிங்கத்திற்குக் கல்யாணம் நடக்கும் போது தனக்கும் கல்யாணம் நடக்கும் என்று அவனது தந்தை விளையாட்டாகச் சொன்னதை நம்பிக் கொள்கிறான். ஊமைகள் யாருக்கும் கல்யாணம் பெரும்பாலும் ஆவதில்லை என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். அங்குவுக்கும் அதுதான் நிலைமை என்பது அவனுக்குத் தெரியவில்லை. அவனுக்கு யார் பெண் தருவார்கள். "ஆதிலிங்கத்திற்குக் கலியாணம் என்ற போது தமக்கும் சேர்த்தே கலியாணம் என்று நம்பி இருந்தான் அங்கு. கல்யாணம் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த போது எங்கள் அப்பாவிடம் வந்து அங்கு தனக்குக் கலியாணம் என்ற பெருமையோடு சொன்னான். நாங்கள் எல்லோரும் அது நிஜம் என்றே நினைத்தோம். (ஆனால் பொதுவாக ஊமைகள் யாருக்கும் அநேகமாகக் கல்யாணம் ஆவது இல்லை)" (கி.ரா. சிறுகதைகள், ப.246) என்று அங்கு தனக்கும் கல்யாணம் என்று நம்பிக் கொண்டிருந்தவனுக்கு அவ்வாறு இல்லை என்று தெரிந்த போது ஆற்றாமையும் சுயபச்சாதாபமும் கூடி விடுகிறது. அழுது கொண்டே இருந்தவன் வீட்டிற்குள் சென்று விறகுக் கட்டையை

எடுத்து சமையலறைப் பாத்திரங்களை எல்லாம் நொறுக்க ஆரம்பித்தான். அவனுடைய தந்தை வந்த போது விறகுக் கட்டையைக் காண்பித்து அடித்து விடுவதாக ஜாடை செய்கிறான். பின்பு இளந்தாரிகள் கூடி அவனைப் பிடித்து ஒரு அறையில் போட்டு அடைத்து விடுகிறார்கள். அப்பா அவனை எங்கே என்று கேட்ட போது அறைக்குள் மூடி வைத்ததாகக் கூறவும் அறையைத் திறந்து பார்க்க அங்குப்பிள்ளை அலங்கோலமாகக் கிடக்கிறான். "அவன் இறந்து போய் விட்டானா? மயங்கிக் கிடக்கிறானா என்று தெரியவில்லை. வேட்டி பூராவும் முன் பக்கத்தில் ரத்தத்தால் நனைந்து இருந்தது. உடம்பில் எங்கும் காயம் தட்டுப்படவில்லை எங்களுக்கு. கொஞ்சம் விலகியிருந்த நனைந்த வேட்டியை நீக்கிப் பார்த்த போதுதான் தெரிந்தது. ஓரே ஒரு கழிப்பட்ட இரும்புத் தகட்டினால் அங்கு தன்னுடைய உயிர்த் தலத்தை அறுத்துக் கொண்டான்" (கி. ரா.சிறுகதைகள், ப.249) என்று அங்கு தன் முடிவைத் தானே எழுதிக் கொள்கிறான்.

இவ்வாறு விளிம்பு நிலைப் பாத்திரங்களை தன் சிறுகதைகளில் மையமாக்கி அவர்களை உரிய மதிப்போடு நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் எழுதினார்.

## முடிவுரை

விளிம்பு நிலை ஆய்வுகளில் மக்களின் வாழ்வியல் நிலை என்பது பல அடுக்குகளில் பகுக்கப்பட்டிருப்பதும் குறிப்பிட்ட சாதி அல்லது வர்க்கத்தினர் மட்டும் மேல் நோக்கிய வளர்ச்சியில் இருப்பதும் பெருவாரியான அடித்தட்டு மக்கள் போதிய கவனிப்பற்று வாழ்தலை ஒரு கடமையாகச் செய்யும் நிலையும் இருந்து வந்தமை சுட்டிக்காட்டப்பட்டது. தமிழ் இலக்கியத்தில் விளிம்பு நிலைப்பட்ட மக்கள் பல வகையினராக இருக்கின்றனர். அவர்கள் பற்றிய ஒவ்வாமையை தமிழ் இலக்கிய வரலாற்றில் பார்ப்பனிய, வேளாள எழுத்தாளர்கள் வெளிப்படுத்தினர். திராவிட, மார்க்சிய, பெண்ணிய, தலித்திய நோக்கிலான எழுத்துக்கள் ஒதுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட, பாட்டாளி வர்க்கத்தினரை தம் கதைகளில் முதன்மைப் பாத்திரங்களாக்கினர். அவர்களது வாழ்வியலும் கண்டுணரப்பட வேண்டியவையே என்று உணர்த்தினர். அந்த வகையில் விளிம்பு நிலைப் பாத்திரங்களை மையப் பாத்திரங்களாக்கியவர்கள் என்று இவர்களைக் கருதலாம். அந்த வரிசையில் கரிசல் காட்டு மக்களில் பண்ணையார், இடைநிலைச் சாதியினரின் வாழ்வியலை மட்டுமின்றி ஒதுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட தன்னிலைகளாக வாழும் மக்களையும் தம் சிறுகதைகளில் முதன்மைப்படுத்தியவராக கி.ரா. விளங்குகிறார். அவருடைய சிறுகதைகளில் திருநங்கைகள், மூப்பினை உடைய வயதானவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், அடித்தட்டு மக்கள் எனப் பலரும் முதன்மைப் பாத்திரங்களாக்கப்பட்டு அவர்களது வாழ்வியல், அவர்களது உணர்வுகள் மையப்படுத்தப்பட்டுள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. பொ.வேல்சாமி, அ.மார்க்ஸ்; விளிம்பு நிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும், ப.30
2. ராஜ்கௌதமன், தலித்திய விமர்சனக் கட்டுரைகள், ப.20
3. ராஜ்கௌதமன், ராஜ்கௌதமன் கட்டுரைகள், ப.131
4. அ.மார்க்ஸ், பின்நவீன நிலை, ப.75
5. மேலது, ப.31
6. அ.மார்க்ஸ், உடைபடும் மௌனங்களும் சிதறுண்ட புனிதங்களும், ப.412

## துணை நூற்பட்டியல்


1. கி.ராஜநாராயணன், கி.ரா.சிறுகதைகள், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர், 2022
2. பொ.வேல்சாமி, அ.மார்க்ஸ், விளிம்பு நிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும், புலம் வெளியீடு, சென்னை, 2010
3. ராஜ்கௌதமன், தலித்திய விமர்சனக் கட்டுரைகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2011
4. ராஜ்கௌதமன், ராஜ்கௌதமன் கட்டுரைகள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2021
5. அ.மார்க்ஸ், பின்நவீன நிலை, புலம் வெளியீடு, சென்னை, 2010
6. அ.மார்க்ஸ், உடைபடும் மௌனங்களும் சிதறுண்ட புனிதங்களும், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2019


●


**கட்டுரையாளர்கள்:**

**ரெ.காயத்ரி**

முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம், ஸ்ரீ எஸ் இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்.

**முனைவர் இரா.பூங்கோதை**

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், தமிழ் உயராய்வு மையம், ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்.

நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடு

# தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்

## ஆறு தொகுதிகள்

**தோழர் தமிழ்ஒளி (1925 – 1965) நூற்றாண்டுச் சிறப்பு வெளியீடு**




| | | |
|---|---|---|
| தொகுதி-1 | தோழர் தமிழ்ஒளி கவிதைகள் | விலை: ரூ.390/- |
| தொகுதி-2 | தோழர் தமிழ்ஒளி காவியங்கள் (பகுதி ஒன்று): | விலை: ரூ.315/- |
| தொகுதி-3 | தோழர் தமிழ்ஒளி காவியங்கள் (பகுதி இரண்டு) | விலை: ரூ.390/- |
| தொகுதி-4 | தோழர் தமிழ்ஒளி சிறார் பாடல்கள் - கதைகள் | விலை: ரூ.315/- |
| தொகுதி-5 | தோழர் தமிழ்ஒளி சிறுகதைகள் - ஓரங்க நாடகங்கள் | விலை: ரூ.360/- |
| தொகுதி-6 | தோழர் தமிழ்ஒளி ஆய்வுகள் - கட்டுரைகள் - தன் வரலாறு | விலை: ரூ.430/- |

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 050.

☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும்

மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.




தன்வியின் பிறந்தநாள், சிறார் கதைகள், யூமா வாசுகி
வெளியீடு: புக்ஸ் ஃபார் சில்ரன் | விலை ரூபாய் 130

# சமூக யதார்த்தக் கதைகள்

இளையவன் சிவா

**சா**கித்ய அகாதமியின் பால புரஸ்கார் விருது பெற்ற நூல் தன்வியின் பிறந்தநாள் சிறார்களுக்கு எழுதப்பட்டுள்ள அறிவுரைக் கதைகளாகவோ அறவுரை கூறும் கதைகளாகவோ இல்லாமல் இயல்பான நடை ஓட்டத்தில் சமூகத்தின் எதார்த்தத்தை எடுத்துரைக்கும் தனித்துவ நூலாக நிற்கிறது.

சிறார் உலகின் நுட்பங்களை புரிந்து கொண்டவருக்கு சிறார்களுக்கு எப்படியான கதைகளை சொல்ல வேண்டும் என்ற அடிப்படை தெரிந்திருக்கிறது. அதுதான் இந்த நூலில் உள்ள 10 கதைகளுக்கும் சிறந்த கதை கருக்களைக் கொடுத்திருக்கிறது.

இன்றைய நடைமுறைகளையும் இயல்பான போக்கையும் எடுத்துக் கூறும் அதேசமயம் சிறார்களுக்குள் ஏற்படும் மனஸ்தாபங்களும் கோபமும் பழி வாங்குவதைத் தூண்டி விடாமல் அன்றைய நிகழ்வை அன்றே மறந்துவிடும் குழந்தைத் தன்மையை எடுத்துக்காட்டும் வகையிலும் அமைந்திருக்கிறது.

அறிவுரைகளைக் கூறுவதன் மூலமும் சதா இந்த வழியைப் பின்பற்று என்று தொடர்ந்து அறிவுறுத்துவதன் மூலமும் ஒவ்வொரு குழந்தைகளையும் நாம் கட்டுப்படுத்தி விட முடியாது. அதேசமயம் அறச் சிந்தனைகளையும் ஒழுக்கப் பண்புகளையும் அவர்களுக்கு எடுத்துக் கூறுவதும் சமூகத்தில் எழுத்தாளர்களின் பணியாக அமைந்திருக்கிறது.

நூலில் உள்ள 10 கதைகளும் தனித்தனியான சொல்லாடல்களை கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கதையும் தனிச்சிறப்பு வாய்ந்த கவித்துவத்தில் நம்மை சிந்திக்க வைக்கிறது. எளிமையும் விளக்கமும் இணைந்த மொழியையும் சிறுவர்களுக்கு புரிந்த மொழியையும் கொண்டு எழுதப்பட்டிருக்கும் இந்த கதைகளில் மன்னித்தல் மறத்தல் பேரன்பைக் காட்டுதல் எல்லா உயிர்களிடத்தும் கருணையை நிரப்புதல் இயற்கையை நேசித்தல் என்ற விழுமியங்கள் இடையூடாக நுழைக்கப்பட்டுள்ளன.

முதல் கதையான தன்வியின் பிறந்தநாளில் அவளது பெற்றோர் தன்வியின் பிறந்தநாளுக்கு சிறப்பு செய்ய விரும்புகின்றனர். அதேசமயம் தன்விக்கு யாரெல்லாம் பிறந்தநாள் வாழ்த்து கூறுகின்றனர் என்பதை அவளது கனவுலகத்திற்குள் நம்மையும் அழைத்துச் சென்று காட்டுக்குள் ஒரு திருவிழாவை கொண்டாடி மகிழ்கிறது. இயற்கை வானம் விலங்குகள் பறவைகள் சூரியன் நிலா காற்று என தன்விக்கு தங்கள் அன்பையும் முத்தத்தையும் வழங்கத் துடிக்கும் ஒவ்வொன்றும் ஒட்டுமொத்தமாக ரோஜாச் செடியாக மாறி அவளது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடி மகிழ்கின்றன. இந்தக் கதையின் வாயிலாக எழுத்தாளர் இயற்கையின் ஒவ்வொரு உயிரையும் நேசிப்பதன் அவசியத்தையும் அப்படி காணும் உயிர்களிடத்தில் கருணையையும் அன்பையும் விதைக்கும் மனதிற்கு இந்த உலகமே அன்பால் கட்டுண்டு விடும் என்பதையும் நமக்கு உணர்த்துகிறார்.

'தலைவர் ஜெய் செய்தது சரியா' கதை ஒரு சங்கிலித் தொடர் போன்ற நீட்சியுடன் எழுதப்பட்டிருக்கிறது. அம்மாவிற்கு தலை வலிக்கிறது மகன் ஜெயிடம் டீ வாங்கி வர கடைக்கு அனுப்புகிறார் டீ கடைக்கு செல்லும் ஜெய் அங்கிருந்து மளிகை கடை செல்கிறார் மளிகை கடைக்கு செல்லும் ஜெய் அங்கிருந்து பேக்கரிக்கு பயணமாகிறார். பேக்கரியில் இருந்து மருந்து கடை மருந்து கடையிலிருந்து உணவகம் என இந்த கதை ஒன்றிலிருந்து மற்றொன்று என நீட்சியாக இணைந்து மீண்டும் எதிர் சுழற்சியில் வீடு அடைகிறார் ஜெய். இந்தக் கதை எழுதப்பட்டிருக்கும் விதமும் இதை நமக்கு வர்ணிக்கும் செம்பூனை வழியாக கூறப்பட்டிருக்கும் செய்திகளும் அன்பை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு உலகத்தை வழிநடத்த அழைப்பு விடுக்கிறது.

இறகுத்தேள் என்ற கதையின் வழியே தனது தங்கைக்கு ஏற்படும் காய்ச்சலுக்கு மருந்து வாங்க கடைக்குச் செல்லும் ஜெய் கடுமையான மழையில் தனது ஆசிரியரின் வீட்டை கடந்து செல்லும்போது ஒரு புதிய உயிரினத்தை பார்க்கிறான். அந்த ஆசிரியரைக் கண்டாலே பயந்து நடுங்கும் மாணவர்களுக்கு மத்தியில் துணிச்சலாக அவரது வீட்டைத் தட்டி அவரிடம் அந்த உயிரினத்தைப் பற்றிக் கூறிவிட்டு தனது வீட்டிற்குச் செல்கிறான் ஜெய். தனது தங்கைக்கு உடல் நலம் சரியில்லாத போதும் தனது ஆசிரியருக்கு ஏதேனும் ஒன்று நேர்ந்து விடக்கூடாது என்ற பொது நலத்தை அடாது மழையிலும் பின்பற்றிய ஜெய்க்கு உலக அளவில் பாராட்டி கிடைக்கிறது. கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்ற கீதையின் தத்துவத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட இந்த கதை அவரவர் பணியை சிறப்புற செய்வதை மாணவர்களுக்கு அறிவுறுத்துகிறது. அதேபோல எத்தகு சூழலிலும் அச்சமும் பயமும் கொண்டு மனதை அடக்கி வைக்காமல் தைரியத்தையும் துணிச்சலையும் கைக்கொண்டு பிறரையும் தன் போல எண்ணும் நேசத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற பண்பையும் கூறி விடுகிறது இந்தக் கதை.

நூலின் சிறந்த கதையாக எழுதப்பட்டிருக்கிறது வலியினால் அல்ல என்ற கதை. இந்த கதை தன்விக்கு அவளது முன்னாள் தோழி ஏற்படுத்தும் அடுக்கடுக்கான துன்பங்களை எத்தகு சூழலிலும் அவளை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் தன்னை நிறுத்திக் கொள்ளாமல் பொறுத்துக் கொள்கிறாள். என்றாவது ஒரு நாள் தனது தோழி மனம் மாறுவாள் என்ற அடிப்படையில் இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல் என்ற வள்ளுவரின் குறளுக்கு ஏற்ப அவளுக்கு ஒருமுறை ஏற்பட்ட காயத்திற்கு சிறந்த மருத்துவத்தை ஏற்பாடு செய்கிறாள். தன்வி தன் தோழி கோபிகாவின் மனநிலையைப் புரிந்து கொண்டு நிதானமாக எதிர்வினையாற்றும் தன்மை நம்மை எல்லாம் வியப்பில் ஆழ்த்துகிறாள். இயற்கையாகவும் நொடியில் ஏற்படும் மனமாற்றமோ பிறர் மீது ஏற்படும் பொறாமை குணத்தை அதிகப்படுத்தி விடாமல் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை நல்வழிக்கு கொண்டு வருதல் அன்பு உள்ளம் கொண்ட மனிதர்களுக்கு சாத்தியமாகும் என்பதற்கு இந்த கதையின் வழியே தன்வி உதாரணமாகிறாள்.

தன்வி என்று சிறுமியின் வழியாக இதில் உள்ள 10 கதைகளையும் சிறந்த சிறார் நூலாக எழுதி இருக்கும் எழுத்தாளரின் மனதிற்குள் எழுந்து நிற்பது உலகத்தின் மீதான பேரன்பு என்பதை நூல் விவரித்து விடுகிறது.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



கட்டுரை

# பெருங்கதை கட்டமைக்கும் *திருமணச் சடங்குகள்*

**"வரைவு எனப்படுவது உரவோன் கிழத்தியைக்**
**குரவர் முதலோர் கொடுப்பவும் கொடாமையும்**
**கரணமோடு புணர கடி அயர்ந்து கொள்லே"**
**- நம்பியகப்பொருள் -171**

வரைவு அதாவது திருமணம் என்பது தலைவன் தலைவியை அவனுடைய பெற்றோர் முதலியோர் கொடுக்கவும் அல்லது கொடாத போதும் கரணம் எனப்படும் திருமணச்சடங்குகளைச் செய்து திருமணம் செய்து கொள்ளுதலே என நம்பியகப்பொருளும்,

**"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"**

எனத் தொல்காப்பியமும் இலக்கணம் கூறுகின்றன. தமிழ் இலக்கண நூல்கள் திருமணத்தை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என எட்டு வகையாகக் கூறுகின்றன.

திருமணமானது, உடன் போய் வரைதல், தன் மனை வரைதல், மீண்டு வரைதல் (தலைவியின்



**ச.முத்துச்செல்வி**

மனையில்) என வரைதல் எங்கெங்கு நிகழலாம் என்றும் உரைக்கின்றன இலக்கண நூல்கள். எனினும், என்னென்ன திருமணச் சடங்குகள், எத்தனை நாட்கள் நிகழ்த்தப்பட்டன என்ற இலக்கணங்கள் தொல்காப்பியத்திலோ, நம்பியகப் பொருளிலோ குறிப்பிடப்படவில்லை. தொல்காப்பியர்,

**"மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்**

**கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே"**

**– தொல்காப்பியம் - பொருள் -142**

என்கிறார். இதற்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் உலகறிய தலைவனும் தலைவியும் கொள்ளும் திருமண நிகழ்வுச் சடங்கு மேன்மக்கள் என்று கூறப்பட்ட அந்தணர், அரசர், வணிகர் ஆகியோருக்கு இன்றியமையாதது. வேளாண் குலத்தினரும் பின்பற்றுதல் விலக்கு ஆகாது என விளக்கம் அளிக்கின்றனர். இந்நூற்பாவினால் மட்டுமின்றி கலித்தொகை (69) அகநானூறு(86,136,221,280) குறுந்தொகை(146) ஐங்குறுநூறு(147,399) புறநானூறு(122,372) சிலம்பு (மங்கலவாழ்த்துப்பாடல் 52-53) போன்றவற்றிலிருந்தும் திருமணச் சடங்குகள் நடைபெற்றன என்பதை அறியலாம். எனினும், இப்பாடல்களில் என்னென்ன திருமணச் சடங்குகள் நடைபெற்றன எனத் தெளிவாகக் கூறப்படவில்லை. சிலம்பிலும் இளங்கோவடிகள் திருமணச் சடங்கு முறையைத் தெளிவாக எடுத்தியம்பவில்லை. நன்மணம் புணர்தல் என்ற காப்பிய இலக்கணத்தை வலியுறுத்தவே மற்ற காப்பியங்களில் மணம் பாடப்பட்டுள்ளது. பெருங்கதையில் மட்டுமே காப்பிய இலக்கணத்தை வலியுறுத்த மட்டுமின்றி திருமணச் சடங்குகள் தெள்ளத்தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பெருங்கதையின் கதைத் தலைவனான உதயணன் வாசவத்தை, பதுமாவதி, மானனீகை, விரிசிகை என்ற நான்கு பெண்களை மணந்து கொள்கிறான். உதயணனின் மகன் நரவாணதத்தன் மதனமஞ்சிகை, வேகவதி என்ற இருபெண்களை மணந்து கொள்கிறான். உதயணன் வாசவதத்தை மணந்ததை கடிக்கம்பலை, கட்டிலேற்றியது, ஆறாம் திங்கள் உடல் மயிர் களைந்தது, மண்ணுநீர் ஆட்டியது, தெய்வச்சிறப்பு, நகர்வலம் கண்டது என ஆறு பகுதிகளாக இலாவண காண்டத்திலும், மகத காண்டத்தில் பதுமாவதியை மணந்ததை பதுமாவதி வதுவை என ஒருபகுதியாகவும், வத்வ காண்டத்தில் மானனீகையை மணந்ததை மணம் படு காதை என்ற பகுதியிலும், விரிசிகையை மணந்ததை விரிசிகை வதுவை என ஒரு பகுதியிலும் பாடியுள்ளார். நரவாண காண்டத்தில் நரவாணதத்தன் மதனமஞ்சிகையை மணந்ததை நரவாணதத்தன் மணம் என்ற பகுதியிலும் பாடியுள்ளார். வேகவதியை மணந்து கொண்டதாகக் கூறப்படுகின்ற பாடல்கள் கிடைத்தில.

உதயணன் வாசவதத்தையை மணந்ததைப் பாடுமிடத்திலே திருமணச் சடங்குகள் விரிவாகப் பாடப்பட்டுள்ளது. வாசவதத்தையின் திருமணம் சயந்தி நகரில் நடைபெற்றது.

**"வனப்பு வீற்றிருந்த வாசவதத்தை**

**வதுவை செல்வம் விதியிற் கூறுவென்"**

**–பெருங்கதை – 2.2(8-9)**

வாசவதத்தை உதயணனைத் திருமணம் செய்த அழகினை விதிப்படி கூறுகிறேன் என்கிறார் கொங்குவேள்.

**மண நாளை முரசறைந்து அறிவித்தல்**

**வாசவ தத்தையொடு வதுவை கூடிக்**

**கோல நீண்மதிற் கொடிக்கோ சம்பி**

**மாலை மன்னவன் மணமக னாகும்**

**காலை யிதுவெனக் கதிர்மணிக் கடிப்பிற்**

**கண்ணதிர்ந் தியம்ப வின்மொழி பயிற்றிக்**

**கல்லென வறையு மொல்லென் கம்பலை**

**அறைந்தறி வுறீஇய பின்றை நிறைந்த**

**–பெருங்கதை – 2.2(49-55)**

திருமணத்தின் முதல் நிகழ்வாக அரும்பரி சாரத்து பெருங்கணி வகுத்த நன்னாளை முதுகுடிப் பிறந்த வள்ளுவன் யானை மீதிருந்து முரசறைந்து தெரிவித்தான். அதனால் நகரில் கம்பலை நிறைந்தது. அரசனின் மணம் எனவே நகர் அலங்கரிக்கப்பட்டது.

## மங்கல நீர் கொண்டுவருதல்

கடிக்கம்பலை என்ற பகுதியில் மணமக்களை மங்கல நீராட்ட மங்கல நீர் கொண்டு வரும் சடங்கினை விரிவாக விளக்குகிறார் கொங்குவேள்.

**பொன்னணி கொண்ட பூந்தண் சிகழிகைக்**

**கன்னி மகளிர் கண்ணணங் குறூஉம்**

**ஒவ்வா வணியின ரொப்பக் கூடி**

மண்ணகக் கிழவற்கு மண்ணுநீர் சுமக்கும்
புண்ணிய முடையீர் போதுமி னீங்கென

–பெருங்கதை – 2.2(224-228)

மங்கல நீர் நிலை அதனைச் சுற்றிலும் யானையின் தந்தத்தினால் ஆகிய தூண்கள் நடப்பட்டு இரும்பு சட்டங்கள் இட்டுப் பாதுகாக்கப்பட்டது. அந்நீர் நிலையினை மாசுபடுத்துவோர் தண்டிக்கப்படுவர் என்று எழுதப்பட்ட கழறுகால்கள் வைக்கப்பட்டிருந்தன. மேலும் அந்நீர்நிலையின் மீது பறவைகளும் பறக்காமல் பாதுகாக்கப்பட்டது. அங்கிருந்து மங்கலநீர் கொண்டு வருவதற்கு கன்னிப் பெண்கள் ஆயிரம் பேர் பணிக்கப்பட்டனர். அவர்கள் அலங்கரிக்கப்பட்ட யானை மீது பல்வகை இசைக்கருவிகள் முழங்க ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

## முகூர்த்தம் குறித்தல்

பேரிய லாளர் பிழைப்பிலர் நோக்கி
வழுவில் செந்தீப் பழுதில வேட்கும்
பொழுதுமற் றிதுவெனப் புரையோர்க் குரைப்ப

-பெருங்கதை – 2.3(6-8)

சோதிடன் நாள் கோள் முதலியவற்றை மீண்டும் ஆராய்ந்து முழுத்தம் அதாவது முகூர்த்தம் நடைபெறும் பொழுதினை அனைவருக்கும் உரைக்கின்றான்.

## திருமண நிகழ்வு

வேதத்தினை முறைப்படி பயின்ற அந்தணன் பூக்களால் அலங்கரிக்கப்பட்டப் பந்தரின் கீழ் வெண்மணலைப் பரப்பி, முக்குழி அமைத்து முத்தீ வளர்க்கின்றான். ஆகவநீயம் என்ற தீயை வளர்க்க நாற்கோணமும், தெக்கணாக்கினி என்ற தீயை வளர்க்க முக்கோணமும், காருகபத்தியம் என்ற தீயை வளர்க்க வில்வடிவமும் கொண்ட முக்குழியை அமைத்து அந்தணன் முத்தீ வளர்த்தான்.

மணப்பந்தரானது, ஐ ஒன்பான் கால்களைக் கொண்டிருந்தது. அதில் தெய்வங்கள் உறைவதாக எண்ணி கால்கள் தோறும் முலைப் பாலிகைகளும் நிறைகுடமும் வைக்கப்பட்டன. கடிப்பன, நக்குவன, பருகுவன, மெல்லுவன, விழுங்குவன என்ற ஐவகை உணவுகளும் படைக்கப்பட்டன.

பந்தரின் வடகிழக்கு திசையில் அம்மி இடப்பட்டிருந்தது. அதன் பக்கத்தில் அரசாணி கொம்பு வைக்கப்பட்டிருந்தது. இதனை,

விசை யம்மிக் குணதிசைக் கோணத்
தீடமை பீடிகை பாடுபெற விருந்த
பொன்னயி ராணி முன்வயிற் பேணிப்
பன்னிய பனுவற் பார்ப்பன முதுமகன்

- பெருங்கதை – 2.3(27- 30)

என்கிறார் கொங்குவேள்.

பின்னர், தெய்வங்களுக்கு பால்சோறு, தேன்சோறு, புளிச்சோறு, கருப்பஞ்சாற்றில் சமைத்த சோறு, நெய்சோறு முதலியன விளையுயர்ந்த பொருட்களால் ஆன கிண்ணத்தில் படைக்கப்பட்டன. இதற்கு வலப்பக்கத்தில் பஞ்சவாசமும் வெற்றிலைப்பாக்கும் வைக்கப்பட்டன. சந்தனமும் மஞ்சளும் வைக்கப்பட்டன. முதுபெண்டிர் பந்தர்கால்களை வலம் வந்து, உழுந்து, நெல், உப்பு, மலர், வெற்றிலைப்பாக்கு, சந்தனம் ஆகியவற்றைக் கன்னிப்பெண்களிடம் கொடுத்து ஏழு முறை வணங்குங்கள் என்று திருமணப்பந்தலில் உறையும் தெய்வங்களை நீவீர், மலையிலோ, கடலிலோ, நிலத்திலோ, வானிலோ எங்கு உறைபவராயினும் வாசவதத்தையின் திருமணவழிபாட்டை ஏற்றுக்கொள்வீர் என வேண்டினர்.

வாசவதத்தையின் தோழி, காஞ்சனை மணமகனாகிய உதயணனின் அருகில் வாசவதத்தையை அமரச்செய்தாள். மாமுது பார்ப்பான் வேள்வித்தீயினை முறைப்படி வளர்த்தான். மணச்சடங்கின் முக்கிய நிகழ்வாக மணமகன் உதயணன் தன்கைகளாலே வாசவதத்தையின் சிற்றடியினைப் பற்றி, அம்மியின் வீது வைத்து தீயில் பொரியிட்டனர். இந்நிகழ்வின் போது இருநிகழ்வுகள் நடைபெறாததை எண்ணி வாசவதத்தை சினம் கொண்டால் என்கிறார் கொங்குவேள். பொரியிடுதல் என்ற சடங்கினை முன் நின்று செய்பவர்கள் மணமகளின் சகோதரர்கள். மைத்துனன் முறைகொண்டவர்கள் முதலில் மாலை மாற்றவேண்டும். பின்னர் மணமகளின் பெற்றோர் தாரை வார்த்துக் கொடுத்தல் வேண்டும். அதன் பின்னரே, மணமக்களைத் தீயின் முன் நிறுத்தி மைத்துனன் பொரிமுகம் தட்டவேண்டும். ஆண்டாளும் வாரணமாயிரம் திருமொழியில் பொரிமுகந் தட்டுவதைக் கனவாகக் கண்டதாகப் பாடுகிறாள். வாசவதத்தையை உதயணன் வலிந்து வந்து திருமணம் செய்து கொண்டதால் இந்நிகழ்வு முறைப்படி நடைபெறவில்லை என கோபம் கொள்கிறாள் வாசவதத்தை. கோபம் கொண்ட வாசவதத்தையின் கைகளை வலுவாகப் பற்றித்

தீயினை வலம் வந்தான் உதயணன். அடுத்த நிகழ்வு மணமகன் மணமகளுக்கு அறிவுரை வழங்குதல். உதயணனும்,

**மறுவில் காதன் மக்களைப் பெறுகென**
**முறைமையிற் பிழையாது முகிழ்விரல் பற்றித்**
**தகாஅக் காலந் தலைவரு மெனினும்**
**பகாஅக் காதலொடு பத்திமை......**

**பெருங்கதை** – 2.3(110- 113)

என அறிவுறுத்துகின்றான். பின்னர் தென் திசையில் பரப்பியிருந்த தர்ப்பைப் புல்லின் மீது அவளை நடக்கச் செய்து திருமண இருக்கையில் அமர்த்தினான். பின்னர் வடக்கு திசையிலிருந்த விடைத் தோலிருக்கையில் அமர்ந்து அருந்ததி காட்டினான்.

**வடபான் மருங்கிற் சுடர்மீக் கூரிய**
**கற்புடை விழுமீன் காணக் காட்டிய**
**பொற்றொடி நுதன்மிசைப் புனைவிரல் கூப்பி**
**மன்னிய வுலகினு ணின்னியல் பாக**
**என்வயி னருளென மும்முறை யிறைஞ்சுவித்து**

- **பெருங்கதை** – 2.3(125- 129)

இந்நிகழ்வு சூரியன் சிவந்த வானத்தில் மறைந்த பின் நிகமும் நிகழ்வாகக் கொங்குவேள் குறிப்பிடுகின்றார். அருத்ததியை நானும் உன்னைப் போல் கற்புடன் வாழ அருளல் வேண்டும் என்று மும்முறைவணங்கினாள் வாசவதத்தை.

திருமணம் முடிந்து மூன்று நாட்கள் கழிந்த பின் நான்காம் நாள் இரவு கட்டிலேற்றுதல் என்ற சடங்கு நிகழ்ந்தது. ஆறு திங்கள்கள் கழிந்த பின்னர் மீண்டும் முறைபடி மணவறை அமைகப்பட்டு மயிர் களைந்தது என்ற சடங்கு நிகழ்த்தப்பட்டது. பின்னர் மணமக்கள் நண்ணீரால் நீராட்டப்பட்டுத் தெய்வத்தினை வணங்கிய பின்னரே நகர் வலம் வந்தனர் எனப் பாடியுள்ளார் கொங்குவேள்.

வாசவத்தையின் திருமணத்தினை ஆறு பகுதிகளாகப் பாடிய கொங்குவேள் பதுமாவதியை உதயணன் மணந்ததை,

**நன்னுதன் மாதரை நாட்கடிச் செந்தீ**
**முன்முத விரீஇ முறைமையிற் றிரியா**
**விழுத்தகு வேள்வி யொழுக்கிய லோம்பிச்**

- **பெருங்கதை** – 3.22(271-273)

என்று தீ முதலியன வளர்த்து முறை திரியாமல் மணந்து கொண்டான் என்கிறார். அதே போல் மானனீகையை மணந்ததையும்,

**நான்மறை யாளர் நன்மணங் காட்டத்**
**தீவலஞ் செய்து கூடிய பின்றை**
**கூட்டமை தீமுதற் குறையா நெறிமையின்**

- **பெருங்கதை** –4.14(180-182)

தீ முறை குறைய நெறிமையின் என்கிறார். விரிசிகையை மணந்ததும்,

**வேட்டவட் புணர்ந்து வியனுல கேத்த**
**வதுவைச் செல்வமொடு வான்றோய் வியனகர்**

- **பெருங்கதை** – 4.17(113-114)

என வேள்வி வளர்த்தே. உதயணனின் மகனான நரவாணதத்தன் மதனமஞ்சிகையை மணம்முடித்ததையும்,

**விதியி னெய்தி விழவு முந்துறீஇப்**
**பதன்றிந்து நுகருமாற் பண்புமிகச் செறிந்தென்**

- **பெருங்கதை** – 5.8156-157)

என விதியின் எய்திய விழவு என்கிறார் கொங்குவேள்.

பழந்தமிழர் திருமண முறையில் தீவளர்த்து வேள்வி செய்தல் என்ற சடங்குகள் இடம் பெறவில்லை. பின்னர் தோன்றிய மரபே தீ வளர்த்தல். மங்கல நீராட்டுதல், மணப்பந்தர் அமைத்தல் போன்ற சடங்குகள் மட்டுமே சங்க காலத் திருமண முறையில் பின்பற்றப்பட்டுவந்துள்ளன.

எனினும் மங்கல அணி என்னும் தாலி அணிதல் பெருங்கதையில் எங்கும் கூறப்படவில்லை. வடமொழியில் குணாட்டியர் எழுதிய நூலை முதல் நூலாகக் கொண்டிருந்தபோதும் பெருங்கதையில் மங்கல அணி இடம் பெற வில்லை. ஆனால் சிலம்பில் மங்கல அணி என்னும் வழக்கு மங்கல வாழ்த்துப்பாடலிலும், மனையறம் படுத்த காதையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மங்கல என்ப மனைமாட்சி என்ற திருக்குறளுக்கு உரைகூறும் வ.உ.சியும் தண்டபாணி தேசிகரும் மங்கலம் என்ற சொல்லிற்குத் தாலி என்றே பொருள் தருவதையும் இங்கு கவனத்தில் கொள்ளல் வேண்டும். ஆனால் இன்றும் தெலுங்கு பழங்குடிகள் சிலரிடமும், மலையாளம், கன்னடம், துளு மொழி பேசுகின்ற சில இனத்தாரிடமும் மங்கல அணி அணிதல் என்ற திருமணச் சடங்கு இல்லை.

மங்கல நீராட்டல், மணப்பந்தல் அமைத்தல், தெய்வம் பரவல் போன்ற சடங்குகள் இருந்தமை புலனாகும். பெருங்கதையில் பந்தல் நாற்பத்தைந்து

கால்கள் கொண்டதாக அமைக்கப்பட்டு அவிப்பலி தரப்பட்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சடங்கில் தமிழர் வழக்கில் இல்லாத உளுந்தினைத் தூவுதல் கூறப்பட்டுள்ளது. தமிழர் வழிபாட்டுமுறையில் நெல்லும் மலரும் தூவி வழிபடும் வழக்கம் உள்ளது. ஆனால் பெருங்கதையில் உளுந்தும் உப்பும் சந்தனமும் மஞ்சளும் தூவி வழிபட்டதாகப் பாடுகிறார் கொங்குவேள். திருமணச் சடங்கில் இன்றும் சில இனத்தாரிடம் உப்பும் மஞ்சளும் வெற்றிலைப் பாக்கிற்குப் பதில் மாற்றிக்கொள்ளும் வழக்கம் உள்ளது இங்கு நோக்கத்தக்கது. திருமணச் சடங்கில் வெற்றிலையும் முக்கிய பங்கு வகித்துள்ளது. எனினும் திருமணம் முடிந்து ஆறாம் திங்களில் நிகழ்த்தப்பெறும் மயிர்களைதல் சடங்கு திருமணத்துடன் தொடர்புடையதா அல்லது முடிசூட்டலுடன் தொடர்புடையதா என்பது ஆய்வுக்குட்பட்டதே. மேலும் பிற இலக்கியங்களில் அருந்ததி காட்டல் என்ற சடங்கு சுட்டப்பட்டுள்ளது. அம்மி மிதித்தல் என்ற சடங்கு பெருங்கதையிலும், நாச்சியார் திருமொழியிலும் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. நாச்சியார் திருமொழியிலும் அரசாணிக் கொம்பு வழிபாடு குறித்த செய்திகள் இல்லை. ஆனால் பெருங்கதையில் திருமணத்தில் அரசாணிக் கொம்பு குறிக்கப்பட்டுள்ளது. பெருங்கதை வடமொழியை மூலநூலாகக் கொண்டிருந்தாலும் அக்கால மக்களின் திருமண மரபையும் வழக்காறையும் உள்ளடக்கிய பெட்டகம் என்றே கருதலாம்.

## துணைமை நூல்கள்


1. சிலம்பொலி செல்லப்பன், பெருங்கதை ஆராய்ச்சி, அருணோதயம், சென்னை- 14 பதிப்பு-1976
2. சிலம்பு நா.செல்வராசு, தொல்தமிழர் திருமண முறைகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில். பதிப்பு -2016
3. பெருங்கதை, விக்கி மூலம்
4. பெருங்கதை, மின்னூல், தமிழ் இணைய வழி பல்கலைக் கழகம்


●


கட்டுரையாளர்: உதவிப்பேராசிரியர்,
தரும்மூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன்செட்டி
இந்துக்கல்லூரி, பட்டாபிராம், சென்னை-72




9.08.2025 அன்று ஈரோடு புத்தகத் திருவிழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி இஆப அவர்களின் 'அகநக வெண்பா விருந்து' நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவரும் 'உங்கள் நூலகம்' இதழின் ஆசிரியருமான த.ஸ்டாலின் குணசேரன் வெளியிட்டார். தமிழ் வளர்ச்சித் துறை இணை இயக்குநர் வெ.ஜோதி முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். தேனி-நவாய தமிழ் சங்க நிர்வாகி முனைவர் ச.ந.இளங்குமரன் திருச்சி தேசிய கல்லூரி பேராசிரியர் முனைவர் சே.பத்மினி பாலா, சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார் ஆகியோர் நூல் அறிமுக உரையாற்றினர். எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன் முன்னிலை வகித்தார்.

ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரும் நூலாசிரியருமான ச.கந்தசாமி இஆப அவர்கள் ஏற்புரை நிகழ்த்தினார். இவரால் எழுதி வெளியிடப்படும் மூன்றாவது நூல் இது. மரபுக் கவிதையில் சிறந்த விற்பன்னரான நூலாசிரியரால் எழுதப்பட்ட வெண்பாக்களின் தொகுப்பு. முன்னதாக கோரல் பப்ளிஷர்ஸ் சார்பில் துரைராஜ் வரவேற்புரையாற்றினார்.

கட்டுரை

# திருக்குறள் நபிமொழி மாலை காட்டும் பெண்

முனைவர் ம. நூர்ஜஹான்
ஆ. யாஸ்மின்

## திருக்குறள்


மனித சமுதாயம் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் எனத் திருவள்ளுவர் தொகுத்துத் தந்துள்ள கருத்துகள், காலந்தோறும் தமிழர் வாழ்க்கையைச் செம்மையாக்கிட முயன்றுள்ளன. திருக்குறள் தமிழர் நலன்களை முன்னிறுத்துகிறது. சமூகத்தில் பெண்களின் நிலை மதிப்பீடு குறித்த கருத்துக்கள், அற நூல்களில் இடம் பெறுகின்றன.திருக்குறளில் ஒழுக்கம், பொறுமை, அன்பு, நட்பு, பிறர்மனை நயவாமை, கல்வி போன்ற அனைத்தையும் காணமுடிகிறது.

## நபிமொழி மாலை

சராசரியான மனிதர் முயன்றால் அன்றாட வாழ்க்கையில் பின்பற்ற முடிகின்ற ஒழுங்குகளைவெளிப்படுத்துகிறது. நபிமொழி மாலை திருக்குறளைப் போல இரண்டு அடி கண்ணிகளால் ஆனது.

## இல்லற வாழ்வு

இல்லற வாழ்வில் மனைவி செய்யும் செயல்களை நபிமொழி மாலை எடுத்துரைக்கிறது. திருக்குறளில் வாழ்க்கைத் துணைநலம் எனும் அதிகாரம் இடம் பெற்றுள்ளது. இல்லற வாழ்வில் மனைவி முக்கியப் பங்காற்றுகிறாள். ஆணுக்குள் அடங்கி நடக்கின்ற வாழ்வு தான் பெண்ணுக்கு அழகானது. அவர்கள் தான் சிறந்த பெண் ஆவாள். குடும்பத்திற்கு மட்டுமின்றி சுற்றத்தையும் காக்கும் தன்மை பெண்களிடம் இருந்தது.“தகுதி



வாய்ந்த இல்லத் தலைவியையுடைய இல்லமே நல்லில்லமாக அமைதல் கூடும்'' என கா.அப்துல் கபூர் கருதுகிறார். மனைவியிடத்து இல்லறத்தை நன்கு நடத்தும் இயல்பு இல்லாவிடின் அவன் வாழ்க்கை செல்வம் முதலிய நலன்களைப் பெற்றிருப்பினும் பயனில்லை என்றும் மனைவி சிறந்தவளாக இருந்தால் இல்லத்தில்செல்வம் முதலியன ஒன்றும் இல்லா விடினும் யாதும் உள்ளது போலாகுமென்றும் அவள் சிறந்தவளாக வாய்க்கவிடின் பிற வளங்களனைத்தும் இருப்பினும் யாதுமில்லாதது போலாகும் என்று கூறுகிறார். இதனை,

**மறைவிடம் காப்பதில் கருத்தூன்றி**
**மனத்தைப் பேணிக் கணவன்பால்**
**நிறைவுடன் அன்பைச் செலுத்துபவள்**
**நிறைந்தவள் என்பது நபிமொழியாம்** (பா-219)

என்ற அடிகளில் காணலாம். இல்லத் தலைவியிடம் சிறப்பாக வேண்டப்படும் பண்புநலம் கற்பே. கற்பு அவளுக்கு கணவன் நலத்தையும் குடும்ப நலத்தையும் பேணுவதில் உறுதி நல்குகிறது. இவ்வாறு கற்புடைய பெண்ணின் சிறப்பைப் பற்றி அப்துல் கபூர் கூறுகிறார்.

அன்பின் மிகுதியினால் எப்பொழுதும் தன் கணவன் நினைவாகவே இருக்கும்பெண் துயிலெழும் போதும் அவன் நினைவாகவே எழுவாள் என்று குறள் கூறுகிறது. தெய்வத்தை தொழாது கணவனை வணங்கியெழும் பெண், தன் கணவனுக்கு தன் குடும்பத்திற்கு சமுதாயத்திற்கு வேண்டிய போது பெற்ற மழையைப்போல் பயனுள்ளவள் ஆவாள். திருக்குறள் இதைத்

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்**
**பெய்எனப் பெய்யும் மழை** (குறள் 55)

என்று வற்புறுத்துகிறது. குடும்ப அமைப்பை காக்கும் குறளும் நபிமொழிமாலையும் பெண்சித்தரிப்பை எடுத்துரைக்கின்றன. சமயநெறிக்கு உட்பட்டே இரண்டும் அமைகின்றன.

## கற்புடைய பெண்

இல்லறத்தில் கணவன் மனைவியை இல்லறத்தை விட்டு வெளியே செல்லலாகாது எனத் தடை செய்யும் முறையை திருவள்ளுவர் விரும்பவில்லை. அத்தகைய சிறை காக்கும் காவலால் பயனில்லை மகளிர் தம் நிறையால் தம்மைக் காத்துக் கொள்ளுதலே சிறப்பாம். மேலும் பெண்கள் படித்தால் அவர்களுடைய கல்வியே கற்புக்குக் காவலாக இருக்கிறது என்கிறார். திருவள்ளுவர்

**சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை.** (குறள் 57)

என்று கூறுகிறார்.

சிறை என்பதை நாட்டில் அரசர் குற்றவாளிகளைக் காவலில் வைக்கும் முறையை குறிப்பதாகக் கொண்டு நாட்டில் குற்றம் நிகழாமல் காப்பதற்கு அரசர்கள் குற்றம் புரிவோரை சிறையிலிட்டு காவல் செய்வது மட்டும் பயன்தராது. நாட்டில் அறப்பண்புடைய மகளிரே குற்றம் நிகழாமல் தடுக்கக் கூடியவர் என்கிறார் அப்துல் கபூர்.

பெண்கள் மறைவாய் இருந்திடுவீர் பேணா தேகின் சைத்தானும்

**கண்கட் கழகை மிகுத்திடுவான்**
**கடமையுணர்த்தும் நபிமொழியாம்.** (பா.214)

என்று கூறுகிறார்.கணவன் பார்க்கத் தன்னை அழகுபடுத்திக் கொள்வதே அல்லாது மற்றவர் பார்க்கத் தன்னை அழகுபடுத்திக் கொள்ளாள். கற்பே உயிரினுஞ் சிறந்தது. உலகத்தில் பிற பெண்களைக் கெடுக்கச் சூழ்ச்சி செய்கிற ஆடவர்களும் இருக்கின்றாராகையால் பெண்கள் தகுந்த துணையில்லாமல் ஒருபோதும் தனிமையாயிருக்கத் தக்கவர் அல்லர். உயிர் போனாலும் கற்புநிலை தவறுவதில்லை என்ற மன உறுதியோடு இருக்க வேண்டும். எல்லா ஆண்களுக்கும் மேலான சிறந்த ஆண்களும் மேலான பொருளுமான கடவுளுடைய கட்டளை எல்லாவற்றிற்கும் மேலானது ஆகையால், அந்தக் கட்டளைக்கும் அறத்துக்கும் மாறுபாடில்லாமல், ஆண் சொல்லுகிற எல்லா நன்மைதரும் கட்டளைக்கும் மனைவி கீழ்படிய வேண்டியவளாள். அரசனுடைய கட்டளைக்கு மக்கள் எப்படி உட்பட வேண்டியவர்களோ அப்படியே. ஆண்களுக்கு அடங்கி அவனுடைய மன விருப்பப்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறாள் என்கிறார்.இஸ்லாம் பெண்கள் வெளியே செல்வதை தடை செய்கிறது. திருவள்ளுவர் பெண்களைச் சிறை காக்க வேண்டாம் என்கிறார். கா.அப்துல் கபூர் பெண்கள் வெளியே வருவதை மறுக்கிறார்.

## பெண்ணுரிமை

அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும். பெண் பிறவி அடுப்பூதல் முதலிய வேலைகட்கும் பயன்படுத்துதல் அறியாமை. தாய்மையுடைய

பெண்ணிற்கு முதன்மை வழங்க மறுப்பது அநாகரிகம். எல்லாவற்றிலும் முதன்மை பெற்று விளங்கும் பெண்ணிற்கு உரிமை வழங்க வேண்டும். உரிமை என்பது ஒருவர் கொடுப்பதன்று. மற்றொருவர் வாங்குவதுமன்று. ஒருவர் உரிமைக்கு மற்றொருவர் கேடு சூழ்வது பெரிய பாவம். பெண்மை என்பது அநாதியாக முழுமுதற்பொருளின் ஒரு கூறாயிருப்பது பெண் உலகம் ஒரு தெய்வீகமானது.

வள்ளுவரின் ஆண்பெண் பாலுறவு குறித்தப் பார்வை காமத்துப்பாலில் துல்லியமாக வெளியிடப்பட்டுள்ளது. முழுக்க ஆணின் மொழியிலமைந்த பிரதியாகக் குறள் அமைகிறது ஆண் மையப்பாலியலைச் சார்ந்தது. ஆணின் பாலியல் வேட்கை மட்டுமே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. பெண் தனக்கான பாலியல் விழைவை அடைதல் கூறப்படவில்லை பெண் எனப்படுபவள் ஆணினால் அறிந்து கொண்டு அனுபவிக்கப்பட வேண்டிய பொருள் என்று ஆணின் பாலியல் தொழில் நுட்பமாக அவள் மாற்றப்படுகிறாள். இத்தகைய ஆண்மையப் பார்வைதான் எல்லா வகையான பாலியல் அத்துமீறல்களுக்கும் வன்முறைக்கும் அடித்தளமாகும். பெண்ணுடலைப் போகப் பொருளாக மாற்றித் துய்ப்பிற்கான தளமாக்கிறார் வள்ளுவர். பெண்ணின் உரிமை கொள்ளும் அதிகாரத்தையும் அறத்தின் பெயரால் ஆணுக்கு வழங்குகிறார். இதனை

**இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்**

**திருநீக்கப் பட்டார் தொடர்பு (குறள் 920)**

என்ற குறளால் அறியலாம்.

**ஈனம் செறியும் கற்பழிவுக் கென்றும்**

**நெருங்கிச் செல்லாதீர்**

**மானம் போற்றும் நெறிதந்த மாண்பார்**

**மன்சூர் நபிமொழியாம். (பா.353)**

என்று அப்துல் கபூர் கூறுகிறார். பெண்களுக்குச் சார்பான அறக்கருத்துக்களை கா.அப்துல் கபூர் முன்னிறுத்துகிறார். ஒருவன் கெட்ட நடத்தையுடன் நடந்து கொண்டால் அவனுக்கு செல்வம் என்பது நில்லாது போய்விடும் என திருவள்ளுவர் கூறுகிறார். அவ்வாறே அப்துல் கபூரும் ஒருவன் விபச்சாரம் செய்தால் அவனுடைய நற்செயல்கள் யாவும் அழிந்துவிடும் என்று கூறுகிறார். இருவருடைய கருத்தும் ஒன்றுபட்டு நிற்கின்றன.

## திருமண வாழ்வு

ஒரு பாதியான பெண்ணும் மற்றொரு பாதியான ஆணும் ஒன்றுபடுவது திருமணம். மக்களின் இயற்கை அமைப்பை நோக்கினால் அவர்கள் தனித்து வாழும் இயல்பினரல்லர். மக்கள் கூடிவாழும் இயல்பினரேயாவர். அக்கூட்டை நிகழ்த்துவது திருமணம். திருமணம் என்பது வெறும் விளையாட்டன்று. ஒவ்வொரு பாதியாய் வளர்ந்து வரும் இரண்டு உயிர் ஒன்றி முழுத்தன்மை எய்திக் கடனாற்றப் பிணிப்பது திருமணம். உலகியல் வழிநின்று பெண் ஆண் ஒருமைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

இஸ்லாமிய வாழ்வியலில் பெண்கள் பேசுவதற்கு வரைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. குழந்தைப் பருவத்தில் மகிழ்ந்து தெருவில் விளையாடும் சிறுமியாக இருந்த பின் தன்னுடைய பெற்றோரின் விருப்பத்தின் பேரிலே திருமணமானது நடைபெறுகிறது. திருமணத்திற்குப் பிறகு பொறுப்புள்ள குடும்பத் தலைவியாக மாறுகின்றாள். குடும்பத்தின் நல்லொழுக்கங்ளைப் போற்றி பின்பற்றி நடக்கின்றாள். திருமணம் செய்து கொள்ளுங்கள் அதோடு நில்லாமல் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் அதுவே வாழ்க்கை முழுமைக்கும் உதாரணமாகும். குடும்பத்தைப் பெருக்கிடுங்கள் அதனால் பெரும் மகிழ்ச்சியடைந்து உங்கள் பின் தொடர்வேன் என்று நபிகள் கூறுகிறார் இதனை வள்ளுவரும்,

*மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்*

*நன்கலம் நன்மக்கட் பேறு (குறள் 60)*

என்கிறார்.

திருக்குறள் பெண்களுக்குச் சார்பான அறக்கருத்துக்களை முன்னிறுத்துகிறது என்ற நம்பிக்கை தமிழரிடையே உள்ளது. கா.அப்துல் கபூர்

**திருமணம் செய்வீர் குழந்தைகளைத்**

**தருவீர் எண்ணால் பெருகிடுவீர்**

**பெருமித மடைவேன் அதனால்யான்**

**பின்தொட ரினரால் – நபிமொழியாம் (பா-222)**

என்று கூறுகிறார்.வாழ்வுக்கு அழகாவது அணியாவது மனைவியின் புகழத்தக்க குணமே. அத்தகைய புகழத்தக்க குணத்துக்கும் பெருமை போற்றுதற்குரிய நல்ல குழந்தைகளைப் பெறுதல் இதன் மூலம் நபிமொழி மாலையின் கருத்தும் திருக்குறள் செய்தியும் கருத்தாகின்றன.

## பிறன்மனை நயத்தல்

பிறன்மனை நயத்தல் கூடாது என வலியுறுத்துகின்ற குறள்கள் தனிமனித ஒழுக்கம் என்ற நிலையில் அமைந்துள்ளன. திருவள்ளுவர்

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு** (குறள் - 148)

என்று கூறுகிறார்.

பிறன்மனை நயத்தலை திருக்குறள், நபிமொழி ஆகிய நூல்கள் எடுத்துக்கின்றன. இவ்விலக்கியங்கள் பிறன்மனை விழைவால் ஏற்படும் சமூகக் கேட்டைப் பதிவு செய்துள்ளன. அவ்வகையில் திருக்குறள் நபிமொழி இவை பிறன்மனை விழைதலால் ஏற்படும் தீமைகளைக் கூறுகின்றன. திருக்குறளில் பிறனில் விழையாமை எனும்அதிகாரம் இடம்பெற்றுள்ளது. இதில் அறம்,பொருள், இன்பம் ஆகியவற்றை அறிந்தவர். பிறர் மனை நோக்காதிருப்பர். இக்குறளில் பிறர் மனைவியை நோக்காதிருக்க வேண்டும் என்ற கருத்து மையமாக உள்ளது. அப்துல் கபூர்

**மனைவியைப் பகலில் துன்புறுத்தி**
**மகிழ்வாய் இரவில் நேசிப்போர்**
**மனித இயல்பின் எதிராவார் மனதிற்**
**கொள்வீர் நபிமொழியாம்** (பா - 218)

என்று கூறுகிறார்.

ஆணுடலைக் காட்டிலும் பெண்ணுடல் இழிவானதாகும். பெண் எனப்படுபவள் பொதுச் சமூகத்தில் ஆணினால் அறிந்து கொண்டு அனுபவிக்கப்பட வேண்டிய பொருள் என்று உள்ளது. பால் வேட்கையானது ஆணின் பாலியல் தொழில் நுட்பமாக மாற்றப்படுகிறது. பெண்ணை முன்னிலையாக்கி கூறியிருப்பது பெண்ணுடல் மீது இருக்கும் ஆசையை அகற்றுவதற்கே ஆகும். பெண் மீது கொள்ளும் காமமின்மையை முதன்மைப்படுத்தியே இருவரும் கூறயிருக்கிறார். காமத்தை அழிக்கவும் உடல்மேலிருக்கும் பற்றைப் போக்கவும் பெண்களின் உடல் தீமைக்குரிய குறியீடாகவும் இழிவானதாகவும் வள்ளுவர் கூறுகிறார்.

## முடிவுரை

திருக்குறளும், நபிமொழி மாலையும் உரைக்கின்ற பெண் வாழ்வியல் சிறப்பியல்புகள் பல. இல்லற வாழ்வு பற்றியும், ஆண் பெண் உள்ள உணர்வுகள் இங்கு ஆராயப்பட்டன. சில கருத்துக்கள் ஒன்றோடொன்று தொடர்புடையதாய் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலிலும் பெண்களின் மனஓட்டம் காணப்படுகிறது. இல்லற வாழ்வு, பெண்ணுரிமை, திருமண வாழ்வு இவற்றில் பெண்ணை முதன்மைப்படுத்தினாலும் அப்துல் கபூரும் திருவள்ளுவரும் ஆணாதிக்கத்தை உயர்த்திப் பெண்களை அடிமைப்படுத்தும் கருத்துகளை முன்வைக்கின்றனர் என்பதை இக்கட்டுரை முன்வைக்கிறது. திருக்குறள் உருவாக்கியுள்ள பெண் பற்றிய மதிப்பீடுகள் இன்றைக்கும் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன, கா.அப்துல் கபூர் கணவன் மனைவி இருவருக்கும் இடையில் நிலவ வேண்டிய உறவு பற்றி பெண்களுக்கு மட்டும் அறிவுரை வழங்குகிறார் என்பதையும் அறிய இயன்றது.

## துணைநூற்பட்டியல்


1. பாமாலை-18 கா.அப்துல் கபூர், பொன்மொழிப் பதிப்பகம்,14-69A, மேட்டுக்கடை, தக்கலை-629175
2. திருக்குறள் பரிமேலழகர் உரை, ராம் பிரசுரம் 18, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை.
3. பெண்கல்வி வேதநாயகம்பிள்ளை 1978, திருநெல்வேலி. தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்,79 பிரகாசம் சாலை, சென்னை-1
4. பெண்ணின் பெருமை (அ) வாழ்க்கைத் துணை, கலியாண சுந்தரனார், பாவை பப்ளிகேஷன்ஸ் 142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.
5. குறள் கூறும் சமுதாயம், காமாட்சி ஸ்ரீனிவாசன், மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை – 625 021 பதிப்பு -1975.


●


**கட்டுரையாளர்கள்:**

**நெறியாளர்: முனைவர் ம. நூர்ஜஹான்,**
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தன்னாட்சி, (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி- 620 023

**ஆய்வாளர்: ஆ. யாஸ்மின்,**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), தமிழாய்வுத்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தன்னாட்சி, (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி -620 023



Article


# Reflection of 'Socialism'
## in Tho. Paramasivan and A.Sivasubramanian's : Panpatin valvial


Dr.S.Balasundari

**Introduction**

From the Period of 300 BCE and 200 CE Tamil language with the widened territory the frequent space of Sangam Tamils was demarcated. Tamil language identity people who had scattered as several divergent ethnic tribes and communities in vast land Some one leading from inakkulut talavivan (a chief of an ethnic tribe) to kurnila mannan ( a chieftain lord of a small region) and then vendan( a king / emperor) the Process of ascendance to sovereign power was associated with political power. The conquered king was well documented in puram poems.

Man had privilege in society with categories viz.kudi(family/clan/tribe) winning women by romantic love in interior life and conquered land by war in the exterior life it was the hallmark of man. Violence seized the by other ethnic groups. Women's body becomes the grazing field in the interior domain. Sangam literary text was framed land and woman were the subject under the control of man. Although valour image of woman in sangam poems were noted.




The women's place is first in social institution called family. Woman gives more important in-law's family than her kingsfolk and the social milieu of the day strongly tried to draw the woman in established as family demarcate every activity of hers. Tho. Paramasivan's Panpatin Valvial and A. Sivasubrmaniyan's Pandaya Tamilsamugathin Iranthor Valipadum Munnor Valipadum, In sangam literature referred in two places as valour image of woman are mentioned about wavering women as in paruthipendu as the poem of purananuru

**Paruthipendin panuval Anna (Purananuru : 125)**
**Paruthipendin siruthee valakathu**

**(Purananuru: 326)**

Sangam literature notes also mentioned' wavering' the occupational only to offering widow woman alone. During the night time woman are doing this wavering meticulous work now itself. Thread as meaning of panuval it's wearing by Brahmin and also stated as a form of grammar in sastras it gives a high status it express social hierarchy and contradiction.

Recent times before the fifteen years some of the Rituals are followed by the Coimbotre district those who are in widow in the family their relatives are throw it away white wavering saris to the woman another rituals are in same district Those who are brother of widow women he must be say in 'kolan kodutha katheir irruku koari natu panchu iruku nooru vasikum nutruupilachiga ' we can see the valor image of women and there is no space her in the family and also mentioned that korai pull or panjkorai pai (mat is made from the long grass) it used for sleeping and other purposes Nelai district certain clan of people made this kinds of grass mat it mentioned in sangam literature as 'Sai' in Marthatheni Padal .

A women prays to the nadukal (memories stone) for the safe return of her husband who went war.


**Kaliruporak kalangu kalalmul veli**
**Aridun kuval ankudic cirur**
**Olimen kundal onnudal arivai**
**Nadukal kaitoludu paravum odiyadu**

**(Purananuru 306)**

The poem under the category of mudin mullai ( the women from the ancient pastoral line) express the mental state of the warrior tribe women affected due to wars. Allur Nanmullaiyar poem reveals that war was inevitable in the societal life of the day; the woman had no option but to ask her husband to win on the battlefield.

In one puram poem it is documented that intending to save injured warriors women applied ointment to their wounds caused on the battlefield. In memory of kings or warriors who died on battlefield, women poets glorify their heroic deeds and by reciting elegies. It is worth mentioning that no one has composed/sang a bereavement poem /lyric in memory of the deceased relatives. In the milieu of the Sangam period in which the death of a man was expected to be heroic the death




of a woman caused musch grief to a man. His intense bereavement was exhibited in the language which shows his deep grief-stricken condition. Needless to say the pains that cause personal loss is profound.

Yangupperi dayinum noyala venaittte
Uyirceguk kalla madugaittu anmaiyin
Kalli pogiya kalariyam parantalai
Vellidaip pottiya vilaiviragu imattu
Ollalar pallip payal certti
Jnangar mayndanal madandai
Innum valval ennidan panbe!(purananuru 245)

In the cremation ground's open space on the salty land with Kalli (cactus/milkwood) plants, I placed the body of my young woman on a bright flame bed. Alas! I am still alive without killing myself. This was utterance of the man, deceased of his beloved wife which underscores the societal value of the woman. the ceraman Kottambalattur Tunciya Makkodai's poem shattered the misconception that a man does not grieve any tragedy and exhibited a hear-wrenching tribute to the deceased woman.

This records found in the Sangam poetry about the plight of a woman who lost her husband, are very significantly. The loss of a man in the establishment called family causes inestimable damage to everyone in the family especially to his wife whose survival becomes shocked.

### Conclusion:

There was no option for a woman but to pray for her husband to return home safely with victory after a war. The bereavement of a husband's emotion on the demise of his wife has been accounted for in one puram poem. The social life of a woman who lost her husband is dreadful There existed such a milieu that made think that it was better to die with a dead husband than lead the painful widowhood life. To a woman, the death of the father, husband and son on the battlefield meant emotional distress on one hand and ruined the economic front on the other. There was no distinctive identity for the woman in socio-poltical milieu wherein woman's individualistic functioning power was denied.

### References:

1. Tho.Paramasivan Panpatin Valiviyal, New Century Book House, Chennai (P) 2023.
2. A. Sivasubramanian Pandaya Tamilsamugathil Iranthor Valipadum Munnor Valipadum, New Century Book House, Chennai (P) 2023.
3. A. Sivasubramanian Kalathaiventra Mavererkal, New Century Book House, Chennai (P) 2023.
4. Voices of Sangam Woman Poets in Puram Poetry, Ungal Noolagam, Tamil Magazine, April 2014.
5. Exploring Dalit Consciousness and Resistance in Meenakandasam's Poem Touch Ungal Noolagam, Tamil Magazine, January 2025.
6. N. Murugesapandian, Govindaswamy Rajagopal(Tr) Re-Reading of Classical Tamil Literary works Chronicles of Ancient Tamils' Life Discovery Publication 2021.


●


**Professor & Head, School of English and Foreign Languages, P.Lakshmanan - Ph.D Research Scholar, The Gandhigram Rural Institute-(DTBU), Gandhigram, Dindigul.**

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்

வெளியீடாக

ப.கு.ராஜன் எழுதிய




புரட்சியின் பொருள்

வரலாற்று மாற்றங்களின் பொருளியல் அடிப்படை

(தொகுதி 1)

ரூ.1250/-

புரட்சியின் பொருள்

வரலாற்று மாற்றங்களின் பொருளியல் அடிப்படை

(தொகுதி 2)

ரூ.1200/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in

கிளைகள்

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.



Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam** at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.**, 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**


New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No. TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication 1-7th of every month Posted at Egmore RMS, Patrika Channel, chennai - 08
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





(2 தொகுதிகள்)

ரூ 1000/-





(12 தொகுதிகள்)

ரூ 4275/-





(10 தொகுதிகள்)

ரூ 1000/-





(4 தொகுதிகள்)

ரூ 1750/-




ரூ 600/-




ரூ 470/-

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in